**பி.லிட்., தமிழ் (முதலாண்டு)**

***DJL13 :*** **தாள் - 2 இலக்கணம் 2**

**1.யாப்பு நூல் 2.அணி நூல்**

**பாடங்கள் 1-20**

## பொருளடக்கம்


| எண் | பாடங்கள் | பக்க எண் |
|---|---|---|
| 1. | பாடம் 1: செய்யுள் உறுப்புகள் | |
| 2. | பாடம் 2: அசை, சீர் | |
| 3. | பாடம் 3: தளை, அடி, தொடை | |
| 4. | பாடம் 4: வெண்பாவின் வகையும் இனமும் | |
| 5. | பாடம் 5: ஆசிரியப்பாவின் வகையும் இனமும் | |
| 6. | பாடம் 6: கலிப்பாவின் வகையும் இனமும் | |
| 7. | பாடம் 7: வஞ்சிப்பாவின் வகையும் இனமும் | |
| 8. | பாடம் 8: மருட்பா | |
| 9. | பாடம் 9: தண்டியலங்காரம் - செய்யுள் வகைகள் | |
| 10. | பாடம் 10:தண்டியலங்காரம் - செய்யுள் நெறிகள் | |
| 11. | பாடம் 11:தண்டியலங்காரம் - தன்மை அணி, உவமை அணி | |
| 12. | பாடம் 12:உருவக அணி, தீவக அணி, பின்வருநிலையணி | |
| 13. | பாடம் 13:முன்ன விலக்கு அணி, வேற்றுப் பொருள் வைப்பணி | |
| 14. | பாடம் 14:வேற்றுமை அணி, விபாவனை அணி, ஒட்டணி, அதிசய அணி | |
| 15. | பாடம் 15:தற்குறிப்பேற்ற அணி, ரது அணி, நுட்ப அணி | |
| 16. | பாடம் 16:இலேச அணி, நிரல்நிறையணி, ஆர்வமொழி அணி, சுவையணி | |
| 17. | பாடம் 17:தன்மேம்பாட்டுரை அணி, பரியாயஅணி, சமாயித அணி, உதாத்த அணி | |
| 18. | பாடம் 18:அவநுதி அணி, சிலேடை அணி, விசேட அணி, ஒப்புமைக் கூட்ட அணி | |
| 19. | பாடம் 19:விரோத அணி, மாறுபடு புகழ்நிலை அணி | |
| 20. | பாடம் 20:புணர்நிலை அணி, பரிவருத்தனை அணி, வாழ்த்தணி, சங்கீரண அணி, பாவிக அணி | |

# யாப்பருங்கலக்காரிகை – நூல் அறிமுகம்

உலக மொழிகளுள் ஒப்பற்ற மொழியாக விளங்குவது தமிழ்மொழி, இதற்கு இரு கண்களாக இலக்கியமும் இலக்கணமும் திகழ்கின்றன. இத்தமிழ்மொழியின் இலக்கணம் தொடக்கத்தில் எழுத்து, சொல், பொருள் என மூன்றாகப் பாகுபடுத்தப்பட்டது. பின்னர் யாப்பு, அணி என ஐந்தாக விரிவடைந்தது. இவ்வைந்தையும் தொகுத்தும் தனித்தும் விளக்குகின்ற நூல்கள் பல. அவற்றுள் செய்யுள் இலக்கணமாகிய யாப்பைப் பற்றித் தனித்துப் பேசுவது யாப்பருங்கலக்காரிகை என்னும் நூலாகும். இது யாப்பு நூல்களுள் தலை சிறந்ததாகப் போற்றப்படுகிறது. தமிழ் இலக்கணத்தைத் தொல்காப்பியத்தின் வழி இனிதென விரும்பிக் கற்போர் பலர். அவர்கள் அனைவரும் செய்யுள் இலக்கணத்தை யாப்பருங்கலக்காரிகையின் துணை கொண்டே அறிய விரும்புவர். அத்தகு சிறப்பு வாய்ந்த இந்நூல், தோன்றிய காலம் முதலாக இன்றுவரை தனக்கெனத் தனித்ததோர் இடத்தைப் பெற்றுள்ளது.

## யாப்பருங்கலக்காரிகை – பெயர்க்காரணம்:-

யாப்பருங்கலம் என்னும் நூலுக்குத் துணை [சார்பு] நூலாக எழுதப்பட்டதே யாப்பருங்கலக்காரிகை ஆகும். காரிகை என்பதற்குக் கட்டளைக் கலித்துறை என்பது பொருளாகும். யாப்பு பற்றிய விதிகளைக் கட்டளைக் கலித்துறையால் எடுத்துரைப்பதால் இந்நூல் யாப்பால் (பாவகையால்) இப்பெயர் பெற்றது. பெண்ணாகிய காரிகையை முன்னிறுத்திப் (மகடூஉ முன்னிலை) பேசுவதால் இப்பெயர் பெற்றது எனப் பொருள் கூறுவது பொருந்தாததாகும். யாப்பாகிய பெரிய கடற்பரப்பைக் கடப்பதற்கு ஒரு மரக்கலம் போன்றது; யாப்பினைப் பற்றி எடுத்துரைக்கும் நூல்களுள் அரிய அணிகலன் போன்றது என யாப்பருங்கலக் காரிகை என்னும் பெயருக்குப் பொருள் கூறுவர்.

## நூல் அறிமுகம்:-

இந்நூல் உறுப்பியல், செய்யுளியல், ஒழிபியல் என்னும் மூன்று இயல்களையும் 44 காரிகைகளையும் கொண்டுள்ளது. செய்யுளின் உறுப்புகளைப் பற்றிக் கூறும் முதல் இயல் 20 காரிகைகளைக் கொண்டுள்ளது. செய்யுளின் வகைகளையும் இனங்களையும் விளக்கும் செய்யுளியல் 15 காரிகைகளைப் பெற்றுள்ளது. இவ்விரு இயல்களிலும் கூறப்படாத செய்திகளை எடுத்துரைக்கும் ஒழிபியல் 9 காரிகைகளால் அமைந்தது, ஒவ்வொரு இயலின் இறுதியிலும் இயல் காரிகைகளின் முதற் சீர்களைத் தொகுத்து அமைக்கப்பெற்ற ஒரு காரிகை இடம் பெற்றுள்ளது. உதாரண முதல் நினைப்புக் கூறுகின்ற காரிகைகள் (மாவாழ் நீங்கலாக) 15. இவற்றையும் கூட்ட இந்நூலின் கண் அமைந்த காரிகை 59.

## நூலாசிரியர்:-

யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை என்னும் இரண்டு நூல்களையும் இயற்றியவர் அமிதசாகரர் ஆவார். அமிதசாகரர் என்னும் பெயருக்குப் பெருங்கடல் என்பது பொருளாகும். மிதம் - அளவுக்கு உட்பட்டது. அமிதம் - அளவுக்கு உட்படாதது. சாகரம் - கடல். இப்பெயரில் இருந்து இவ்வாசிரியரின் பரந்துபட்ட அறிவை அடிப்படையாக வைத்துச் சூட்டப்பெற்ற சிறப்புப் பெயர் எனக் கொள்ளலாம். இவர் சமணசமயத்தைச் சார்ந்தவர் என்பதைத் தற்சிறப்புப் பாயிரத்தின் வழி அறியலாம். இவருடைய காலம் கி.பி.10 ஆம் நூற்றாண்டாகும். இந்நூலை இயற்றியதற்காகக் குளத்தூர் என்னும் ஊரைப் பரிசாகப் பெற்றார். அவ்வூர் காரிகை குளத்தூர் என வழங்கப்பட்டதை நீடூர்க் கல்வெட்டின் வழி அறிய முடிகின்றது. குளத்தூர் தொண்டை மண்டலத்தில் இருப்பதாகக் குறிக்கப்படுவதால் இந்நூலின் ஆசிரியர் தொண்டை மண்டலத்தைச் சார்ந்தவர் எனக் கருதலாம்.

## உரையாசிரியர்:-

அமிதசாகரரின் இரண்டு நூல்களுக்கும் எழுதியவர் குணசாகரர். குணசாகரர் என்பதற்குக் குணக்கடல் என்பது பொருளாகும். இவரைப் பற்றிய வரலாறு முழுமையாகத் தெரியவில்லை. ஆயினும் இவ்வுரையாசிரியர் பண்டை இலக்கிய இலக்கணங்களை ஆராய்ந்து கற்றவர். இவர்தம் உரையானது சுருக்கம், நுட்பம், தெளிவு ஆகியவற்றை ஒருங்கே கொண்டதாகும்.

## பாடம் - 1

## செய்யுள் உறுப்புகள்

எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை ஆகிய ஆறும் செய்யுளுக்குரிய உறுப்புகளைாகும் என்று யாப்பருங்கலக்காரிகை கூறுகின்றது.

## எழுத்து

### (அசைக்கு உறுப்பாகும் எழுத்துக்கள்)

காற்றைக் கீழிருந்து மேல் எழுப்பி உண்டாக்குகின்ற காரணத்தாலும் (ஒலி வடிவம்) எழுதுகின்ற காரணத்தாலும் (வரிவடிவம்) எழுத்து அவ்வாறு அழைக்கப்படுகிறது. அவ் எழுத்துக்கள் குறில், நெடில், ஆவி(உயிர்), குற்றியலிகரம், குற்றியலுகரம், ஐகாரக்குறுக்கம், ஆய்தம், மெய், வல்லினம், மெல்லினம், இடையினம், உயிர்மெய், அளபெடை எனப் பதின்மூன்று வகைப்படும். இப்பதின்மூன்று வகை எழுத்துகளும் அசைக்கு உறுப்பாகும் எழுத்துகளாகும். இவ்வெழுத்து பற்றிய செய்திகள் ஒரு காரிகை வழி எடுத்துரைக்கப் படுகின்றன.

"குறில் நெடில் ஆவி குறுகிய மூவுயிர் ஆய்த மெய்யே
மறுவறு மூவினம் மைதீர் உயிர்மெய் மதிமருட்டும்
சிறுநுதற் பேரமர்க் கட்செய்ய வாயைய நுண்ணிடையாய்
அறிஞர் உரைத்த அளவும் அசைக்குறுப் பாவனவே."

யா.காரிகை – 4

### 1. குறில்:-

ஒரு மாத்திரை கால அளவில் ஒலிக்கும் உயிரெழுத்துகளாகிய அ, இ, உ, எ, ஒ என்னும் ஐந்து எழுத்துகளும் 'குறில்' எனப்படும். இவை குற்றுயிர் எனவும் வழங்கப்பெறும்.

### 2. நெடில்:-

இரண்டு மாத்திரை கால அளவில் ஒலிக்கும் உயிரெழுத்துகளாகிய ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ ஆகிய ஏழு எழுத்துகளும் 'நெடில்' எனப்படும். இவை நெட்டுயிர் எனவும் வழங்கப்பெறும்.

## 3. ஆவி:-

ஆவி என்பது உயிரெழுத்து ஆகும். அவை 'அ' கர முதல் 'ஔ' காரம் ஈறாக உள்ள பன்னிரண்டு எழுத்துகளாகும்.

''ஔகார இறுவாய்

பன்னீர் எழுத்தும் உயிர்என மொழிப''

(தொல்.9)

## 4. குற்றியலிகரம்:-

நிலைமொழியின் ஈற்றெழுத்து குற்றியலுகரமாக இருக்கும் போது, வருமொழி முதலில் 'ய'கரம் வந்தால், நிலைமொழியின் ஈற்றிலுள்ள குற்றியலுகரம் குற்றியலிகரமாக மாறும்.

(எ.டு)

நாகு +யாது → நாக் +இ+யாது → நாகியாது

அரக்கு +யாது → அரக்கியாது

வரகு +யாது → வரகியாது

முன்னிலை ஏவல் வினையின் ஈற்றில் வரும் 'மியா' என்னும் அசைச்சொல்லில் 'ம'கரத்தை ஊர்ந்து வரும் இகரமும் குற்றியலிகரமாகும்.

(எ-டு)

கேண்மியா, சென்மியா.

## 5. குற்றியலுகரம்:-

நெடில், நெடில் ஒற்று, குறிலிணை, குறிலிணை ஒற்று, குறில் நெடில், குறில்நெடில் ஒற்று, குற்றொற்று ஆகிய இவற்றையடுத்து, ஆறு வல்லெழுத்தையும் ஊர்ந்து உகரம் வந்தால், அது குற்றியலுகரம் எனப்படும்.

எ-டு

1. நெடில் அடுத்து → நாகு,காசு,காடு,காது,காபு,காறு
2. நெடில் ஒற்றை அடுத்து → நாக்கு,காச்சு,காட்டு,காத்து,காப்பு,காற்று
3. குறிலிணை அடுத்து → வரகு,முரசு,மருடு,மருது,துரபு,கவறு
4. குறிலிணை ஒற்றை அடுத்து → அரக்கு,பொரிச்சு,தெருட்டு,குருத்து,பொருப்பு,சிரற்று
5. குறில் நெடிலை அடுத்து → அசோகு,பலாசு,மலாடு,கெடாது,புதாபு,விராறு
6. குறில் நெடில் ஒற்றை அடுத்து → தமாக்கு,தடாச்சு,பனாட்டு,கடாத்து,புதாப்பு,விராற்று
7. குறில் ஒற்றை அடுத்து → அக்கு,கச்சு,கட்டு,கத்து,கப்பு,கற்று

தொல்காப்பியமும் நன்னூலும் ஈற்றுக்கு அயல் எழுத்தை நோக்கிக் குற்றியலுகரம் ஆறு வகை எனக் கூறுகின்றன.

**ஐகாரக்குறுக்கம்:-**

அளபெடுக்கும் போதும்,தனியே சொல்லும் போதும் ஆகிய இரு நிலைகளும் அல்லாத நிலையில் வரும் ஐகாரம் தன்னளவில் சுருங்கி ஒன்றரை மாத்திரையும், ஒரு மாத்திரையுமாகக் குறுகும். ஐகாரம் குறுகுமிடத்து மொழி முதல், இடை, கடை என மூன்றிடத்தும் குறுகும்.

(எ.டு)

மொழிக்கு முதலில் ⟶ ஐப்பசி, மைப்புறம்

மொழிக்கு இடையில் ⟶ இடையன், மடையன்

மொழிக்கு இறுதியில் ⟶ குவளை, தவளை, தினை, பனை

**ஆய்தம்**

ஆய்தம் என்பது முப்பாற்புள்ளியாகும். இது சொல்லின் இடையில் மட்டுமே வரும். இது தனிநிலை, அஃகேனம், புள்ளி, ஒற்று எனவும் வழங்கப்பெறும்.

(எ.டு)

எஃகு, கஃசு, கஃடு, கஃது, கஃபு, கஃறு

“குறியதன் முன்னர் ஆய்தப் புள்ளி

உயிரொடு புணர்ந்தவல் லாறன் மிசைத்தே”

(தொல்.38)

**மெய்:-**

‘க’கரம் முதலாக ‘ன’கரம் ஈறாக உள்ள பதினெட்டு எழுத்துகளும் மெய்யெழுத்துகள் எனப்படும். மெய்யெழுத்துகள் புள்ளி பெற்று நிற்கும். இம்மெய்யெழுத்துகள் உடம்பு, உறுப்பு, ஒற்று, புள்ளி எனவும் வழங்கப்பெறும்.

“னகார இறுவாய்ப்

பதினெண் எழுத்தும் மெய்என மொழிப”

(தொல்.9)

**வல்லினம்:-**

க,ச,ட,த,ப,ற என்னும் ஆறு மெய்யெழுத்துகளும் வல்லினம் என வழங்கப்பெறும்.

“வல்லெழுத்து என்ப கசட தபற”

(தொல்.19)

## மெல்லினம்:-

ங,ஞ,ண,ந,ம,ன என்னும் ஆறு மெய்யெழுத்துகளும் மெல்லினம் என வழங்கப்பெறும். ‘‘மெல்லெழுத்து என்ப ஙஞண நமன’’

(தொல்.20)

## இடையினம்:-

ய,ர,ல,வ,ழ,ள என்னும் ஆறு மெய்யெழுத்துகளும் இடையினம் என வழங்கப்பெறும். ‘‘இடையெழுத்து என்ப யரல வழள’’

(தொல்.21)

காரிகையில் ‘மறுவறு மூவினம்’ என்று சிறப்பித்த அதனால், பதினெட்டு மெய்யெழுத்துகளும் உயிர்மெய்யாகிய போதும் அப்பெயராலேயே வழங்கப்பெறும்.

## உயிர்மெய்:-

உயிரும் மெய்யும் கூட்டி உச்சரிக்கப்படுகின்ற ‘க’கரம் தொடங்கி ‘ன’கரம் ஈறாக உள்ள இருநூற்றுப் பதினாறு எழுத்துகளும் உயிர்மெய்யெழுத்துகள் எனப்படும்.

காரிகையில், ‘‘மைதீர் உயிர்மெய்’’ எனச் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளதால், மெய்யின் மீது ஏறிய உயிரின் அளவே உயிர்மெய்க்கும் அளவாகும் எனக்கொள்ள வேண்டும்.

## அளபெடை:-

மாத்திரையும் குறையும் போது, சீர் குன்றித் தளை கெட நின்ற இடத்து, யாப்பு அழியாமை பொருட்டு எழுத்தொலிகள் தம் மாத்திரையினின்று நீண்டு ஒலித்தல் அளபெடை எனப்படும். இவ் அளபெடை உயிரளபெடை, ஒற்றளபெடை என இரு வகைப்படும்.

## ஊயிரளபெடை:-

உயிரெழுத்துகளில் ஆ,ஈ,ஊ,ஏ,ஐ,ஓ,ஔ என்னும் நெட்டெழுத்துகள் ஏழும் அளபெடுக்கும். அவை அளபெடுக்கும் போது, ‘ஐ’காரம் ‘இ’கரத்தோடும், ‘ஔ’காரம் ‘உ’கரத்தோடும் அளபெடுக்கும். மற்றவை தமக்கு இனமான குற்றெழுத்துகளோடு அளபெடுக்கும். அவை தனிநிலையும், ஒரு சொல்லின் முதனிலையும், இடைநிலையும், இறுதி நிலையும் ஆகிய நான்கிடத்தும் வந்து அளபெடுக்கும்.

(எ-டு)

தனிநிலை - ஆஅ, ஈஇ, ஊஉ, ஏஎ, ஐஇ, ஓஒ, ஔஉ

முதல்நிலை - ஆஅரிடம், ஈஇரிலை, ஊஉரிடம், ஏஎரிகள்

இடைநிலை - படாஅகை, பரீஇயம், கழூஉமணி, வளைஇயம்

இறுதிநிலை - கடாஅ, குரீஇ, கழூஉ, கடைஇ

**ஒற்றளபெடை:-**

மெய்யெழுத்துகளில் ங,ஞ,ண,ந,ம,ன,வ,ய,ல,ள என்னும் பத்தும், ஆய்தமும் ஆகிய பதினொரு எழுத்துகளும், குறிலை அடுத்தும், குறிலிணையை அடுத்தும் வந்து அளபெடுக்கும். ஒற்றளபெடை செய்யுளில் மட்டும் வரும். உலக வழக்கில் வாராது

(எ-டு)

குறிலையடுத்து - மங்ங்கலம், மஞ்ஞ்சு, மண்ண்ணு, பந்ந்து, அம்ம்பு

குறிலிணை அடுத்து - அரங்ங்கம், முரஞ்ஞ்சு, முரண்ண்டு, பருந்ந்து, அரும்ம்பு

காரிகையில், ‘அறிஞர் உரைத்த அளபும்’ எனச் சிறப்பித்துக் கூறியதனால்,

குற்றெழுத்து, ஒற்றளபெடை - ஒரு மாத்திரை

நெட்டெழுத்து - இரண்டு மாத்திரை

உயிரளபெடை - மூன்று மாத்திரை

ஆய்தம், மெய், குற்றியலிகரம், குற்றியலுகரம் - அரை மாத்திரை

ஐகாரக்குறுக்கம் - ஒன்றரை மாத்திரை

மகரக்குறுக்கம் - கால் மாத்திரை

பெறும் எனக் கொள்ளப்படும்.

## பாடம் - 2

## அசை

எழுத்து ஒன்றோ பலவோ அசைத்து இசை கொள்வதினால் அசை எனப்பெயர் பெறுகிறது.

“எழுத்து அசைத்து இசைகோடலின் அசையே” என்று யாப்பருங்கல விருத்தியின் உரை மேற்கோள் கூறுகிறது.

அசை நேரசை, நிரையசை என இரு வகைப்படும்.

“குறிலே நெடிலே குறிலிணை ஏனைக் குறில்நெடிலே
நெறியே வரினும் நிரைந்துஒற்று அடுப்பினும் நேர்நிரைஎன் (று)
அறி வேய் புரையும் மென்தோளி உதாரணம் ஆழி வெள்வேல்
வெறியே சுறாநிறம் விண்தோய் விளாம் என்று வேண்டுவரே”

(யா.காரிகை-5)

### நேரசை:-

குறில் தனித்து வரினும், நெடில் தனித்து வரினும் குறிலை அடுத்து மெய்யெழுத்து வரினும், நெடிலை அடுத்து மெய்யெழுத்து வரினும் நேரசையாகும்.

(எ-டு)

| | | |
|---|---|---|
| ஆ | - | நெடில் தனியே எந்துள்ள நேரசை |
| ழி | - | குறில் தனியே வந்துள்ள நேரசை |
| வெள் | - | குறிலை அடுத்து மெய்யெழுத்து வந்துள்ள நேரசை |
| வேல் | - | நெடிலை அடுத்து மெய்யெழுத்து வந்துள்ள நேரசை |

### நிரையசை:-

குறில் இணைந்து வரினும், குறில் நெடில் இணைந்து வரினும், குறிலிணையை அடுத்து ஒற்றெழுத்து வரினும், குறில் நெடிலை அடுத்து ஒற்றெழுத்து வரினும் நிரையசையாகும்.

(எ-டு)

| | | |
|---|---|---|
| வெறி | - | குறில் இணைந்து வந்துள்ள நிரையசை |
| சுறா | - | குறில் நெடில் இணைந்து வந்துள்ள நிரையசை |
| நிறம் | - | குறிலிணையை அடுத்து ஒற்றெழுத்து வந்துள்ள நிரையசை |
| விளாம் | - | குறில்நெடிலை அடுத்து ஒற்றெழுத்து வந்துள்ள நிரையசை |

# <u>சீர்</u>

ஓர் அசை தனியாகவோ, பல அசைகள் சேர்ந்தோ செய்யுள் அடிகளில் அமைவது சீர் என வழங்கப்பெறும். ஒரு சீரில் ஒன்று முதல் நான்கு அசைகள் வரை அமைந்திருக்கும்.

## <u>சீர்களின் பெயரும் வகையும</u>

"ஈரசை நாற்சீர் அகவற்கு உரிய வெண்பாவினவாம்
நேரசையால் இற்ற மூவகைச்சீர் நிரையால் இறுப
வாரசை மென்முலை மாதே! வகுத்த வஞ்சிக்கு உரிச்சீர்
ஓர் அசையே நின்றும் சீராம் பொதுவொடு நாலசையே"

(யா.காரிகை-6)

## <u>சீர்களுக்குரிய வாய்பாடு</u>

"தேமா புளிமா கருவிளம் கூவிளம் சீர் அகவற்கு
ஆம்;ஆம் கடைகாய் அடையின் வெண்பாவிற்கு அந்தம்கனியாம்
வாமாண் கலைஅல்குல் மாதே! வகுத்த வஞ்சிக்கு உரிச்சீர்
நாமாண்பு உரைத்த அசைச்சீர்க்கு உதாரணம் நாள்மலரே"

(யா.காரிகை-7)

### <u>வகைகள்:-</u>

சீர் நான்கு வகைப்படும் அவையாவன: ஓரசைச்சீர், ஈரசைச்சீர், மூவசைச்சீர், நாலசைச்சீர்.

### <u>ஓரசைச்சீர்:-</u>

ஓரசையால் ஆகிய சீர் ஓரசைச்சீர் எனப்படும். இதனை அசைச்சீர் என்றும் கூறுவர்.

வெண்பாவின் இறுதி ஓரசைச்சீரால் முடிதலும் உண்டு. அப்போது அது நேரசையாகவோ நிரையசையாகவோ தனித்து நின்று சீராக அமையும். இந்நிலையில் நேரசைக்கு 'நாள்' என்பதும், நிரையசைக்கு 'மலர்' என்பதும் வாய்பாடுகளாகும்.

(எ-டு)

நேர் (நாள்)
வாலெயி லூறிய <u>நீர்</u>
நிரை (மலர்)
நெஞ்சத் தவல <u>மிலர்</u>

**ஈரசைச்சீர்:-**

இரண்டு அசையால் அமையும் சீர் ஈரசைச்சீராகும். இச்சீர் இயற்சீர், அகவற்சீர் எனவும் வழங்கப்பெறும். இரண்டு அசையாலாகிய நான்கு சீரும் ஆசிரியஉரிச்சீராகும். இச்சீருக்குத் தேமா, புளிமா, கருவிளம், கூவிளம் என்னும் நான்கும் வாய்பாடுகளாகும்.

<table>
<tr><th>சீர்</th><th>வாய்ப்பாடு</th><th></th></tr>
<tr><td>நேர், நேர்</td><td>தேமா</td><td rowspan="2">மாச்சீர்</td></tr>
<tr><td>நிரை, நேர்</td><td>புளிமா</td></tr>
<tr><td>நிரை, நிரை</td><td>கருவிளம்</td><td rowspan="2">விளச்சீர்</td></tr>
<tr><td>நேர், நிரை</td><td>கூவிளம்</td></tr>
</table>

(எ-டு)

குன்/றக் - நேர், நேர்

குற/வன் - நிரை, நேர்

மட/மகள் - நிரை, நிரை

சா/யலள் - நேர், நிரை

**மூவசைச்சீர்:-**

ஈரசைச்சீர் நான்கினோடும் நேரசை சேர்ந்தால் வருகின்ற மூவசைச்சீர் நான்கு. இதனை காய்ச்சீர் என்றும், வெண்பா உரிச்சீர் என்றும் கூறுவர்.

| சீர் | | வாய்பாடு |
|---|---|---|
| நேர், நேர், நேர் | - | தேமாங்காய் |
| நிரை, நேர், நேர் | - | புளிமாங்காய் |
| நிரை, நிரை, நேர் | - | கருவிளங்காய் |
| நேர், நிரை, நேர் | - | கூவிளங்காய் |

(எ-டு)

கிள்/ளி/பேர் - நேர், நேர், நேர்

புன/னா/டன் - நிரை, நேர், நேர்

புனை/கழற்/காற் - நிரை, நிரை, நேர்

ஊழ்/உலக்/கை - நேர், நிரை, நேர்

ஈரசைச்சீர் நான்கினோடும் நிரையசை சேர்ந்தால் வருகின்ற மூவசைச்சீர் நான்கு. இது கனிச்சீர் என்றும், வஞ்சி உரிச்சீர் என்றும் வழங்கப்பெறும்.

| **சீர்** | | **வாய்ப்பாடு** |
|---|---|---|
| நேர், நேர், நிரை | - | தேமாங்கனி |
| நிரை, நேர், நிரை | - | புளிமாங்கனி |
| நிரை, நிரை, நிரை | - | கருவிளங்கனி |
| நேர், நிரை, நிரை | - | கூவிளங்கனி |

(எ-டு)

| | | |
|---|---|---|
| பூந் /தா/மரைப் | - | நேர், நேர், நிரை |
| வினைக் /கம் /பலை | - | நிரை, நேர், நிரை |
| வள/வய/லிடை | - | நிரை, நிரை, நிரை |
| போ/தல/மரத் | - | நேர், நிரை, நிரை |

**நாலசைச்சீர்:-**

நான்கு அசைகளால் ஆகிய சீர் பொதுச்சீர் எனப்படும். மேற்கூறப்பெற்ற மூவசைச்சீர் எட்டின் இறுதியிலும், 'நேரும் நிரையும்' தனித்தனியே அடுத்து வருகின்ற பதினாறு சீர்களும் 'பொதுச்சீர்' களாகும்.

''தண்ணிழல் தண்பூ நறும்பூ நறுநிழல் தந்துஉறழ்ந்தால்
எண்ணிடு நாலசைச் சீர்வந்து அருகும் இனிஅவற்றுள்
கண்ணிய பூவினம் காய்ச்சீர் அனைய கனியொடு ஒக்கும்
ஒண்ணிழல் சீர் அசைச்சீர் இயற்சீர் ஒக்கும் ஒண்தளைக்கே''

(யா.காரிகை -8)

இயற்சீருக்குரிய வாய்பாடுகளான தேமா, புளிமா, கருவிளம், கூவிளம் என்னும் நான்குடன் தண்ணிழல், தண்பூ, நறுநிழல், நறும்பூ என்னும் நான்கு வாய்பாடுகளையும் முறையானே தந்து உறழ்ந்தால், பதினாறு நான்கசைச்சீர் வரும். இவ்வாறு வருகிற பதினாறு நான்கசைச்சீர்களும் பொதுச்சீர் எனப்படும்.

| | | |
|---|---|---|
| நேர் நேர் நேர் நேர் | - | தேமாந்தண்பூ |
| நிரை நேர் நேர் நேர் | - | புளிமாந்தண்பூ |
| நிரை நிரை நேர் நேர் | - | கருவிளந்தண்பூ |
| நேர் நிரை நேர் நேர் | - | கூவிளந்தண்பூ |
| நேர் நேர் நிரை நேர் | - | தேமா நறும்பூ |
| நிரை நேர் நிரை நேர் | - | புளிமா நறும்பூ |
| நிரை நிரை நிரை நேர் | - | கருவிள நறும்பூ |
| நேர் நிரை நிரை நேர் | - | கூவிள நறும்பூ |

| | | |
|---|---|---|
| நேர் நேர் நேர் நிரை | - | தேமாந்தண்ணிழல் |
| நிரை நேர் நேர் நிரை | - | புளிமாந்தண்ணிழல் |
| நிரை நிரை நேர் நிரை | - | கருவிளந்தண்ணிழல் |
| நேர் நிரை நேர் நிரை | - | கூவிளந்தண்ணிழல் |

| | | |
|---|---|---|
| நேர் நேர் நிரை நிரை | - | தேமா நறுநிழல் |
| நிரை நேர் நிரை நிரை | - | புளிமா நறுநிழல் |
| நிரை நிரை நிரை நிரை | - | கருவிள நறுநிழல் |
| நேர் நிரை நிரை நிரை | - | கூவிள நறுநிழல் |

காரிகையில் ‘பூவிளம் காய்ச்சீர் அனைய’ எனக் கூறப்பட்டுள்ளமையால் நாலசைச்சீர் பதினாறனுள்ளும், ‘பூ’ என்னும் சொல் இறுதியாகிய நேர் ஈற்றும் பொதுச்சீர் எட்டும், காய் என்னும் சொல் இறுதியாகிய வெண்பா உரிச்சீரைப் போலக் கொண்டு, வருஞ்சீர் முதலசையோடு ஒன்றுவது வெண்டளையாகவும், ஒன்றாதது கலித்தளையாகவும் வழங்கப்பெறும்.

‘கனியோடு ஒக்கும் ஒண்ணிழற்சீர்’ எனக் கூறப்பட்டுள்ளமையால், ‘நிழல்’ என்னும் சொல் இறுதியாகிய நிரையீற்றுப் பொதுச்சீர் எட்டையும் வஞ்சியுரிச்சீரைப் போலக் கொண்டு, வருஞ்சீர் முதலசையோடு ஒன்றினும் ஒன்றாவிடினும் வஞ்சித்தளை என்று வழங்கப்பெறும்.

இந்த நாலசைச்சீர் பதினாறும் வெண்பாவில் வாரா. கலிப்பாவிலும் ஆசிரியப் பாவிலும், சிறுபான்மை குற்றியலிகர, குற்றியலுகரங்கள் வந்தவிடத்து மட்டுமே வரும். வஞ்சிப்பாவில் மட்டும் பெருவாரியாக வரும்.

## பாடம் - 3

## தளை

தளை என்னும் சொல்லுக்குக் கட்டுவது அல்லது பொருந்துவது என்பது பொருளாகும். சீர்கள் ஒன்றெயொன்று தொடரும் முறைக்கு யாப்பு நூலார் தளை எனப் பெயரிட்டனர். இசையைத் தோற்றுவிக்கின்ற சீர்கள் ஒன்றோடொன்று கூட்டப்பட்டு இசை தொடர்ச்சி தோன்ற அமைக்கப்படுவதே தளையின் பயனாகும். நின்ற சீரின் ஈற்றசையும் வருஞ்சீரின் முதலசையும் ஒன்றியோ ஒன்றாமலோ அமையினும் அது தளை என்றே வழங்கப்படும். நின்ற சீரின் ஈற்றசையும் வரும் சீரின் முதலசையும் ஒன்றாக அமைவது ஒன்றிய தளையாகும். மாறுபட்டு அமைவது ஒன்றாத தளையாகும்.

''தண்சீர் தனதொன்றில் தன்தளையாம்; தணவாத வஞ்சி
வண்சீர் விகற்பமும் வஞ்சிக் குறித்து வல்லோர் வகுத்த
வெண்சீர் விகற்பம் கலித்தளை யாய்விடும் வெண்தளையாம்
ஒண்சீர் அகவல் உரிச்சீர் விகற்பமும் ஒண்ணுதலே.

(யா.காரிகை-10)

### தளையின் வகைகள்:-

1.நேரென்றாசிரியத்தளை 2.நிரையொன்றாசிரியத்தளை 3.இயற்சீர் வெண்டளை 4.வெண்சீர் வெண்டளை 5.கலித்தளை 6.ஒன்றிய வஞ்சித்தளை 7.ஒன்றாத வஞ்சித்தளை – எனத் தளைகள் ஏழு வகைப்படும்.

### ஒன்றிய தளைகள்:-

நேரொன்றாசிரியத்தளை, நிரையொன்றாசிரியத்தளை, வெண்சீர் வெண்டளை, ஒன்றிய வஞ்சித்தளை ஆகிய நான்கும் ஒன்றிய தளைகளாகும்.

### ஒன்றாத தளைகள்:-

இயற்சீர் வெண்டளை, கலித்தளை, ஒன்றாத வஞ்சித்தளை ஆகிய மூன்றும் ஒன்றாத தளைகளாகும்.

### நேரொன்றாசிரியத்தளை:-

ஆசிரியவுரிச்சீர் நின்று, தன் வருஞ்சீர் முதல் அடையோடு நேராய் ஒன்றுவது நேரொன்றாசிரியத்தளை எனப்படும். அதாவது மா முன் நேர் வருவது.

(எ-டு)

நே நே நே
உள்/ளார் கொல்/லோ

**நிரையொன்றாசிரியத்தளை:-**

ஆசிரியவுரிச்சீர் நின்று, தன் வருஞ்சீர் முதல் அசையோடு நிரையாய் ஒன்றுவது நிரையொன்றாசிரியத்தளை எனப்படும். அதாவது விள முன் நிரை வருவது.

(எ-டு)

நிரை நிரை நிரை’
திரு/மழை தலை/இய

**இயற்சீர் வெண்டளை:-**

ஆசிரியவுரிச்சீர் நின்று, தன் வருஞ்சீர் முதல் அசையோடு ஒன்றாதது இயற்சீர் வெண்டளை எனப்படும். அதாவது மா முன் நிரையும், விள முன் நேரும் வருவது.

(எ-டு)

நேர் நிரை நேர்
பா /லொடு தேன் /கலந்

-விளம் முன் நேர் வந்துள்ளது.

நேர் நேர் நிரை
தற் /றே பணி /மொழி

**வெண்சீர் வெண்டளை:-**

வெண்பா உரிச்சீர் நின்று, தன் வருஞ்சீர் முதலசையோடு ஒன்றுவது வெண்சீர் வெண்டளை எனப்படும். அதாவது காய் முன் நேர் வருவது.

(எ-டு)

நிரை நிரை நேர் நேர்
சிலை /விலங் /கு நீள் /புருவம்

- மா முன் நிரை வந்துள்ளது.

## கலித்தளை:-

வெண்பா உரிச்சீர் நின்று, தன் வருஞ்சீரின் முதலசையோடு ஒன்றாதது கலித்தளை எனப்படும். அதாவது காய் முன் நிரை வருவது.

(எ-டு)

நேர் நேர் நேர் நிரை
செல் /வப் /போர்க் கதக் /கண்ணன்

## ஒன்றிய வஞ்சித்தளை:-

வஞ்சி உரிச்சீர் நின்று, தன் வருஞ்சீரின் முதல் அசையோடு ஒன்றுவது ஒன்றிய வஞ்சித்தளையாகும். அதாவது கனி முன் நிரை வருவது.

(எ-டு)

நேர் நேர் நிரை நிரை
வெண் /சா /மரை புடை /பெயர்தரச்

## ஒன்றாத வஞ்சித்தளை:-

வஞ்சி உரிச்சீர் நின்று, தன் வருஞ்சீரின் முதல் அசையோடு ஒன்றாதது ஒன்றாத வஞ்சித்தளை எனப்படும். அதாவது கனி முன் நேர் வருவது.

(எ-டு)

நேர் நேர் நிரை நேர்
வான் /பொய்ப் /பினு தான் /பொய்யா

## அடி

இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட சீர்கள் தொடர்ந்து நிற்பது அடி எனக் கூறப்படுகிறது. சீர்கள் இணைந்த தளைகள் பொருந்தி நின்று அடுத்து நடப்பதால் அடி அவ்வாறு அழைக்கப்படுகிறது. ஓரடியில் அமையும் சீர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப அடிகள் பல பெயர்களைப் பெறுகின்றன. அவற்றை ஐந்து வகையாகப் பாகுபடுத்தலாம்.

“குறளிரு சீரடி சிந்துமுச் சீரடி நாலொருசீர்
அறைதரு காலை அளவொடு நேரடி ஐயொருநீர்
நிறைதரு பாத நெடிலடியாம் நெடுமென் பணைத்தோள்
கறைகெழு வேற்கண் நல்லாய் மிக்க பாதம் கழிநெடிலே”.

(யா.காரிகை-12)

## அடியின் வகைகள்:-

குறளடி, சிந்தடி, அளவடி, நெடிலடி, கழிநெடிலடி என ஐந்து வகைப்படும்.

## குறளடி:-

இரண்டு சீர்களால் வரும் அடி குறளடி எனப்படும்.

(எ-டு)

திரைத்த சாலிகை
நிரைத்த போனிரந்
திரைப்ப தேன்களே
விரைக்கொண் மாலையாய்

(சூளாமணி, சீயவதை – 172)

## சிந்தடி:-

மூன்று சீர்களால் வரும் அடி சிந்தடி எனப்படும்.

(எ-டு)

இருது வேற்றுமை இன்மையாற்
சுருதி மேற்றுறக் கத்தினோ
டரிது வேற்றுமை யாகவே
கருது வேற்றடங் கையினாய்

(சூளாமணி, சீயவதை – 170)

## அளவடி /நேரடி:-

நான்கு சீர்களைக் கொண்ட அடி அளவடி எனப்படும். இவ்வடி நேரடி எனவும் வழங்கப்பெறும்.

(எ-டு)

உலகெ லாமுணர்ந் தோதற்க ரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

(பெரிய-1)

**<u>நெடிலடி:-</u>**

ஐந்து சீர்களைக் கொண்ட அடி நெடிலடி எனப்படும்.

(எ-டு)

வென்றான் வினையின் தொகையாய விரிந்து தன்கண்
ஒன்றாய்ப் பரந்த உணர்வின் ஒழியாது முற்றும்
சென்றான் திகழுஞ் சுடர்சூ ழொளிமூர்த்தி யாகி
நின்றான் அடிக்கீழ்ப் பணிந்தோர் வினைநீங்கி நின்றார்

(சூளா.காப்பு)

**<u>கழிநெடிலடி:-</u>**

ஐந்து சீருக்கும் அதிகமான சீர்களைக் கொண்டு வருகின்ற அடி கழிநெடிலடி எனப்படும்.

யாப்பருங்கல விருத்தி, ஆறுசீர் முதலாகப் பத்துச்சீர் இறுதியாக வரும் அடிகளையும், பத்துச்சீருக்கு அதிகமாகவும் பதின்மூன்று சீருக்கு மிகாமலும் வரும் அடிகளையும், கழிநெடிலடியாக வழங்க வேண்டும் எனக் கூறுகின்றது.

எட்டுச் சீருக்கு அதிகமான சீர்களைக் கொண்டு வருகின்ற அடிகள் சிறப்பில்லாதவை என்று காக்கைப்பாடினியார் கூறுகின்றார்.

ஆறுசீர் முதலாகப் பதினோரு சீர் ஈறாகக் கழிநெடிலடி அமையும் என்று வீரசோழிய உரை கூறுகின்றது.

(எ-டு)

இரைக்கு மஞ்சிறைப் பறவைக ளெனப்பெயர்
 இவைண்டு புடைசூழ
நுரைக்கள் என்னுமக் குழம்புகள் திகழ்ந்தெழ
 நுடங்கிய விலையத்தால்

(சூளா.கல்யாணச்-51)

இப்பாடல் அறுசீர்க் கழிநெடிலடியால் அமைந்துள்ளது.

கணிகொண் டலர்ந்த நறவேங்கை யோடு
 கமழ்கின்ற காந்த ளிதழால்
அணிகொண் டலர்ந்த வனமாலை சூடி
 அகிலாவி குஞ்சி கமழ

(சூளாமணி, அரசியல்-197)

இப்பாடலில் ஒவ்வோர் அடியிலும் ஏழு சீர்கள் அமைந்துள்ளன.

## தொடை

ஒரு செய்யுளில் அமைந்த அடிகளும் அவ்வடிகளில் இடம் பெற்ற சீர்களும் ஒன்றோடு ஒன்று பொருத்தமுறத் தொடுக்கப்படுவது தொடையாகும். மலர்களால் தொடுக்கப்படும் மாலையைப்போல அடிகளால் தொடுக்கப் படுவது தொடையாகும்.

'எழுத்து, சொல், பொருள் - என்பனவற்றை ஒருவித ஒழுங்கில் நிறுத்தி, அடியோடு அடியிடைத் தொடுக்கப்படும் செய்யுள் உறுப்பு தொடை எனப்படும்' என்று காக்கைப்பாடினியார் கூறுகின்றார். செய்யுளின் சிறப்பிற்கும் ஓசை நயத்திற்கும் அடிப்படையாய் விளங்குவது தொடையாகும். ''தொடையற்ற பாட்டு நடையற்று போகும்'' என்னும் பழமொழி தொடையின் சிறப்பை உணர்த்தும்.

### தொடையின் வகைகள்:-

மோனை, எதுகை, இயைபு, முரண், அளபெடை, அந்தாதி, இரட்டை, செந்தொடை எனத் தொடைகள் எட்டு வகைப்படும். இவற்றில் முதலில் உள்ள ஐந்து தொடைகளும் முதன்மைத் தொடைகள் என்றும் கூறப்பெறும்.

''எழுவாய் எழுத்தொன்றின் மோனை இறுதி இயைபிரண்டாம்
வழுவா எழுத்தொன்றின் மாதே எதுகை மறுதலைத்த

மொழியான் வரினும் முரண் அடிதோறும் மொழிமுதற்கண்
அழியாது அளபெடுத் தொன்றுவதாகும் அளபெடையே''

(யா.காரிகை-16)

''அந்தம் முதலாத் தொடுப்பது அந்தாதி அடிமுழுதும்
வந்த மொழியே வருவது இரட்டை வரன்முறையான்
முந்திய மோனை முதலா முழுதும் ஒவ்வாது விட்டால்
செந்தொடை நாமம் பெறும் நறுமென்குடில் தேமொழியே''

(யா.காரிகை-17)

**மோனைத் தொடை:-**

அடிதோறும் முதற்சீரிலுள்ள முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது அடிமோனைத் தொடை எனப்படும்.

(எ-டு)

**மா**வும் புள்ளும் வதிவயிற் படர
**மா**நீர் விரிந்த பூவுங் கூம்ப
**மா**லை தொடுத்த கோதையுங் கமழ
**மா**லை வந்த வாடை
**மா**யோன் இன்னுயிர்ப் புறத் தன்றே

**எதுகைத் தொடை:-**

அடிதோறும் முதற்சீரிலுள்ள முதல் எழுத்து அளவொத்து நிற்க, இரண்டாம் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது அடியெதுகைத் தொடை எனப்படும்.

(எ-டு)

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

**இயைபுத் தொடை:-**

அடிதோறும், இறுதிச் சீரிலுள்ள இறுதி எழுத்தோ சொல்லோ ஒன்றிவரத் தொடுப்பது அடி இயைபுத்தொடை எனப்படும்.

(எ-டு)

இன்னகைத் துவர்வாய்க் கிளவியும் அணங்கே
நன்மா மேனிச் சுணங்குமா ரணங்கே
ஆடமைத் தோளி ஊடலும் அணங்கே
அரிமதர் மழைக்கணும் அணங்கே

## முரண்தொடை:-

அடிதோறும், முதற்சீரின் முதற்கண் நின்ற சொல்லையோ பொருளையோ தம்முள் மாறுபடத் தொடுப்பது அடிமுரண் தொடை எனப்படும். இத்தொடை இரணத்தொடை எனவும் கூறப்பெறும்.

(எ-டு)

இருள்பரந்தன்ன மாநீர் மருங்கின்
நிலவுக்குவித்தன்ன வெண்மண லொருசிறை
இரும்பினன்ன கருங்கோட்டுப் புன்னை
பொன்னினன்ன நுண்தாது இறைக்கும்

## அளபெடைத் தொடை:-

அடிதோறும், முதற்சீரின் முதற்கண் அளபெடை ஒன்றிவரத் தொடுப்பது அடியளபெடைத் தொடை எனப்படும்.

(எ-டு)

ஆஅ அளிய அலவன்தன் பார்ப்பினோடு
ஈஇர் இரையும் கொண்டீர் அளைப் பள்ளியுள்
தூஉந் திரையலைப்பத் துஞ்சா(து) இறைவன் தோள்

## அந்தாதித் தொடை:-

ஓர் அடியின் ஈற்றிலுள்ள எழுத்து, அசை, சீர் ஆகியவற்றில் ஒன்றனை, அடுத்த அடியின் முதற்கண் ஒன்றி வரத் தொடுப்பது அந்தாதித் தொடை எனப்படும்.

(எ-டு)

உலகுடன் விளக்கும் ஒளிதிகழ் அவிர்மதி
மதிநலன் அழிக்கும் வளங்கெழு முக்குடை
முக்குடை நீழல் பொற்புடை ஆசனம்

## இரட்டைத் தொடை:-

நான்கு சீர்களைக் கொண்ட ஓரடி முழுவதும், ஒரு சீரே திரும்பத் திரும்ப வரத்தொடுப்பது இரட்டைத் தொடை எனப்படும்.

(எ-டு)

ஒக்குமே ஒக்குமே ஒக்குமே ஒக்கும்
விளக்கினிற் சீறெரி ஒக்குமே ஒக்கும்
குளக்கொட்டிப் பூவின் நிறம்.

## செந்தொடை:-

இயல்பாக வருவது செந்தொடையாகும். மோனை, எதுகை முதலாகிய தொடைகளும், இணை, பொழிப்பு முதலாகிய தொகை விகற்பங்களும் இன்றி இயல்பாகத் தொடுப்பது செந்தொடை எனப்படும்.

(எ-டு)

பூத்த வேங்கை வியன்சினை ஏறி
மயிலினம் அகவும் நாடன்
நண்ணுதல் கொடிச்சி மனத்தகத் தோனே.

## தொடை விகற்பம்:-

ஓரடிக்கண் அமைந்துள்ள சீர்கள் தோறும் மோனை, எதுகை, முரண், இயைபு, அளபெடை ஆகியன ஒன்றிவரத் தொடுப்பது தொடை விகற்பம் எனப்படும். தொடை விகற்பமானது இணை, பொழிப்பு, ஒரூஉ, கூழை, மேற்கதுவாய், கீழ்க்கதுவாய், முற்று என ஏழு வகைப்படும்.

இருசீர் மிசை இணை ஆகும் பொழிப்பு இடையிட்டு ஒரூஉவாம்
இருசீர் இடையிட்டது ஈறிலி கூழை முதல் இறுவாய்
வரும்சீர் அயல்இல மேல் கீழ் வகுத்த மைதீர்கதுவாய்
வரும்சீர் முழுவதும் ஒன்றின் முற்றாம் என்ப மற்றவையே.

(யா.காரிகை-19)

## இணை:-

ஓரடியில் அமைந்துள்ள முதல் இருசீர்கண்ணும் (1,2) மோனை முதலாகிய தொடைகள் ஒன்றிவரத் தொடுப்பது இணை எனப்படும்.

## பொழிப்பு:-

ஓரடியில் அமைந்துள்ள முதற்சீரிலும் மூன்றாம் சீரிலும் (1,3) மோனை முதலாகிய தொடைகள் ஒன்றிவரத் தொடுப்பது பொழிப்பு எனப்படும்.

## ஒரூஉ:-

ஓரடியில் அமைந்துள்ள முதற்சீரிலும் நான்காம் சீரிலும் (1,4) மோனை முதலாகிய தொடைகள் ஒன்றிவரத் தொடுப்பது ஒரூஉ எனப்படும்.

## கூழை:-

முதல் மூன்று சீர்களிலும் (1,2,3) மோனை முதலாகிய தொடைகள் ஒன்றிவரத் தொடுப்பது கூழை எனப்படும்.

## மேற்கதுவாய்:-

இரண்டாம் சீர் தவிர, ஒழிந்த மூன்று சீர்களில் (1,3,4) மோனை முதலாகிய தொடைகள் ஒன்றிவரத் தொடுப்பது மேற்கதுவாய் எனப்படும்.

## கீழ்க்கதுவாய்:-

மூன்றாம் சீர் தவிர, ஒழிந்த மூன்று சீர்களில் (1,2,4) மோனை முதலாகிய தொடைகள் ஒன்றிவரத் தொடுப்பது கீழ்க்கதுவாய் எனப்படும்.

## மோனை விகற்பம்:-

அணிமலர் அசோகின் தளிர்நலம் கவற்றி - (இணை மோனை)
அரிக்குரல் கிண்கிணி அரற்றும் சீரடி - (பொழிப்பு மோனை)
அம்பொன் கொழுஞ்சி நெடுந்தேர் அகற்றி - (ஒரூஉ மோனை)
அகன்ற அல்குல் அந்நுண் மருங்குல் - (கூழை மோனை)
அரும்பிய கொங்கை அவ்வளை அமைத்தோள் - (மேற்கதுவாய் மோனை)
அவர்மதி அனைய திருநுதல் அரிவை - (கீழ்க்கதுவாய் மோனை)
அயில்வேல் அனுக்கி அம்பலைத்து அமர்ந்த - (முற்று மோனை)

## இயைபு விகற்பம்:-

| | |
|---|---|
| மொய்த்துடன் தவழும் முகிலே பொழிலே | - (இணை இயைபு) |
| மற்றதன் அயலே முத்துறழ் மணலே | - (பொழிப்பு இயைபு) |
| நிழலே இனியதன் அயலது கடலே | - (ஒரூஉ இயைபு) |
| மாதர் நகிலே வல்லே இயலே | - (கூழை இயைபு) |
| வில்லே நுதலே வேற்கண் கயலே | - (மேற்கதுவாய் இயைபு) |
| பல்லே தளவம் பாலே சொல்லே | - (கீழ்க்கதுவாய் இயைபு) |
| புயலே குழலே மயிலே இயலே | - (முற்று இயைபு) |

## எதுகை விகற்பம்:-

பொன்னின் அன்ன பொறிசுணங்கு ஏந்திப்

# பயிற்சி வினாக்கள்

## குறுவினாக்கள்:-

1. செய்யுளின் உறுப்புகள் யாவை?
2. அசைக்கு உறுப்பாகும் எழுத்துகள் யாவை?
3. அசை – விளக்குக.
4. அடி எத்தனை வகைப்படும்? அவை யாவை?

## கட்டுரை வினாக்கள்:-

1. சீர்கள் எத்தனை வகைப்படும்? வகைகளை விளக்குக.
2. தொடை பற்றி விளக்கி வரைக.
3. தளைகளை விளக்கிக் கட்டுரைவரைக

# பாடம் - 4

# அலகு – 2

# செய்யுளியல்

## பாவுக்குரிய அடியும் ஓசையும்:-

பாக்களின் வகைகளையும் இனங்களையும் கூறவந்த ஆசிரியர் அப்பாக்களுக்குரிய அடிவரையறையையும் ஓசையையும் முதற்கண் ஒரு காரிகையில் எடுத்துரைக்கிறார்.

''வெண்பா அகவல் கலிப்பா அளவடி வஞ்சி என்னும்
ஒண்பாஅடி குறள் சிந்து என்றுஉரைப்ப ஒலிமுறையே
திண்பா மலிசெப்பல் சீர்கால் அகவல் சென்று ஓங்குதுள்ளல்
நண்பா அமைந்த நலமிகு தூங்கல் நறுநுதலே''

(யா.காரிகை-21)

## நால்வகைப்பாக்களுக்கு உரிய அடி:-

வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா ஆகிய மூன்று பாக்களும் நான்கு சீர்களைக் கொண்ட அளவடியால் வரப்பெறும். வஞ்சிப்பா இரண்டு சீர்களைக் கொண்ட அடியாலும், மூன்று சீர்களைக் கொண்ட அடியாலும் வரப்பெறும்.

காரிகைச் செய்யுளில் 'வஞ்சியென்னும் ஒண்பா' என்று சிறப்பித்துக் கூறப்பெற்றுள்ளதால், வெண்பாவின் ஈற்றடியும், நேரிசை ஆசிரியப்பாவின் ஈற்றயலடியும், கலி வெண்பாவின் ஈற்றடியும் மூன்று சீர்களால் வரப்பெறும் என்பதும், இணைக்குறள் ஆசிரியப்பாவின் இடையிலுள்ள அடிகள் இரண்டும் பலவும் குறளடியாலும் சிந்தடியாலும் வரப்பெறும் என்பதும் கலிப்பாவினுள் ஒருசார் அம்போதரங்க உறுப்பு இருசீரடியாலும் முச்சீரடியாலும் வரப்பெறும் என்பதும், அராக உறுப்புகள் அளவடி முதலிய எல்லா அடியாலும் வரப்பெறும் என்னும் கருத்தும் பெறப்படுகின்றன.

## நால்வகைப் பாக்களுக்கு உரிய ஓசை:-

வெண்பாவிற்கு உரிய ஓசை செப்பலோசை ஆகும். ஆசிரியப்பாவிற்குரிய ஓசை அகவலோசை ஆகும். கலிப்பாவிற்குரிய ஓசை துள்ளலோசை ஆகும். வஞ்சிப்பாவிற்குரிய ஓசை தூங்கலோசை ஆகும்.

## வெண்பாவிற்குரிய ஓசை:-

காரிகையில் ‘திண்பாமலிசெப்பல்’ எனச் சிறப்பித்துக் கூறப்பெற்றுள்ளதால், வெண்பாவிற்குரிய செப்பலோசையானது ஏந்திசைச் செப்பல், தூங்கிசைச் செப்பல், ஒழுகிசைச் செப்பல் என மூவகைப்படும்.

## ஏந்திசைச் செப்பல்:-

வெண்சீர் வெண்டளை மட்டும் வரும். உயந்தொலிப்பது ஏந்திசைச் செப்பலாகும்.

(எ-டு)

யாதானு நாடாமல் ஊராமால் என்னொருவன்
சாந்துணையும் கல்லாத ஆறு.

## தூங்கிசைச் செப்பல்:-

இயற்சீர் வெண்டளை மட்டும் வரும். தாழ்ந்தொலிப்பது தூங்கிசைச் செப்பலாகும்.

(எ-டு)

பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி நூறிய நீர்.

## ஒழுகிசைச் செப்பல்:-

வெண்சீர் வெண்டளையும், இயற்சீர் வெண்டளையும் விரவி வரும். கலந்தொலிப்பது ஒழுகிசைச் செப்பலாகும்.

(எ-டு)

கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிருந் தொழும்.

## ஆசிரியப்பாவிற்குரிய ஓசை:-

காரிகையில் ‘‘சீர்சால் அகவல்’’ என்று சிறப்பித்துக் கூறப்பெற்றுள்ளமையால், ஆசிரியப்பாவிற்குரிய அகலோசையானது ஏந்திசை அகவல், தூங்கிசை அகவல், ஒழுகிசை அகவல் என மூவகைப்படும்.

**ஏந்திசை அகவல்:-**

நேரொன்றாசிரியத்தளை மட்டும் பெற்று வரும்.

(எ-டு)

"போது சாந்தம் பொற்ப ஏந்தி
ஆதி நாதற் சேர்வோர்
சோதி வானந் துன்னுவாரே"

**தூங்கிசை அகவல்:-**

நிரையொன்றாசிரியத்தளை மட்டும் வரும்.

(எ-டு)

மணிதிகழ் அவிரொளி வரதனைப்

**ஒழுகிசை அகவல்:-**

நேரொன்றாசிரியத்தளையும் நிரையொன்றாசிரியத்தளையும் விரவி வரும்.

(எ-டு)

"குன்றக் குறவன் காதல் மடமகள்"

**கலிப்பாவிற்குரிய ஓசை:-**

காரிகையில் "சென்றோங்கு துள்ளல்" எனச் சிறப்பித்துக் கூறப்பெற்றுள்ளமையால் கலிப்பாவிற்குரிய துள்ளலோசை ஏந்திசைத் துள்ளல், அகவல் துள்ளல், பிரிந்திசைத் துள்ளல் என மூவகைப்படும்.

**ஏந்திசைத் துள்ளல்:-**

கலித்தளை மட்டும் வரும்.

(எ-டு)

"முருகவிழ்தா மரைமலர்மேன் முடியிமையோர் புடைவரவே

**அகவல் துள்ளல்:-**

வெண்சீர் வெண்டளையும் கலித்தளையும் விரவி வரும்.

(எ-டு)

செல்வப்போர்க் கதக்கண்ணன் செயிர்த்தெறிந்த சினவாழி

**பிரிந்திசைத் துள்ளல்:-**

கலித்தளையோடு பலதளைகளும் விரவி வரும்.

(எ-டு)

‘‘மணிகிளர் நெடுமுடி மாயவனும் தம்முனும்போன்(று)

**வஞ்சிப்பாவிற்குரி ஓசை:-**

காரிகையில் ‘‘நண்பாவமைந்த நலமிகு தூங்கல்’’ எனச் சிறப்பித்துக் கூறப்பெற்றுள்ளமையால் வஞ்சிப்பாவிற்குரிய தூங்கலோசை ஏந்திசைத் தூங்கல் அகவல் தூங்கல், பிரிந்திசைத் தூங்கல் என மூவகைப்படும்.

**ஏந்திசைத் தூங்கல்:-**

ஒன்றிய வஞ்சித்தளை மட்டும் வரும்.

(எ-டு)

‘‘வினைத்திண்பகை விழச்செற்றவன்.

**அகவல் தூங்கல்:-**

ஒன்றாத வஞ்சித்தளை மட்டும் வரும்.

(எ-டு)

‘‘வானோர்தொழ வண்தாமரைத்

**பிரிந்திசைத் தூங்கல்:-**

பல தளையும் விரவி வரும்.

(எ-டு)

தொடியுடைய தோள் மணந்தனன்

(புறம்-239)

## வெண்பாவும் இனமும்

நான்கு வகைப் பாக்களுள் தலைமைத் தன்மை உடையதாகச் சிறப்புப் பெற்று விளங்குவது வெண்பா ஆகும். இதற்கு வெள்ளைப்பா, அந்தணர்பா என்னும் வேறு பெயர்களும் உண்டு.

## வெண்பாவின் பொதுவிலக்கணம்:-

செப்பலோசை பெற்று வரும். ஈற்றடி முச்சீராய் ஏனையடி நாற்சீராய் அமையும். தேமா முதலான இயற்சீர் நான்கையும் தேமாங்காய் முதலான வெண்சீர் நான்கையும் சீராகப் பெறும். வெண்சீர் வெண்டளை, இயற்சீர் வெண்டளை என்னும் இரண்டு தளைகளை மட்டுமே பொருந்தி வரும். பிற தளைகளை ஏற்காது. நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்பாடுகளைப் பெற்ற சீர்கள் நான்கனுள் ஒன்றைக் கொண்டே முடிவுறும்.

செப்பலோசையுடையதாய், ஈற்றடி மூன்று சீர்களைக் கொண்டதாய், ஏனைய அடிகள் நாற்சீர்களை உடையதாய், வெண்சீர் வெண்டளையும் இயற்சீர் வெண்டளையும் பயின்று, வேற்றுத்தளை விரவாது நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்ப்பாட்டால் முடிவது வெண்பாவாகும்.

## வெண்பாவின் வகைகள்:-

வெண்பா 1.குறள் வெண்பா, 2.நேரிசை வெண்பா, 3.இன்னிசை வெண்பா, 4.சிந்தியல் வெண்பா, 5.பஃறொடை வெண்பா என ஐந்து வகைப்படும்.

## குறள் வெண்பா:-

வெண்பாவின் பொது இலக்கணங்களைப் பெற்று, இரண்டு அடிகளைக் கொண்டு வரும் வெண்பாவினைக் குறள் வெண்பா என்பர்.

(எ-டு)

உடையார் முன் இல்லார்போல் ஏக்கற்றுங் கற்றார்
கடையரே கல்லா தவர்.

## நேரிசை வெண்பா:-

இரண்டு குறள் வெண்பாவாய் நடுவில் முதற்றொடைக்கு ஏற்ற தனிச்சொல்லால் அடி நிரப்பிச் செப்பலோசை குன்றாது முதலிரண்டடியும் ஓர் எதுகை பெற்றும், பின்னிரண்டடியும் மற்றோர் எதுகை பெற்றும் வருமாயினும், நான்கு அடிகளுமே ஒரே எதுகை பெற்று வருமாயினும் அஃது இருகுறள் நேரிசை வெண்பா அல்லது நேரிசை வெண்பா என்று கூறப்பெறும்.

(எ-டு)

தடமண்டு தாமரையின் தாதா(டு) அலவன்
இடமண்டிச் செல்வதனைக் கண்டு – பெடைஞெண்டு
பூழிக் கதவடைக்கும் புத்தூரே போய்கடிந்(து)
ஊழி நாடாயினார் ஊர்.

## ஆசிடை நேரிசை வெண்பா:-

இரண்டு குறள் வெண்பாவாய் தனிச்சொல்லால் அடியை நிரப்பி, முதற்குறட்பாவின் ஈற்றுச்சீரும் தனிச்சொல்லும் தளைப்பொருத்தமின்றி வெண்பாவிற்குரிய செப்பலோசை மாறுபட்டு ஒலிக்கும் போது, முதற்குறட்பாவின் இறுதிச்சீரோடு ஒன்றோ இரண்டோ அசை கூட்டப்பெறும். இதனை ஆசிடை நேரிசை வெண்பா என்பர்.

(எ-டு)

தாமரையின் தாதாடித் தண்டுவலைச் சேறளைந்து
தாமரையின் நாற்றமே தான்நாறும் - தாமரைபோல்
கண்ணான் முகத்தான் கரதலத்தான் சேவடிஎம்
கண்ணார்வம் செய்யும் கருத்து.

(நா-நேர், றும்-நேர்-ஈர்ஆசு)

## இன்னிசை வெண்பா:-

நேரிசை வெண்பாவைப் போல நான்கடிகளைக் கொண்டு இயற்றப்பெறுவது இன்னிசை வெண்பாவாகும். ஒரு விகற்பமோ பல விகற்பமோ பெற்றுத் தனிச்சொல் பெறாமல் வருவதே இன்னிசை வெண்பா எனப்படும்.

(எ-டு)

துகள்தீர் பெருஞ்செல்வம் தோன்றியக்கால் தொட்டுப்
பகடு நடந்தகூழ் பல்லாரோ(டு) உண்க
அகடுற யார்மாட்டும் நில்லாது செல்வம்
சகடக்கால் போல வரும்.

## சிந்தியல் வெண்பா:-

வெண்பாவிற்குரிய பொது இலக்கணத்தைப் பெற்று, மூன்று அடிகளால் வரும் வெண்பா சிந்தியல் வெண்பா எனப்படும். இச்சிந்தியல் வெண்பா நேரிசைச் சிந்தியல் வெண்பா, இன்னிசை வெண்பா என இருவகைப்படும்.

## நேரிசைச் சிந்தியல் வெண்பா:-

நேரிசை வெண்பாப் போல, இரண்டாம் அடியின் இறுதி தனிச்சொல் பெற்று மூன்று அடியில் வருவது நேரிசைச் சிந்தியல் வெண்பா எனப்படும். இவ்வெண்பா ஒரு விகற்பத்தாலும் இரண்டு விகற்பத்தாலும் வரும்.

(எ-டு)

அறிந்தானை ஏத்தி அறிவாங்(கு) அறிந்து
சிறந்தார்க்குச் செவ்வன் உரைப்ப – சிறந்தார்
சிறந்தமை ஆராய்ந்து கொண்டு.

-ஒரே விகற்பத்தால் வந்தது.

(எ-டு)

நற்கொற்ற வாயில் நறுங்குவளைத் தார்கொண்டு
சுற்றும்வண்டு ஆர்ப்ப புடைத்தாளே – பொன்தேரான்
பாலைநல் வாயில் மகள்.

-இரு விகற்பத்தால் வந்துள்ளது.

## இன்னிசைச் சிந்தியல் வெண்பா:-

இன்னிசை வெண்பாவைப் போலத் தனிச்சொல் இல்லாமல் ஒரு விகற்பமோ பல விகற்பமோ பெற்று மூன்று அடிகளால் அமைவது.

(எ-டு)

முல்லை முறுவலித்து காட்டின – மெல்லவே
சேயிதழ்க் காந்தள் துடுப்பு ஈன்ற – போயினார்
திண்தேர் வரவுரைக்கும் கார்.

-பல விகற்பத்தால் வந்துள்ளது.

## பஃறொடை வெண்பா:-

வெண்பாவிற்குரிய பொது இலக்கணத்தைப் பெற்று, நான்கு அடியின் மிக்க பல அடியால் வருவது.

## குறள் வெண்பாவின் இனங்கள்:-

வெண்செந்துறை, குறள்தாழிசை இவை இரண்டும் குறள் வெண்பாவின் இனங்களாகும்.

## குறள் வெண் செந்துறை:-

இரண்டு அடியாய்த் தம்முன் அளவொத்து வருவது வெண்செந்துறை. இதனைச் செந்துறை வெள்ளை என்றும் கூறுவர்.

(எ-டு)

ஆர்கலி உலகத்து மக்கட் கெல்லாம்
ஓதலிற் சிறந்தன்று ஒழுக்க முடைமை.

## குறள் தாழிசை:-

நான்கு சீர்களின் மிக்குப் பல சீரால் வந்த அடி இரண்டாய், ஈற்றடி குறைந்து வருவனவும், வெண்செந்துறையில் சிதைந்து வருவனவும், செப்பலோசை சிதைந்து வரும் குறள் வெண்பாவைக் குறள் தாழிசை என்பர்.

(எ-டு)

பிண்டியின் நீழல் பெருமான் பிடர்த்தலை'
மண்டலம் தோன்றுமால் வாழி அன்னாய்.

## வெண்பாவின் இனங்கள்:-

வெண்டாழிசை, வெண்டுறை, வெளி விருத்தம் ஆகிய மூன்றும் வெண்பாவிற்குரிய இனங்களாகும்.

## வெண்டாழிசை:-

மூன்றடியால், ஈற்றடி வெண்பாப் போல மூன்று சீர்களைக் கொண்டு முடிவது வெண்டாழிசை எனப்படும். இது வெள்ளொத்தாழிசை என்றும் வழங்கப்பெறும்.

(எ-டு)

நண்பி தென்று தீய சொல்லார்
முன்பு நின்று முனிவ செய்யார்
அன்பு வேண்டு பவர்.

## வெண்டுறை:-

மூன்று அடிச் சிறுமையாய், ஏழடிப் பெருமையாய், இடையிடை நான்கடியானும், ஐந்தடியானும், ஆறடியானும் வந்து பின்னர் சில அடி சில சீர் குறைந்து வருவன வெண்டுறை எனப்படும்.

(எ-டு)

"தாளார் அல்லாதார் தாம்பலர் ஆயக்கால் என்னாம் என்னாம்
ஆளியைக் கண்டஞ்சி யானைதன் கோடு இரண்டும்
பீலிபோல் சாய்த்துவிழும் பிளிற்றி யாங்கே"

## வெளிவிருத்தம்:-

மூன்று அடிகளைக் கொண்டும், நான்கடிகளைக் கொண்டும் தம்முள் அளவொத்து முடிந்து, அடிதோறும் இறுதிக்கண் ஒரு சொல்லே தனிச்சொல்லாய் வருவது வெளிவிருத்தம் எனப்படும்.

‘‘கொண்டல் முழங்கினவால் கோபம் பரந்தனவால்- என்செய்கோயான்
வண்டு வரிபாட வார்தளவம் பூத்தனவால் - என்செய்கோயான்
எண்திசையும் தோகை இருந்(து) அகவி – என்செய்கோயான்

## பயிற்சி வினாக்கள்

### குறு வினாக்கள்:-

1. நான்கு வகைப்பாக்களுக்குரிய அடிகளை எழுதுக.
2. நான்கு வகைப்பாக்களுக்குரிய ஓசையை எழுதுக.
3. குறள் வெண்பாவின் இனங்கள் யாவை?
4. வெண்பாவின் இனங்கள் யாவை?
5. வெண்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.

### கட்டுரை வினா:-

1. வெண்பாவின் இலக்கணம் கூறி, அதன் வகைகளை விளக்கிக் கட்டுரை வரைக.

# பாடம் - 5

## ஆசிரியப்பாவும் இனமும்

நால்வகைப் பாக்களுள் பெருமைமிக்க பாவாக விளங்குவது ஆசிரியப்பா ஆகும். பல பொருள்களையும் ஆசிரியனைப் போலச் சொல்லும் ஆற்றலால் ஆசிரியப்பாவாயிற்று. இதனை அரசர்பா என்றும் அகவற்பா என்றும் குறிப்பிடுவர்.

### பொதுவிலக்கணம்:-

அகவலோசையைப் பெற்று, நான்கு சீர்களைக் கொண்ட அளவடியால் அமையும். தேமா முதலான ஈரசைச்சீர்கள் நான்கையும் மிகுதியாகப் பெற்று, காய்ச்சீர்களைக் குறைவாகப் பெறும். ஆசிரியத்தளைகளை மிகுதியாகப் பெற்று வரும். வெண்டளை, கலித்தளை ஆகிய இரண்டும் விரவி வரும். கருவிளங்கனி, கூவிளங்கனி ஆகிய வஞ்சியுரிச்சீர்களும் வஞ்சித்தளையும் ஆசிரியப்பாவில் இடம் பெறாது. இவையே ஆசிரியப்பாவின் பொதுவிலக்கணம் ஆகும்.

### வகைகள்:-

1. நேரிசை ஆசிரியப்பா – ஓசையால் பெற்ற பெயர்
2. இணைக்குறள் ஆசிரியப்பா – அடியால் பெற்ற பெயர்
3. நிலைமண்டில ஆசிரியப்பா – பொருளால் பெற்ற பெயர்
4. அடிமறி மண்டில ஆசிரியப்பா – தொடையால் பெற்ற பெயர்

என நான்கு வகைப்படும்.

### நேரிசை ஆசிரியப்பா:-

ஆசிரியப்பாவிற்குரிய பொது இலக்கணங்களைப் பெற்று, ஈற்றயலடி மூன்று சீர்களைக் கொண்டு, ஏனைய அடியெல்லாம் நான்கு சீர்களைப் பெற்று வருவது நேரிசை ஆசிரியப்பா என்பபடும்.

(எ-டு)

நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று
நீரினும் ஆரள வின்றே சாரல்
கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே”.

(குறுந்-3)

## இணைக்குறள் ஆசிரியப்பா:-

முதலடியும் இறுதியடியும் ஒத்து இடையில் நிற்கும் அடிகள் இரண்டும் பலவும் ஒரு சீர் குறைந்தும் இருசீர் குறைந்தும் வருமாயின் அது இணைக்குறள் ஆசிரியப்பா எனப்படும்.

(எ-டு)

நீரின் தண்மையும் தீயின் வெம்மையும்
சாரச் சார்ந்து
தீரத் தீரும்
சாரல் நாடன் கேண்மை
சாரச் சாரச் சார்ந்து
தீரத் தீரத் தீர்பொல் லாதே''.

## நிலைமண்டில ஆசிரியப்பா:-

எல்லா அடிகளும் தம்முள் ஒத்து நாற்சீரடியால் வருவது நிலைமண்டில ஆசிரியப்பா எனப்படும்.

(எ-டு)

''வேரல் வேலி வேர்க்கோட் பலவின்
சாரல் நாட செவ்வியை ஆகுமதி
யார.:. தறிந்திசி னோரே சாரல்
சிறுகோட்டும் பெரும்பழம் தூங்கி யாங்கிவள்
உயிர்தவச் சிறிது காமமோ பெரிதே''.

(குறுந்-18)

## அடிமறி மண்டில ஆசிரியப்பா:-

எல்லா அடியும் தம்முள் அளவொத்து விருப்பம் போல் அடிகளை முதல், நடு, இறுதியாக மாற்றி எப்படி அமைத்தாலும் ஓசையும் பொருளும் பிழைபடாது வருவது அடிமறி மண்டில ஆசிரியப்பா எனப்படும்.

(எ-டு)

''சூரல் பம்பிய சிறுகான் யாறே
சூரர மகளிர் ஆரணங் கினரே
வாரல் எனினே யான்அஞ் சுவலே
சாரல் நாட நீவர லாறே''.

## ஆசிரியப்பாவின் இனங்கள்:-

ஆசிரியத் தாழிசை, ஆசிரியத்துறை, ஆசிரிய விருத்தம் ஆகிய மூன்றும் ஆசிரியப்பாவின் இனங்களாகும்.

## ஆசிரியத்தாழிசை:-

ஒரு பொருள்மேல் மூன்றடுக்கி வருவதோடு மூன்றடியாய்த் தம்முள் அளவொத்து வருவன ஆசிரியத் தாழிசை ஆகும். ஆசிரியத் தாழிசை தனியேயும் வரப்பெறும்.

## ஆசிரியத்துறை:-

நான்கடியாய் ஈற்றயலடி குறைந்து வருவனவும், நான்கடியாய், ஈற்றயலடி குறைந்து இடைமடக்காய் வருவனவும், நான்கடியாய் இடையிடை குறைந்து வருவனவும், நான்கடியாய் இடையிடை குறைந்து இடைமடக்காய் வருவனவும் ஆசிரியத்துறை ஆகும்.

## ஆசிரிய விருத்தம்:-

கழிநெடிலடி நான்கு தம்முள் அளவொத்து வருவன ஆசிரிய விருத்தம் எனப்படும்.

“தருக்கியல் தாழிசை மூன்றடி ஒப்பன; நான்கடியாய்
எருத்தடி நைந்தும் இடைமடக்காயும் இடைஇடையே
சுருக்கடியாயும் துறையாம் குறைவில் தொல்சீர் அகவல்
விருத்தம் கழிநெடில் நான்கு ஒத்து இறுவது மெல்லியலே

(யா.காரிகை-29)

## பயிற்சி வினாக்கள்

### குறு வினாக்கள்:

1. ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.
2. ஆசிரியப்பாவின் வகைகள் யாவை?

### கட்டுரை வினாக்கள்:

1. ஆசிரியப்பாவின் இனங்களை விவரிக்க.
2. ஆசிரியப்பாவின் வகைகளை விளக்கிக் கட்டுரை வரைக.

# பாடம் - 6

# கலிப்பாவும் இனமும்

நால்வகைப் பாக்களுள் ஓசையால் சிறப்புற்று விளங்குவது கலிப்பா ஆகும். இதனை வணிகர்பா எனக் கூறுவர்.

## கலிப்பாவின் பொதுவிலக்கணம்:-

துள்ளல் ஓசையைக் கொண்டு, நேரீற்று இயற்சீரும் நிரை நடுவாகிய வஞ்சியுரிச்சீரும் வாராது. நிரை முதலாகிய வெண்பாஉரிச்சீர் மிகுந்து தன்தளையும் அயற்றளையும் பொருந்தி வருதலோடு, தரவு, தாழிசை என்னும் முதலுறுப்பும் அராகம், அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம் என்னும் துணையுறுப்பு உடையதாய் வருவது கலிப்பா.

## வகைகள்:-

கலிப்பாவானது ஒத்தாழிசைக் கலி, வெண்கலி, கொச்சகக்கலி என்னும் மூன்று பெரும் பிரிவுகளையும் பல உட்பிரிவுகளையும் உடையது.

## ஒத்தாழிசைக்கலிப்பா - (உறுப்பினால் பெற்ற பெயர்)

1. நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா
2. அம்கோதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா
3. வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா

என மூன்று வகைப்படும்.

வெண்கலிப்பா – (ஓசையால் அமைந்த பெயர்)

கொச்சகக் கலிப்பா – (பொருளால் வந்த பெயர்)

1. தரவு கொச்சகக் கலிப்பா
2. தரவிணைக் கொச்சகக் கலிப்பா
3. சில்தாழிசைக் கொச்சகக் கலிப்பா
4. பல்தாழிசைக் கொச்சகக் கலிப்பா- உறுப்பினால் பெற்ற பெயர்
5. மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா – பொருளால் பெற்ற பெயர்

என்பனவாகும்.

## கலிப்பாவின் உறுப்புக்கள்:-

### 1.தரவு:-

கலிப்பாவின் முதல் உறுப்பாக விளங்குவது, செய்யுளில் கூறப்போகும் செய்தியைத் தொடங்கி வைப்பது இதன் பணியாகும். தரவிற்கு எருத்தம் (பிடரி) என்னும் வேறு பெயர்களும் உண்டு.

### 2.தாழிசை:-

தாழ்ந்து ஒலிக்கின்ற இயல்புடையது தாழிசை என்னும் முதன்மை உறுப்பாகும். தரவிற்கும் சுரிதகத்திற்கும் இடையில் வருவதால் இதனை இடைநிலைப்பாட்டு என்றும் கூறுவர்.

### 3.தனிச்சொல்:-

பொருள் தொடர்புடையதாய் ஓரசையாகவோ ஒரு சீராகவோ நிற்பது தனிச்சொல் ஆகும். இதற்கு விட்டிசை, தனிநிலை, கூன், அசைநிலை என்னும் வேறு பெயர்களும் உண்டு.

### 4.சுரிதகம்:-

கலிப்பாவின் துணை உறுப்புக்களுள் ஒன்று சுரிதகமாகும். இது பாவின் ஈற்றில் அமைவதாகும். நீர்ச்சுழி போன்று சுருங்கிப் பொருளை முடிக்கும் இதனை முடிவுரையாகக் கொள்ளலாம். இதற்கு அடக்கியல், வாரம், வைப்பு, போக்கியல் என்னும் வேறு பெயர்களும் உண்டு.

### 5.அராகம்:-

கலிப்பாவின் துணை உறுப்புக்களுள் அராகமும் ஒன்று. இச்சொல்லிற்கு இசை என்பது பொருளாகும். இவ்வுறுப்புக் கருவிளச்சீர்களை மிகுதியாகப் பெற்று வதும். இது வண்ணகம், அடுக்கியல் முடுகியல் என்னும் வேறு பெயர்களாலும் சுட்டப்பெறும்.

### 6.அம்போதரங்கம்:-

அராகத்தை அடுத்து அமையும் உறுப்பு அம்போதரங்கம் ஆகும். தாழிசைக்கும் தனிச்சொல்லிற்கும் இடையிலும் வரும். அராகத்திற்கும் தனிச்சொல்லிற்கும் இடையிலும் வரும். அசையடி, பிரிந்திசைக் குறள், சொற்சீரடி, எண் என்பன அம்போதரங்கத்தின் வேறு பெயர்களாகும்.

# ஒத்தாழிசைக் கலிப்பா

## 1.நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பா:-

முதலில் ஒரு தரவு வந்து, அதன் பின் மூன்று தாழிசை வந்து, அதன்பின் ஒரு தனிச்சொல் வந்து அதனை அடுத்து ஆசிரியப்பாவாலும் வெண்பாவாலும் ஒரு சுரிதக உறுப்புப் பெற்றுச் சொன்ன தன்மையில் திரியாது வருமானால் அது நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பாவாகும்.

## 2.அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா:-

கரைசாரக் கரைசார ஒருகாலைக்கு ஒரு கால் சுருங்கிவரும் நீரலை போல நாற்சீரடியும், முச்சீரடியும், இரு சீரடியுமாகிய, அசையடிகளைத் தாழிசைக்கும் தனிச்சொல்லுக்கும் நடுவே தொடுத்துத் தரவு, தாழிசை, அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம் என்னும் ஐந்து உறுப்புக்களை உடையதாக வருமானால் அது அம்போதரங்க ஒத்தாழிசைக் கலிப்பா என வழங்கப் பெறும்.

## 3.வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா:-

அம்போதரங்க உறுப்புக்கும் தாழிசைக்கும் நடுவே அராக உறுப்புப் பெற்றுத் தரவு, தாழிசை, அராகம், அம்போதரங்கம், தனிச்சொல், சுரிதகம் என்னும் ஆறு உறுப்புக்களையும் உடையதாக வருவது வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பா எனப்படும்.

## வெண்கலிப்பா:-

கலித்தளை பொருந்திக் கலியோசை தழுவியும், வெண்டளை தட்டு வெள்ளோசை தழுவியும் வந்து ஈற்றடி மூன்று சீரினால் முடியுமென்றால் அது வெண்கலிப்பா ஆகும். இதனைக் கலிவெண்பா எனவும் வேறு பெயரிட்டுக் கூறுவர்.

## கொச்சகக் கலிப்பா:-

ஒரு தரவு வந்தும், இரண்டு தரவு வந்தும், தாழிசை சில வந்தும், தாழிசை பல வந்தும், தரவு முதலிய ஆறு உறுப்பும் தம்முன் மயங்கியும், வெண்பாவோடும் ஆசிரியப்பாவோடும் மயங்கியும், தனிச்சொல் இடையிடையே வந்தும், அம்போதரங்கமும் சுரிதகமும் அருகி வந்தும், கலிப்பாவிற்குக் கூறப்பெற்ற பொது முறையில் மாறிவருவன கொச்சகக் கலிப்பா ஆகும்.

**1.தரவு கொச்சகக் கலிப்பா:-**

ஒரு தரவு மட்டும் வருவது தரவு கொச்சகக் கலிப்பா ஆகும். அத்தரவோடு தனிச்சொல், சுரிதகம் என்னும் உறுப்புக்களைக் கொண்டு அமைவதும் உண்டு.

**2.தரவிணைக் கொச்சகக் கலிப்பா:-**

இரண்டு தரவினைப் பெற்று, சுரிதகம் பெற்றும் பெறாமலும் வருவது தரவிணைக் கொச்சகக் கலிப்பா எனப்படும்.

**3.சி.ஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா:-**

சில தாழிசைகள் பெற்று வருவது, தனிச்சொல் பெற்று, நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பாவின் இலக்கணத்தில் வேறுபட்டு, மூன்று தாழிசைகளைப் பெற்று வருவது சி.ஃறாழிசைக் (சில்தாழிசை) கொச்சகக் கலிப்பா எனப்படும்.

**4.ப.ஃறாழிசைக் கொச்சகக் கலிப்பா:-**

பல தாழிசைகளைப் பெற்று வருவது ப.ஃறாழிசைக் (பல் தாழிசை) கொச்சகக் கலிப்பா எனப்படும்.

**5.மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா:-**

தரவு முதல் சுரிதகம் ஈறாகக் கூறப்பட்ட உறுப்புக்கள் நிற்கும் முறையிலிருந்து மாறியும் கலந்தும் குறைந்தும் மிகுந்தும் வருவது மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா ஆகும்.

**கலிப்பாவின் இனங்கள்:-**

கலிப்பா கலித்தாழிசை, கலித்துறை, கலி விருத்தம் என்னும் மூன்று இனங்களை அடையது.

**கலித்தாழிசை:-**

இரண்டும் இரண்டுக்கு மேற்பட்ட அடிகளைப் பெற்றும் ஈற்றடி மிகுந்து மற்றைய அடிகள் ஒத்தும் ஒவ்வாமலும் அமையும். இதுவே கலித்தாழிசை ஆகும்.

## கலித்துறை:-

ஐந்து சீர்களைக் கொண்ட அடி நான்காய், ஒரு விகற்பமாக நிகழ்வது கலித்துறை எனப்படும்.

## கலி விருத்தம்:-

நான்கு சீர்களைக் கொண்ட அளவடி நான்கால் அமைவது கலி விருத்தம் ஆகும்.

‘‘அடிவரை இன்றி அளவொத்தும் அந்தடி நீண்டு இசைப்பின்
கடிதல் இல்லாக் கலித்தாழிசை ஆகும்; கலித்துறையே
நெடிலடி நான்காய் நிகழ்வது; நேரடி ஈர் இரண்டாய்
விடின்அது ஆகும் விருத்தம்; திருத்தகு மெல்லியலே’’.

(யா.காரிகை-33)

# பாடம் - 7

## வஞ்சிப்பாவும் இனமும்

நான்கு வகைப் பாக்களுள் இறுதியாக இடம் பெறுவது வஞ்சிப்பா. இது குறளடி, சிந்தடி அல்லாத பிற அடிகளை எல்லாம் ஏற்றுக் கொள்ளாமல் பொய்த்து (வஞ்சித்து) வருவதால் வஞ்சிப்பா எனப் பெயர் பெற்றது. இதனை வேளாளர் பா என்றும் கூறுவர்.

### பொதுவிலக்கணம்:-

வஞ்சிப்பா தூங்கலோசையைப் பெற்று, இரண்டு சீர்களைக் கொண்ட குறளடியாலும், மூன்று சீர்களைக் கொண்ட சிந்தடியாலும் வரப்பெறும். காய்ச்சீரும் கனிச்சீரும் மிகுந்து வரும். வஞ்சித்தளைகள் பயின்றும், பிற தளைகள் அருகியும் வரும். தனிச்சொல் பெற்று ஆசிரியச் சுரிதகத்தால் முடிவு பெறும்.

### வஞ்சிப்பாவின் வகை:-

வஞ்சிப்பா குறளடி வஞ்சிப்பா, சிந்தடி வஞ்சிப்பா என இரு வகைப்படும்.

### குறளடி வஞ்சிப்பா:-

குறளடியால் மூன்று முதல் பலஅடி கொண்டு, அடுத்துத் தனிச்சொல் பெற்று, அடுத்து ஆசிரியச் சுரிதகத்தால் முடிவது குறளடி வஞ்சிப்பா எனப்படும்.

(எ-டு)

பூந்தாமரைப் போதலமரத்
தேம்புனலிடை மீன்திரிதர
வளவயலிடைக் களவயின்மகிழ்
வினைக்கம்பலை மனச்சிலம்பவும்
மனைச்சிலம்பிய மணமுரசொலி
வயற்கம்பலைக் கயலார்ப்பவும்
நாளும்,
மகிழும் மகிழ்தூங் கூரன்
புகழ்த லானாப் பெருவண் மையனே.

இப்பாடல் குறளடியால் ஆறு அடி பெற்று, அடுத்து 'நாளும்' எனும் தனிச்சொல் பெற்று, ஆசிரியச் சுரிதகத்தால் முடிந்துள்ளது.

## சிந்தடி வஞ்சிப்பா:-

மூன்று சீர்களைக் கொண்ட அடிகளை உடையதாய்த் தனிச்சொல் பெற்று, ஆசிரியச் சுரிதகத்தால் முடிவது சிந்தடி வஞ்சிப்பா எனப்படும்.

(எ-டு)

தொன்னலத்தின் புலம்பலைப்பத் தொடித்தோண்மேல்
பன்னலத்த கலந்தொலையப் பரிவெய்தி
என்னலத்தகை யிதுவென்னென வெழில் காட்டிச்
சொன்னலத்தகைப் பொருள் கருத்தி னிற்சிறந்தாங் கெனப் பெரிதும்,
கலங்கஞ ரெய்தி விடுப்பவும்
சிலம்பிடைச் செலவுஞ் சேணிவந் தற்றே

இப்பாடல் சிந்தடியாய் நான்கு அடி பெற்று, அடுத்து 'எனப்பெரிதும்' என்ற தனிச்சொல்லைப் பெற்று ஆசிரியச் சுரிதகத்தால் முடிந்துள்ளது.

## வஞ்சிப்பாவின் இனங்கள்:-

வஞ்சித் தாழிசை, வஞ்சித்துறை, வஞ்சி விருத்தம் ஆகிய மூன்றும் வஞ்சிப்பாவின் இனங்களாகும்.

## வஞ்சித்தாழிசை:-

இருசீர்களைக் கொண்ட குறளடி நான்கினைப் பெற்று ஒருபொருள் மேல் மூன்றாய் அடுக்கி வருவது வஞ்சித் தாழிசையாகும்.

## வஞ்சித்துறை:-

இருசீர்களைக் கொண்ட குறளடி நான்காய், ஒரு பொருள் பற்றி ஒரு பாடலாய்த் தனித்து வருவது வஞ்சித்துறை ஆகும்.

## வஞ்சி விருத்தம்:-

மூன்று சீர்களைக் கொண்ட சிந்தடி நான்காய் வருவது வஞ்சி விருத்தமாகும்.

"குறளடி நான்கின மூன்றுஒரு தாழிசை கோதில்வஞ்சித்
துறைஒருவாது தனிவருமாய் விடின் சிந்தடிநான்கு
அறைதரு காலை அமுதே விருத்தம் தனிச்சொல் வந்து
மறைதலில் வாரத்தினால் இறும்வஞ்சி வஞ்சிக்கொடியே

(யா.காரிகை-34)

# பாடம் - 8

## மருட்பா

மருட்பா தனித்தகுதியுடைய பா அன்று. முன்னர் சில வெண்பா அடிகளும், பின்னர் சில அகவலடிகளும் மயங்கி வரும் கலவைப் பாவே மருட்பா என்று வழங்கப் பெறுகின்றது. வெண்பா, ஆசிரியப்பா ஆகிய இருவகைப் பாக்களின் இணைவினால் தோன்றும் புதியதொரு 'ஒட்டுப்பா'வாக மருட்பாவினைக் கொள்ள வேண்டும். வெண்பா அடியும் ஆசிரிய அடியும் சமமாக ஒத்து வருவது சமனிலை மருட்பா; சமமின்றி ஒவ்வாது வருவது வியனிலை மருட்பா எனப்படும்.

### மருட்பாவின் வகைகள்:-

மருட்பா புறநிலை வாழ்த்து மருட்பா, வாயுறை வாழ்த்து மருட்பா, செவியறிவுறூஉ மருட்பா, கைக்கிளை மருட்பா என நான்கு வகைப்படும்.

''பண்பார் புறநிலை பாங்குடைக் கைக்கிளை வாயுறை வாழ்த்து
ஒண்பாச் செவியறிவு என்று இப்பொருள்மிசை ஊனம் இல்லா
வெண்பா முதல்வந்து அகவல் பின்னாக விளையும் என்றால்
வண்பால் மொழிமடவாய் மருட்பா என்னும் வையகமே''.

(யா.காரிசை-35)

### புறநிலை வாழ்த்து மருட்பா:-

வழிபடு தெய்வத்தைப் படர்க்கையாகப் புறத்தே நிறுத்தி, அத்தெய்வத்தால் பயன்பெற வேண்டிநிற்கும் ஒருவனை முன்னிலையாக்கிக் கூறலின், புறநிலை வாழ்த்து எனப்படுகிறது. நீ வணங்குகின்ற தெய்வம் உனக்குச் சிறு இடையூறும் வராமல் பாதுகாப்பதாக! நீ பெறுகின்ற பழியற்ற செல்வம் உன் தலைமுறையினருக்கும் பொருந்தும்படி சிறந்து வாழ்க என வாழ்த்தும் தன்மையில் அமைவதே புறநிலை வாழ்த்து மருட்பாவாகும்.

### வாயுறை வாழ்த்து மருட்பா:-

ஒருவருக்கு சொல்லாகிய மருந்தால் நன்மை தோன்றப்பாடுவது வாயுறை வாழ்த்து ஆகும். வேம்பையும் கடுக்காயையும் சேர்த்துச் செய்த மருந்து உண்ணும் போது கசப்பும் துவர்ப்பும் உடையதாய்த் தோன்றும். பின்னர் அது உடலுக்கு நன்மை பயக்கும். அதுபோலச் சொல்லப்படும் சொல் செவிக்குக் கைப்பினும் உயிர்க்கு உறுதி அளித்து மறுமைக்குப் பாதுகாப்பு அளிக்கும்படி கூறுவதே வாயுறை வாழ்த்து மருட்பாவாகும்.

## செவியறிவுறூஉ மருட்பா:-

செவிக்கு அறிவுறுத்துவதால் இது செவியறிவுறூஉ எனப்பெயர் பெற்றது. ஒருவன் தன்னைத் தானே புகழ்ந்து கொள்ளாமல் சான்றோர்க்குக் கட்டுப்பட்டு அடங்கி நடத்தலைக் கடமையாகக் கொள்ள வேண்டும். இத்தன்மை புலப்படக் கூறுவதே செவியறிவுறூஉ மருட்பா ஆகும்.

## கைக்கிளை மருட்பா:-

ஒத்த தலைவனும் தலைவியும் இயற்கைப் புணர்ச்சிக்கு முன் முதன்முதலாக ஒருவரை மற்றொருவர் காண்பர். அவ்வாறு காணும் போது அவ்விருவரில் ஒருவரிடத்துத் தோன்றும் வேட்கையே கைக்கிளை ஆகும். இதனை ஒருதலைக் காமம் என்று கூறுவர். ஆண் வேட்கை கொள்வது ஆண்பாற் கைக்கிளை, பெண் வேட்கை கொள்வது பெண்பாற் கைக்கிளை ஆகும். இப்பொருண்மையினைப் புலப்படுத்துவது கைக்கிளை மருட்பா ஆகும்.

## பயிற்சி வினாக்கள்

### குறு வினாக்கள்:

1. கலிப்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.
2. கலிப்பாவின் வகைகள் யாவை?
3. கலிப்பாவின் உறுப்புகள் யாவை?
4. கலி வெண்பாவின் இலக்கணத்தை எழுதுக.
5. வஞ்சிப்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.
6. குறளடி வஞ்சிப்பாவினை எடுத்துக்காட்டுடன் விவரிக்க.
7. மருட்பாவின் இலக்கணத்தை எழுதுக.

### கட்டுரை வினாக்கள்:

1. கலிப்பா குறித்துக் கட்டுரை வரைக.
2. கொச்சகக் கலிப்பாவின் வகைகளை விளக்குக.
3. கலிப்பாவின் இனங்களை விளக்கி வரைக.
4. வஞ்சிப்பா குறித்து கட்டுரை வரைக.
5. வஞ்சிப்பாவின் இனங்களை விளக்கி வரைக.
6. மருட்பாவின் வகைகளை விளக்கி வரைக.

## அலகு-3

## தண்டியலங்காரம்-நூல் அறிமுகம்

ஒரு செய்யுளிலுள்ள சொற்களையும் பொருளையும் வேறுபடுத்திக் காட்டி, அவற்றிலுள்ள அழகு, நலம் முதலானவற்றை எடுத்துக்கூறுவது அணியிலக்கணமாகும். வடமொழியில் அணியிலக்கண நூல்கள் பல உள்ளன. தமிழில் தணிடியலங்காரம், மாறனலங்காரம், குவலயாநந்தம், வீரசோழியம், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம் ஆகிய ஏழு நூல்கள் அணியிலக்கணத்தைக் கூறுகின்றன. தொல்காப்பியம் கூறும் உவமையணியிலிருந்தே மற்ற அணிகள் தோன்றின. ஆதலால் அணியிலக்கணத்தைக் கூறிய முதல் தமிழ் நூலாகத் தொல்காப்பியத்தைக் கொள்ளலாம்.

தமிழில் வழங்கும் 'தண்டியலங்காரம்' என்னும் அணியிலக்கண நூல் தண்டி என்பவரால் இயற்றப்பட்டது. இந்நூல் மொழிபெயர்ப்பு வகையைச் சேர்ந்தது. இந்நூலுக்கு முதனூல் 'காவ்யாதர்சம்' எனும் வழமொழி நூலாகும்.

காவ்யாதர்சத்தை அப்படியே தழுவி, அந்நூலில் நான்கு பிரிவுகளில் கூறப்பட்டிருக்கும் இலக்கணச் செய்திகளை மூன்று பிரிவுகளில் அடக்கித் தமிழ்த் தண்டியலங்காரம் சிறப்பாக இயற்றப்பட்டுள்ளது.

இந்நூலில் 125 சூத்திரங்கள் உள்ளன. பொதுவணியியல், பெருளணியியல், சொல்லணியியல் எனும் மூன்று பகுப்புகளை உடையது. தண்டியாசிரியர் அணிகளுக்கு இலக்கணம் கூறியதோடு, அவற்றை விளக்கும் எடுத்துக்காட்டுச் செய்யுள்களையும் தாமே இயற்றியிருக்கிறார்.

## பாடம் - 9

## செய்யுள் வகை

செய்யுள் முத்தகம், குளகம், தொகைநிலை, தொடர்நிலை என நான்கு வகைப்படும்.

செய்யுள் என்பவை தெரிவுற விரிப்பின்
முத்தகம் குளகம் தொகை தொடர்நிலைஎன
எத்திறத் தனவும் ஈர்இரண்(டு) ஆகும்.

(தண்டி.நூற்பா-1)

### முத்தகம்:-

ஒரு கருத்து ஒரு பாடலில் முற்றுப் பெறுவது முத்தகமாகும்.

அவற்றுள்

முத்தகச் செய்யுள் தனிநின்று முடியும்.

(தண்டி.நூற்பா-2)

நான்குவகைச் செய்யுள்களுள் முத்தகச் செய்யுளாவது தனியே நின்று ஒரு பொருளைத் தந்து முடிவதாகும்.

(எ-டு)

என்னேய் சிலமடவார் எய்தற்(கு) எளியவோ
பொன்னே அனபாயன் பொன்நெடுந்தோள் - முன்னே
தனவேய்என் நாளும் சயமடந்தை தோளாம்
புனவேய் மிடைந்த பொருப்பு.

### குளகம்:-

ஒரு கருத்து ஒரு பாடலில் முடியாமல் பல பாடல்களில் கூறப்பட்டு வினையாலோ பெயராலோ முடிக்கப் பெறுவது குளகமாகும்.

“குளகம் பலபாட்(டு) ஒருவினை கொள்ளும்”

(தண்டி-3)

பல பாட்டால் நின்று ஒரு வினையைக் கொண்டு முடிக்கப் பெறுவது குளகச் செய்யுளாகும்.

(எ-டு)

முன்புலகம் ஏழினையும் தாயதுவும் மூதுணர்வோர்
இன்புறக்கங் காநதியை ஈன்றதுவும் - நன்பரதன்
கண்டிருப்ப வைகியதும் கான்போ யதும்அமிர்தம்
உண்டிருப்போர் உட்கொண் டதும்.

வெந்த கரியதனை மீட்டுமக வாக்கியதும்
அந்தச் சிலையினைப் பெண் ஆக்கியதும்-செந்தமிழ்தேர்
நாவலன்பின் போந்ததுவும் நன்னீர்த் திருவரங்கக்
காவலவன் மாவலவன் கால்'.

## தொகைநிலை:-

தனித்தனிச் செய்யுள்கள் பலவற்றைக் கொண்டு தொகுக்கப்படுவது தொகைநிலைச் செய்யுளாகும்.

"தொகைநிலைச் செய்யுள் தோன்றக் கூறின்
ஒருவர் உரைத்தவும் பல்லோர் பகர்ந்தவும்
பொருள் இடம் காலம் தொழில் எனநான்கிலும்
பாட்டினும் அளவினும் கூட்டிய ஆகும்.

(தண்டி-4)

இத்தொகைச் செய்யுள் முழுவதும் ஒருவர் பாடிய செய்யுளாகவோ, பலர் பாடிய செய்யுளாகவோ அமைந்திருக்கும். இது பொருள், இடம், காலம், தொழில், பாடல், அளவு ஆகியவற்றின் அடிப்படையில் தொகுக்கப்பட்டிருக்கும்.

(எ-டு)

| | | |
|---|---|---|
| ஒருவரால் உரைக்கப்பட்டது | - | திருக்குறள் |
| பலரால் உரைக்கப்பட்டது | - | பத்துப்பாட்டு |
| பொருள் பற்றித் தொகுக்கப் பெற்றது | - | புறநானூறு |
| இடம் பற்றி உரைக்கப்பட்டது | - | களவழி நாற்பது |
| காலம் பற்றி உரைக்கப்பட்டது | - | கார் நாற்பது |
| தொழில் பற்றி உரைக்கப்பட்டது | - | ஐந்திணை ஐம்பது |
| பாடல் பற்றித் தொகுக்கப்பட்டது | - | கலித்தொகை |
| அளவு பற்றித் தொகுக்கப்பட்டது | - | குறுந்தொகை |

## தொடர்நிலை:-

ஒன்றைப் பற்றிய கருத்தினைச் சங்கிலித் தொடர் போன்று தொடர்ச்சியாகச் சொல்லுவது தொடர்நிலைச் செய்யுளாகும்.

“பொருளிலும் சொல்லினும் இருவகை தொடர்நிலை”

(தண்டி-5)

பொருளால் தொடர்ந்து சொல்லப்பெறுவது சொல்லால் தொடர்ந்து சொல்லப்பெறுவது எனத் தொடர்நிலைச் செய்யுள் இருவகைப்படும்.

## பொருள் தொடர்நிலைச் செய்யுள்:-

பொருள் தொடர்நிலைச் செய்யுள், பெருங்காப்பியம், காப்பியம் என இருவகைப்படும்.

“பெருங்காப் பியமே காப்பியம் என்றாங்(கு)
இரண்டாய் இயலும் பொருள்தொடர் நிலையே”

(தண்டி-6)

## பெருங்காப்பியத்தின் இலக்கணம்:-

“அவற்றுள்
பெருங்காப் பியநிலை பேசும் காலை
வாழ்த்து வணக்கம் வருபொருள் இவற்றின்ஒன்(று)
ஏற்புடைத்(து) ஆகி முன்வர இயன்று
நாற்பொருள் பயக்கும் நடைநெறித்(து) ஆகித்
தன்னிகர் இல்லாத் தலைவனை உடைத்தாய்
மலை கடல் நாடு வளநகர் பருவம்
இருசுடர்த் தோற்றம் என்(று) இனையன புனைந்து
நன்மணம் புணர்த்தல் பொன்முடி கவித்தல்
பூம்பொழில் நுகர்தல் புனல்விளை யாடல்
தேம்பிழி மதுக்களி சிறுவரைப் பெறுதல்
புலவியில் புலத்தல் கலவியில் களித்தல் என்(று)
இன்னை புனைந்த நன்நடைத்(து) ஆகி
மந்திரம் தூது செல(வு) இகல் வென்றி
சந்தியில் தொடர்ந்து சருக்கம் இலம்பகம்
பரிச்சேதம் என்னும் பான்மையின் விளங்கி
நெருங்கிய சுவையும் பாவமும் விரும்பக்
கற்றோர் புனையும் பெற்றிய(து) என்ப,

வாழ்த்து, வணக்கம், உரைக்கும் பொருள் உணர்த்தல் என்னும் பலவும் பொருந்துவனவாக முன்வர இது நடக்கும், அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு உறுதிப் பொருள்களையும் கூறும். தன்னிகரில்லாத் தலைவனை உடையது. மலை, கடல்,

நாடு, வளநகர், பருவம், சூரிய சந்திரர்களின் தோற்றம், மறைவு என்று இன்னோரன்ன வருணனைகளை உடையதாய் வரும். திருமணம், இல்வாழ்க்கை, கல்வி, முடிசூட்டு, பொழில் நுகர்ச்சி, புனல் விளையாட்டு, உண்டாட்டு, மக்கட்பேறு, புலவியிற் புலத்தல், கலவியிற் களித்தல் என்பன புனைந்துரைக்கப்பட்டு இடம் பெறும். மந்திராலோசனை, தூது, ஒற்றரை ஆளுதல், நிரைகோடல், மேற்சேறல், மதிற்புறத்திறுத்தல், களம் வகுத்துப் பொருதல், வெற்றி, நிலையாமையை மிகுத்துக் கூறுதல், கைக்கிளை என்பன கதையையொட்டி அமையும். சருக்கம், படலம், இலம்பகம், பரிச்சேதம், காண்டம் எனும் பிரிவுகளைக் கொண்டு 'சந்தி' என்ற நாடக உறுப்பைத் தழுவி, எண்வகைச் சுவையும் மெய்ப்பாடும் கேட்போர் மதிக்குமாறு புலவரால் புனையப்படும் தன்மையை உடையது. இத்தன்மைகளைக் கொண்டது பெருங்காப்பியம் ஆகும்.

## <u>(சிறு) காப்பியத்தின் இலக்கணம்:-</u>

''அறம்முதல் நான்கினும் குறைபா(டு) உடையது
காப்பியம் என்று கருதப்படுமே''.

(தண்டி-9)

அறம், பொருள், இன்பம், வீடு என்பன உறுதிப் பொருள்கள் ஆகும். இந்நான்கனுள் ஒன்றும் பலவும் குறைந்து அமைவது காப்பியம் என்று கருதப்படும்.

## <u>சொல்தொடர் நிலைச் செய்யுள்:-</u>

''செய்யுள் அந் தாதி சொற்றொடர் நிலையே''

(தண்டி-11)

ஒரு செய்யுளின் இறுதி, அடுத்து வருகின்ற மற்றொரு செய்யுளுக்குத் தொடக்கமாக அமைத்துப் பாடப் பெறுவது சொற்றொடர் நிலைச் செய்யுளாகும்.

(எ-டு)

அந்தாதி, கலம்பகம், இரட்டை மணிமாலை, மும்மணிக் கோவை, நான்மணி மாலை முதலான நூல்களாகும்.

# பாடம் - 10

## செய்யுள் நெறி

செய்யுள் நெறி வைதருப்பம், கௌடம் என இரண்டு வகைப்படும்.

### வைதருப்ப நெறி:-

விதர்ப்ப நாட்டார் பின்பற்றும் நெறி வைதருப்ப நெறியாகும். அது தெளிவு, அளவு, கற்பனை என்பனவற்றை ஒரெல்லைக்கு உட்படுத்திக் கொள்ளும்.

''செறிவே தெளிவே சமநிலை இன்பம்
ஒழுகிசை உதாரம் உய்த்தலில் பொருண்மை
காந்தம் வலியே சமாதி என்றாங்(கு)
ஆய்ந்த ஈர்ஐங் குணனும் உயிரா
வாய்ந்த என்ப வைதருப் பம்மே''

(தண்டி-13)

செறிவு, தெளிவு, சமநிலை, இன்பம், ஒழுகிசை, உதாரம், உய்த்தலில் பொருண்மை, காந்தம், வலி, சமாதி ஆகிய பத்துக் குணங்களையும் உயிராகக் கொண்டு நடைபெறுவது வைதருப்பநெறியாகும்.

### 1.செறிவு:-

''செறி(வு) எனப் படுவது நெகிழிசை இன்மை''

(தண்டி-15)

செறிவு என்று சொல்லப்படுவது நெகிழ்ந்த இசையின்றி வரத் தொடுப்பதாகும்.

(எ-டு)

சிலைவிலங்கு நீள்புருவம் சென்(று)ஒசிய நோக்கி
முலைவிலங்கிற்(று) என்று முனிவாள் - மலைவிலங்கு
தார்மாலை மார்ப! தனிமை பொறுக்குமோ
கார்மாலை கண்கூடும் போது,

### 2.தெளிவு:-

''தெளி(வு) எனப் படுவது பொருள்புலப் பாடே''

(தண்டி-16)

கவிஞனால் கூறப்பட்ட பொருள் கேட்போர் மனத்தில் எளிதில் விளங்கித் தோன்றுவதே தெளிவு எனக் கூறப்படும்.

(எ-டு)

பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும்.

**3.சமநிலை:-**

மூவகை மெய்யெழுத்துக்களும் தம்முன் சமமாய் நிற்கப் பெறுவது சமநிலை ஆகும்.

''விரவத் தொடுப்பது சமநிலை ஆகும்''

(தண்டி-17)

வல்லெழுத்து, மெல்லெழுத்து, இடையெழுத்து என்னும் மூன்று இனங்களும் தம்முள் கலந்து வரத் தொடுப்பது சமநிலை ஆகும்.

(எ-டு)

சோகம் எவன்கொல் இதழிபொன் தூக்கின சோர்குழலாய்
மேகம் முழங்க விரைசூழ் தளவம் கொடி எடுப்ப
மாக நெருங்கவண் டானம் களிவண்டு பாடஎங்கும்
தோகை நடம்செய்யும் அன்பர் திண்தேர்இனித் தோன்றியதே''

**4.இன்பம்:-**

இனிமைபடத் தொடுப்பது இன்பமாகும்.

''சொல்லினும் பொருளினும் சுவைபடல் இன்பம்''

(தண்டி-18)

சொல்லினால் சுவைபடத் தொடுத்தல், பொருளினால் சுவைபடத் தொடுத்தல் ஆகிய இரண்டும் இன்பம் எனக் கூறப்படும்.

**சொல்லின்பம்:-** வழிமோனை முதலாயின வரத் தொடுப்பது

(எ-டு)

முன்னனத்தம் சிற்றில் முழங்கு கடலோதம் மூழ்கிப் போக
அன்னைக்கு உரைப்பின் அறிவாய் கடலே என்(று) அலறிப் பேரும்
தன்மை மடவார் தளர்ந் துகுத்தவெண் முத்தம் தயங்கு கானல்
புன்னை அரும்(பு) ஏய்ப்பப் போவானரப் போதுறுக்கும் புகாரே எம்ஊர்முள்

**பொருளின்பம்:-** மது காரணமாக மதுகரங்களுக்கு (வண்டுகள்) வரும் மகிழ்ச்சி போலச் செய்யுள் கேட்போர்க்கு வரும் இன்பம்.

(எ-டு)

பொற்றொடிப் புதல்வர் ஓடி ஆடவும்
முற்றிழை மகளிர் முகிழ்முலை திளைப்பவும்
செஞ்சாந்து சிதைந்த மார்பின் ஒண்பூண்
அரிமா அன்ன அணங்குடைத் துப்பின்
திருமா வளவன் தெவ்வார்க்கு ஓக்கிய
வேலினும் வெய்ய கானம் அவன்
கோலினும் தண்ணிய தடமென் தோளே.

## 5.ஒழுகிசை:-

“ஒழுகிசை என்பது வெறுத்திசை இன்மை”

(தண்டி-19)

ஒழுகிசை என்று சொல்லப்படுவது வெறுக்கத்தக்க இன்னாத ஓசையின்றி (இனிய இசை) வரத் தொடுப்பதாகும்.

(எ-டு)

இமையவர்கள் மௌலி இணைமலர்த்தாள் சூடச்
சமையம் தொறும்நின்ற தையல் - சிமைய
மலைமடந்தை வாச மலர்மடந்தை எண்எண்
கலைமடந்தை நாவலோர் கண்.

## 6.உதாரம்:-

கவிஞன் தான் கூறுகின்ற குறிப்பினால் ஒரு சிறப்புப் பொருளை வெளிப்படுத்துவது உதாரமாகும்.

“உதாரம் என்பது ஓதிய செய்யுளில்
குறிப்பின் ஒருபொருள் நெறிப்படத் தோன்றல்”

(தண்டி-20)

கவிஞனால் சொல்லப்பட்ட செய்யுளுள் சொற்கள் ஒரு பொருளை வெளிப்படுத்தும். அப்பொருளே அல்லாமல் அதன் குறிப்பினால் வேறொரு சிறப்புப் பொருளையும் நெறிப்படத் தோன்றச் செய்வது உதாரம் ஆகும்.

(எ-டு)

செருமான வேல்சென்னி தென்உறந்தை யார்தம்
பெருமான் முகம்பார்த்த பின்னர் - ஒரு நாளும்
பூதலத்தோர் தம்மைப் பொருள்நசையால் பாராவாம்
காதலித்துத் தாழ்ந்(து) இரப்போர் கண்.

## 7.உய்த்தலில் பொருண்மை:-

“கருதிய பொருளைத் தெளிவுற விரித்தற்(கு)
உரியசொல் உடைய(து) உய்த்தலில் பொருண்மை”.

(தண்டி-21)

கவிஞன் தன்னால் கருதப்பட்ட பொருளை விளங்குமாறு எடுத்துரைப்பதற்கு உரிய சொற்களை அச்செய்யுளுள் (பிற சொல்லின் துணை நாடாத படி) பெய்து வைத்தலே உய்த்தலில் பொருண்மையாகும்.

(எ-டு)

இன்(று) உமையாள் மாசிலா வாண்முகம்கண்(டு) ஏக்கற்றோ
அன்றி விடஅரவை அஞ்சியோ-கொன்றை
உளராஆ றோடும் ஒளிர்சடையீர் சென்னி
வளராவா(று) என்னோ மதி.

## 8.காந்தம்:-

“உலகஒழுக்(கு) இறுவா(து) உயர்புகழ் காந்தம்

(தண்டி-22)

ஒன்றனை உயர்த்திப் புகழ்கின்ற போது உலக நடைக்கு மாறாமல் புகழ்வது காந்தமாகும்.

(எ-டு)

“ஒருபேர் உணர்வுடனே ஒண்ணிறையும் தேய
வருமே துற(வு) என்பால் வைத்த – ஒரு பேதை
போதளவு வாசப் புரிகுழல்சூழ் வாண்முகத்துக்
காதளவு நீண்(டு) உலவும் கண்.

## 9.வலி:-

வன்மை உடையதாகச் செய்யப்படுவது வலியாகும்.

“வலிஎனப் படுவது தொகைமிக வருதல்”

(தண்டி-23)

தொகைச் சொற்களை மிகுதியாக அமைத்துப் பாடுவது வலி எனப்படும். வேற்றுமை உருபு, உவமஉருபு, உம் போன்றவை மறைந்து வருவன தொகைச்சொற்களாகும். அச்சொற்கள் மிகுதியாக அமையப் பாடுவது வலியாகும்.

(எ-டு)

கான்நிமிர்ந்தால் கண்பரிவ வல்லியோ? புல்லாதார்
மான்அனையார் மங்கலநாண் அல்லவோ? – தான
மழைத்தடக்கை வார்கழற்கால் மானவேற் கிள்ளி
புழைத்தடக்கை நால்வாய்ப் பொருப்பு.

## 10.சமாதி:-

ஒரு பொருளைப் பிறிதொரு பொருளோடு ஒற்றுமைப்படுத்திக் காட்டுவது சமாதியாகும்.

“உரியபொருள் அன்றி ஒப்புடைப் பொருள்மேல்
தரும்வினை புணர்ப்பது சமாதி ஆகும்”

(தண்டி-24)

முதன்மை பெற்ற ஒரு பொருளுக்கு உரிய வினையை, அதனொடு ஒப்புமை உடைய பிறிதொரு பொருள்மேல் தந்து சேர்த்துக் கூறுவது சமாதி ஆகும்.

(எ-டு)

அகலிரு விசும்பில் பாயிருள் பருகிப்
பகல்கான்று எழுதரும் பல்கதிர்ப் பரிதி

## கௌட நெறி:-

கௌட நாட்டார் பின்பற்றிய செய்யுள் நெறி கௌட நெறியாகும்.

“கௌடம் என்பது கருதிய பத்தொடும்
கூடா(து) இயலும் கொள்கைத்(து) என்ப.”

(தண்டி-14)

கௌட நெறி என்று சொல்லப்படும் நெறியாவது வைதருப்ப நெறிக்குக் கூறப்பட்ட பத்துக்குணங்களுள் சிலவற்றைத் தழுவியும் பலவற்றைத் தழுவாமலும் நடக்கும் தன்மை பெற்றது.

வைதருப்ப நெறி பத்தனுள், பொருள் காரணமான இன்பம், ஒழுகிசை, உதாரம், உய்த்தலில் பொருண்மை, சமாதி ஆகிய ஐந்தை மட்டும் கௌட நெறியார் ஏற்றுக் கொள்வர்.

# <u>பயிற்சி வினாக்கள்</u>

## குறு வினாக்கள்:

1. முத்தகச் செய்யுளை விளக்குக.
2. குளகம் என்றால் என்ன?
3. தொகைநிலைச் செய்யுள் என்றால் என்ன?
4. தொடர்நிலைச் செய்யுள் என்றால் என்ன?
5. கௌட நெறியைப் பற்றி விளக்கம் தருக.
6. செறிவு என்றால் என்ன? விளக்குக.
7. காந்தம் விளக்கம் தருக.
8. வைதருப்ப நெறியை விளக்கி வரைக.

## கட்டுரை வினாக்கள்:

1. பெருங்காப்பியத்தின் இலக்கணங்களை எழுதுக.
2. செய்யுள் வகைகளை விளக்குக.
3. செய்யுள் நெறி எத்தனை வகைப்படும்? அவை யாவை?

# பாடம் - 11

## பொருளணியியல்

பொருளினால் ஆகும் தணிகளின் இயல்பைக் கூறுவதால் இவ்இயல் பொருளணியியல் என்னும் பெயரைப் பெற்றது.

### பொருளணிகளின் வகைகள்:-

"தன்மை உவமை உருவகம் தீவகம்
பின்வரு நிலையே முன்ன விலக்கே
வேற்றுப் பொருள்வைப்பே வேற்றுமை விபாவனை
ஒட்டே அதிசயம் தற்குறிப் பேற்றம்
ஏது நுட்பம் இலேசம் நிரல்நிறை
ஆர்வ மொழி சுவை தன்மேம் பாட்டுரை
பரியா யம்மே சமாயிதம் உதாத்தம்
அரிதுணர் அவநுதி சிலேடை விசேடம்
ஒப்புமைக் கூட்டம் மெய்ப்படு விரோதம்
ஒப்புமைக் கூட்டம் மெய்ப்படு விரோதம்
மாறுபடு புகழ்நிலை புகழாப் புகழ்ச்சி
நிதரிசனம் புணர்நிலை பரிவருத் தனையே
வாழ்த்தொ(டு) சங்கீரணம் பாவிகம் இவை
ஏற்ற செய்யுட்(கு) அணிஏழ் ஐந்தே".

(தண்டி-26)

தன்மையணி, உவமையணி, உருவகஅணி, தீவகவணி, பின்வருநிலையணி, முன்னவிலக்கணி, வேற்றுப் பொருள்வைப்பணி, வேற்றுமையணி, விபாவணையணி, ஒட்டணி, அதிசயவணி, தற்குறிப்பேற்றவணி, ஏதுவணி, நுட்பவணி, இலேசவணி, நிரல்நிறையணி, ஆர்வமொழியணி, சுவையணி, தன்மேம்பாட்டுரையணி, பரியாயவணி, சமாயிதவணி, உதாத்தவணி, அவநுதியணி, சிலேடையணி, விசேடவணி, ஒப்புமைக் கூட்டவணி, விரோதவணி, மாறுபடு புகழ்நிலையணி, புகழாப் புகழ்ச்சியணி, நிதரிசன வணி, புணர்நிலையணி, பரிவருத்தனையணி, வாழ்த்தணி, சங்கீரணவணி, பாவிக அணி என்னும் முப்பத்தைந்து அணிகளும் பொருத்தமுடைய செய்யுட்கு உரியன ஆகும்.

தன்மையணி

ஒரு பொருளின் இயல்புத் தன்மையை நேரில் கண்டாற் போல உள்ளபடி விளக்குவது தன்மையணி ஆகும்.

"எவ்வகைப் பொருளும் மெய்வகை விளக்கும்
சொன்முறை தொடுப்பது தன்மை ஆகும்.
(தண்டி-27)

எவ்வகைப்பட்ட பொருளாக இருப்பினும் அப்பொருளின் தன்மையை உள்ளதை உள்ளவாறே விளக்கமாகச் சொற்களால் முறையாகத் தொடுப்பது தன்மையணி ஆகும்.

## தன்மை அணியின் வகைகள்:-

அதுவே
பொருள் குணம் சாதி தொழிலொ(டு) புலனாம்
(தண்டி-28)

தன்மையணியாவது பொருள், குணம், சாதி, தொழில் என்னும் நான்கின் அடிப்படையில் புலப்படும்.

## பொருள் தன்மை:-

ஒரு பொருளிடத்து உள்ள பலவகை இயல்புகளையும் மாறாமல் உள்ளபடி அழகுபடுத்திக் கூறுவது பொருள் தன்மை ஆகும்.

(எ-டு)

நீல மணிமிடற்றன் நீண்ட சடைமுடியன்
நூல் அணிந்த மார்பன் நுதல்விழியன் - தோல் உடையன்
கைம்மான் மறியன் கனல்மருவன் கச்சாலை
எம்மான் இமையோர்க்கு இறை.

சிவபெருமானைச் சிறப்பிக்கும் இப்பாடலில் கண்டம் முதலான பல பொருட்களின் தன்மைகள் உள்ளபடி காட்டப்பட்டமையால் பொருள் தன்மையாயிற்று.

## குணத்தன்மை:-

குணத்தின் உள்ள பல்வகைத் தன்மைகளை உள்ளபடி அழகுற எடுத்துரைப்பது குணத்தன்மை ஆகும்.

(எ-டு)

உள்ளம் குளிர உரோமம் சிலிர்த்(து) உரையும்
தள்ள விழி நீர் அரும்பத் தன்மறந்தாள் - புள் அலைக்கும்
தேன்தா மரைவயல்சூழ் தில்லைத் திருநடம் செய்
பூந்தா மரைதொழுத பொன்.

இச்செய்யுள் தில்லை நடராசப் பெருமானின் திருக்கூத்தைக் கண்டு தொழுத பெண்ணின் மகிழ்ச்சியாகிய குணத்தை எடுத்துரைப்பதால் குணத்தன்மையாயிற்று.

## சாதித்தன்மை:-

ஒரு சாதியிடம் (இனம்) காணப்பெறும் பலவகைத் தன்மைகளை உள்ளவாறு அலங்கரித்துக் கூறுவது சாதித் தன்மையாகும்.

(எ-டு)

பத்தித் தகட்ட கறைமிடற்ற பைவிரியும்
துத்திக் கவைநாத் துளைஎயிற்ற – மெய்த்தவத்தோர்
ஆகத்தான் அம்பலத்தான் ஆரா அமு(து) அணங்கின்
பாகத்தான் சூடும் பணி.

பணி என்னும் சொல் பாம்பு என்னும் சாதியைக் குறிக்கிறது. பாம்பு இனத்தின் தன்மை கூறப்பெற்றதால் இது சாதித் தன்மையாகும்.

## தொழில் தன்மை:-

தொழிலில் உள்ள பல்வேறு தன்மைகளை உள்ளபடி அழகுபடுத்திக் கூறுவது தொழில் தன்மையாகும்.

(எ-டு)

சூழ்ந்து முரன்(று) அணவி வாசம்துதைந்(து) ஆடித்
தாழ்ந்து மதுநுகர்ந்து தா(து) அருந்தும் - வீழ்ந்தபெரும்
பாசத்தார் நீங்காப் பரஞ்சுடரின் பைங்கொன்றை
வாசத்தார் நீங்காத வண்டு.

இப்பாடலில் தேனை உண்ணுதலில் நடைபெறும் பலவகைத் தொழில்களின் தன்மை பேசப்படுவதால் தொழில் தன்மை ஆயிற்று.

## உவமையணி

ஒருவன் தான் கருதிய பொருளை அதனோடு ஒப்புமை உடைய மற்றொரு பொருளோடு இயைபுபடுத்திக் கூறுவது உவமை அணியாகும். பிற அணிகளுக்கு எல்லாம் தாயாக விளங்கும் தன்மை கொண்டது.

"பண்பும் தொழிலும் பயனும் என்(று) இவற்றின்
ஒன்றும் பலவும் பொருளோ(டு) பொருள் புணர்த்(து)
ஒப்புமை தோன்றச் செப்புவ(து) உவமை.

(தண்டி-29)

பண்பு, தொழில், பயன் ஆகியன காரணமாக ஒன்றாகியும் பலவாகியும் வரும் பொருளோடு பொருளை இயைய வைத்து ஒப்புமை புலப்படப் பாடுவது உவமை என்னும் அணியாகும்.

## ஒப்புமை புலப்படுத்துதல்:-

### பண்பு உவமை:-

1. பவளத் தன்னி மேனி – நிற உவமை
2. வேய் புரை பணைத்தோள் - வடிவ உவமை
3. தெம்முனை இடத்தில் சேய்கொல்
   அம்மா அரிவை அவர்சென்ற நாடே – எல்லை உவமை

### தொழில் உவமை:-

அரிமா அன்ன அணங்குடைத் துப்பின்
திருமா வளவன்.

### பயன் உவமை:-

மாரி யன்ன வண்ணகத்
தேர்வேள் ஆயைக் காணிய சென்மே

## இயைய வைத்தல்:-

### 1.ஒரு பொருளுக்கு ஒரு பொருள்

(எ-டு) செவ்வான் அன்ன மேனி

### 2.ஒரு பொருளுக்குப் பல பொருள்:-

(எ-டு) அவ்வான்

இலங்குபிறை அன்ன விளங்குவால் வை எயிற்று.

**3.பல பொருளுக்குப் பல பொருள்:-**

(எ-டு)

களிறு எறி
சுறவினத் தன்ன வாளோர் மொய்ப்ப
மரீஇயோர் அறியாது மைந்துபட் டன்றே

**4.பல பொருளுக்கு ஒரு பொருள்:-**

(எ-டு)

பெரும்பெயர்க் கரிகாலன் முன்னிலைச் செல்லாப்
பீடின் மன்னர் போல
ஓடுவை மன்னால் வாடைநீ எமக்கே.

**உவமையின் வகைகள்:-**

அதுவே
விரியே தொகையே இதர விதரம்
உரைபெறு சமுச்சயம் உண்மை மறுபொருள்
புகழ்தல் நிந்தை நியமம் அநியமம்
ஐயம் தெரிதரு தேற்றம் இன்சொல்
எய்திய விபரீதம் இயம்புதல் வேட்கை
பலபொருள் விகாரம் மோகம் அபூதம்
பலவயின் போலி ஒருவயின் போலி
கூடா உவமை பொதுநீங்கு உவமை
மாலை என்னும் பாலது ஆகும்.

(தண்டி-30)

உவமை அணி, விரி உவமை, தொகை உவமை, இதர விதர உவமை, சமுச்சய உவமை, உண்மை உவமை, மறுபொருள் உவமை, புகழ்தல் உவமை, நிந்தை உவமை, நியம உவமை, அநியம உவமை, ஐய உவமை, தெரிதருதேற்ற உவமை, இன்சொல் உவமை, விபரீத உவமை, இயம்புதல் வேட்கை உவமை, பல பொருள் உவமை, விகார உவமை, மோக உவமை, அபூத உவமை, பலவயின் போலி உவமை, ஒருவயின் போலி உவமை, கூடா உவமை, பொது நீங்கு உவமை, மாலை உவமை என்னும் இருபத்து நான்கு வகைப்படும்.

**1.விரி உவமை:-**

பொருளுக்கும் உவமைக்கும் இடையில் பொதுத்தன்மை வெளிப்பட்டு நிற்பது, பண்பு முதலியன வெளிப்பட்டு நிற்பதும் விரி உவமையாகும்.

(எ-டு)

பால்போலும் இன்சொல் பவளம்போல் செந்துவர்வாய்
சேல்போல் பிறழும் திருநெடுங்கண் - மேலாம்
புயல்போல் கொடைக்கைப் புனல்நாடன் கொல்லி
அயல்போலும் வாழ்வ(து) அவர்.

## 2.தொகை உவமை:-

பண்பு, தொழில், பயன் ஆகிய தன்மைகள் மறைந்து (தொக்கு) நிற்பது தொகை உவமை ஆகும்.

(எ-டு)

தாமரை வாண்முகத்துத் தண்தாளம் போல்முறுவல்
காமரு வேய்புரைதோள் காரிகையீர் - தேமருவும்
பூங்குழலின் வாசப் பொறைசுமந்து நொந்ததோ
பாங்குழலும் தென்றல் பரிசு.

## 3.இதர விதர உவமை:-

பொருள் ஓரிடத்து உவமையாகவும், உவமை ஓரிடத்துப் பொருளாகவும் ஒரு தொடருக்குள்ளே இரண்டடிகளாய் அமையப்பாடுவது இதரவிதர உவமையாகும்.

(எ-டு)

களிக்கும் கயல்போலும் நும்கண்ணும் கண்போல்
களிக்கும் கயலும் கனிவாய்த் - தளிர்க்கொடியீர்
தாமரைபோல் மலரும் நும்முகம் நும்முகம்போல்
தாமரையும் செவ்வி தரும்''.

## 4.சமுச்சய உவமை:-

ஒன்றை ஒப்பது ஒரு காரணத்தால் அன்றி வேறு பலவற்றானும் ஒக்கும் எனக் கூறுவது சமுச்சய உவமையாகும்.

(எ-டு)

அளவே வடி(வு) ஒப்ப(து) அன்றியே பச்சை
இளவேய் நிறத்தானும் ஏய்க்கும் - துளவேய்
கலைக்குமரி போர்துளக்கும் கார்அவுணர் வீரம்
தொலைக்கு(ம்) அரி ஏறுகைப்பாள் தோள்.

இப்பாடலில் மூங்கிலானது கலைமகளின் தோளுக்கு அளவினாலும் வடிவினாலும் ஒப்பாவதோடு பசுமையான நிறத்தினாலும் ஒப்பாகும் எனக் கூறப்பட்டதால் சமுச்சய உவமையாயிற்று.

## 5.உண்மை உவமை:-

ஒரு பொருளுக்கு வேறொரு பொருளை உவமையாகக் கூறிப் பின்னர் அதனை மறுத்துப் பொருளையே கூறி முடிப்பது உண்மை உவமை ஆகும்.

(எ-டு)

தாமரை அன்று முகமே஢து ஈங்(கு) இவையும்
காமருவன்(டு) அல்ல கருநெடுங்கண் - தேமருவு
வல்லியின் அல்லள் இவள்என் மனம்கவரும்
அல்லி மலர்க்கோதை யாள்.

இப்பாடலில் தாமரை, வண், வல்லிக்கொடி ஆகியவை பெண்ணின் உறுப்பிற்கு உவமையாகக் காட்டப்பட்டன. பின்னர் அவை மறுக்கப்பட்டு முகம், கண், பெண் எனக் கூறப்பட்டதால் இது உண்மை உவமையாயிற்று.

## 6.மறுபொருள் உவமை:-

ஒரு பொருளுக்குப் பிறிதொரு பொருளை உவமையாகக் கூறி அப்பொருளுக்கு நிகராவதொரு பொருளைப் பின்னரும் வைத்து உவமிப்பது மறுபொருள் உவமையாகும்.

(எ-டு)

அன்னைபோல் எவ்உயிரும் தாங்கும் அனபாயா
நின்னையார் ஒப்பார் நிலவேந்தர் - அன்னதே
வாரிபுடை சூழ்ந்த வையகத்திற்கு இல்லையால்
சூரியனே போலும் சுடர்.

இப்பாடலில் தாய்க்கு இணையாக முன்னர் வைக்கப்பட்ட பொருள் அனபாயச் சோழன். பின்னர் வைக்கப்பட்ட பொருள் சூரியன். எனவே இப்பாடல் மறுபொருள் உவமையாயிற்று.

## 7.புகழ்தல் உவமை:-

(எ-டு)

இறையோன் சடைமுடிமேல் எந்நாளும் தங்கும்
பிறையேர் திருநுதலும் பெற்ற – தறைகடல்சூழ்

பூவலயம் தாங்கும் அரவின் படம்புரையும்
பாவைநின் அல்குல் பரப்பு.

இதில் உபமானமாக இருக்கும் ஆதிசேடனைப் புகழ்ந்து கூறுவதால் இது புகழ் உவமை அணியாகும்.

## 8.நிந்தை உவமை:-

ஒரு பொருளுக்குக் கூறப்படும் உவமைப்பொருளைப் பழித்துச் சொல்லுவது நிந்தை உவமை ஆகும்.

(எ-டு)

மறுப்பயின்ற வாண்மதியும் அம்மதிக்குக் தோற்கும்
நிறத்தலரும் நேர்ஒக்கு மேனும் - சிறப்(பு) உடைத்துத்
தில்லை பெருமான் அருள்போல் திருமேனி
முல்லைப்பூங் கோதை முகம்.

தலைவியின் முகத்திற்குக் களங்கமுடைய சந்திரன், குவியும் தாமரை என்னும் பழிப்பிற்குரிய பொருள்களை உவமைகளாகக் காட்டப்பட்டன. ஆதலால் இப்பாடல் நிந்தை உவமையாயிற்று.

## 9.நியம உவமை:-

இந்தப் பொருளுக்கு இந்தப் பொருளே உவமையாகும் அன்றிப் பிறபொருள்கள் உவமை ஆகாது என்னும் பொருள்படத் தேற்றேகாரம் கொடுத்துத் துணிவு படக் கூறுவது நியம உவமையாகும்.

(எ-டு)

தாதுஒன்று தாமரையே நின்முகம் ஒப்பதுமற்(று)
யா(து) ஒன்றும் ஒவ்வா(து) இளங்கொடியே – மீ(து)உயர்ந்த

கேலே பணியப் புலிஉயர்த்த செம்பியர்கோன்
வேலே விழிக்கு நிகர்.

இப்பாடலில் முகத்திற்குத் தாமரையே, விழிக்கு வேலே! என உவமைப்பொருள்கள் தேற்றேகாரம் கொடுத்து சிறப்பிக்கப்பட்டதால் இது நியம உவமையாயிற்று.

## 10.அநியம உவமை:-

முன்பு கூறிய உவமையைத் தவிர வேறு பொருளும் உவமையாகும் எனக் கூறுவது அநியம உவமையாகும்.

(எ-டு)

கவ்வை விரிதிரைநீர்க் காவிரிசூழ் நன்னாட்டு
மவ்வல் கமழும் குழல் மடவாய் - செவ்வி
மதுவார் கவிரேநின் வாய்போல்வ(து) அன்றி
அதுபோல்வ(து) உண்டு எனினும் ஆம்.

இப்பாடலில் வாய்க்கு என நியமிக்கப்பட்டது முழுக்க மலராகும். அதனோடு (அதனை ஒத்த) பிறவும் உவமையாகும் எனக் கூறியதால் இது அநியம உவமையாயிற்று.

## 11.ஐய உவமை:-

பொருளையும் அதற்குக் காட்டப்படும் உவமையையும் உறுதியாகக் கூறாமல் இதுவோ? அதுவோ? என ஐயப்பாடு தோன்ற உரைப்பது ஐய உவமை ஆகும்.

(எ-டு)

தா(து) அளவி வண்டு தடுமாறும் தாமரைகொல்
மாதர் விழிஉலவு வாண்முகம்கொல் - யா(து) என்(று)
இருபால் கவர்உற்(று) இடைஊசல் ஆடி
ஒருபால் படா(து)என் உளம்.

தாமரைக்கும் முகத்திற்கும் வேறுபாடு அறியாவண்ணம் ஐயப்படக் கூறுவதால் இப்பாடல் ஐய உவமையாயிற்று.

## 12.தெரிதருதேற்ற உவமை:-

உவமையைக் கூறிப் பின் ஐயுற்ற நிலையில் இருந்து மாறிச் சில காரணங்களைக் கொண்டு இதுவே எனத் துணிந்து தெளிவது தெரிதருதேற்ற உவமையாகும்.

(எ-டு)

தாமரை நாண்மலரும் தண்மதியால் வீ(று) அழியும்
காமர் மதியும் கறைவிரவும் - ஆம் இதனால்
பொன்னை மயக்கும் புனைசுணங்கி னார்முகமே
என்னை மயக்கும் இது.

காலை மலரும் தாமரை மலரும் குளிர்ந்த மதியினால் அழகு அழியும், அழகிய மதியில் களங்கம் உண்டு. இக்குறைகள் இல்லாமையால் அவன் முகமே உயர்ந்தது எனத் துணிவதால் தெரிதருதேற்ற உவமை ஆகும்.

## 13.இன்சொல் உவமை:-

ஒரு பொருளுக்கு அதனினும் சிறந்த ஒன்றை முதலில் உவமையாக்கிக காட்ட வேண்டும். பின்னர் அவ்உவமையின் சிறப்பு, பொருளுக்கு ஒப்பாகுமே அன்றி உயர்வாகாது எனச் சமப்படுத்திக் கூறுவது இன்சொல் உவமை ஆகும்.

(எ-டு)

மான்விழி தாங்கும் மடக்கொடியே நின்வதனம்
மான் முழுதும் தாங்கி வருமதியம் - ஆனாலும்
முற்றிழை நல்லாய்! முகம் ஒப்ப(து) அன்றியே
மற்(று) உயர்ச்சி உண்டோ மதிக்கு.

பெண், மான் விழியை மட்டும் தாங்கியுள்ளாள். ஆனால் சந்திரனோ அந்த மானையே முழுமையாகத் தாங்கி உள்ளது. சந்திரனுக்கு அப்பெருமை இருந்தாலும் அது பெண்ணின் முகத்திற்கு உவமையாகிறது. அதைத் தவிர வேறு சிறப்பு இல்லை என்பதால் இது இன்சொல் உவமையாயிற்று.

## 14.விபரீத உவமை:-

தொன்றுதொட்டு உவமையாக வருவனவற்றைப் பொருளாகவும் பொருளாக வருவனவற்றை உவமையாகவும் மாற்றி உரைப்பது விபரீத உவமையாகும்.

(எ-டு)

திருமுகம் போல்மலரும் செய்ய கமலம்
கருநெடுங்கண் போலும் கயல்கள் - அரிவை
இயல்போலும் மஞ்ஞை இடைபோலும் கொம்பர்
மயல்போலும் யாம்போம் வழி.

நெடுங்காலமாகப் பெண்களின் முகத்திற்குத் தாமரை, கண்களுக்குக் கயல்மீன்கள், சாயலுக்கு மயில், இடைக்குக் கொம்பு என்பன உவமைகளாகக் கூறப்படுகின்றன. அவ் இயல்பிலிருந்து பிறழ்ந்து முகம், கண், சாயல், இடை ஆகிய பொருள்களை உவமையாக்கிக் கூறியதால் இது விபரீத உவமையாயிற்று.

## 15.இயம்புதல் வேட்கை உவமை:-

உவமேயமாகிய ஒரு பொருளை இன்ன பொருள்போல இருக்கிறதென்று சொல்ல விரும்புகின்றது என் உள்ளம் எனக் கூறுவதே இயம்புதல் வேட்கை உவமையாகும்.

(எ-டு)

நன்றுதீது என்(று) உணரா(து) என்னுடைய நன்னெஞ்சம்
பொன்துதைந்த பொற்சுணங்கின் பூங்கொடியே – மன்றல்
மடுத்ததைந்த தாமரைநின் வாண்முகத்திற்(கு) ஒப்(பு) என்(று)
எடுத்து இயம்ப வேண்டுகின்ற(து) இன்று.

இப்பாடலில் முகத்திற்குத் தாமரையை ஒப்பாகச் சொல்ல விரும்புகின்றது என் உள்ளம் எனக் கூறப்பட்டிருப்பதால் இது இயம்புதல் வேட்கை உவமையாயிற்று.

## 16.பலபொருள் உவமை:-

ஒரு பொருளுக்குப் பல பொருள்களை உவமையாகக் காட்டுவது பல பொருள் உவமையாகும்.

(எ-டு)

வேலும் கருவிளையும் மென்மானும் காவியும்
சேலும் வடுவகிரும் செஞ்சரமும் - போலுமால்
தேமருவி உண்டு சிறை வண்டு அறை கூந்தல்
காமருவு பூங்கோதை கண்.

பூங்கோதையின் கண்களுக்கு வேல், கருவிளைமலர், மான், காவி மலர் ஆகிய பலவற்றை உவமையாகக் கூறுவதால் இது பலபொருள் உவமை அணி ஆகும்.

## 17.விகார உவமை:-

ஒரு பொருளுக்கு ஒப்புமையாகக் கூறப்படும் உவமையிலிருந்து ஒன்றைப் பிரித்து கூறுவது விகார உவமை ஆகும்.

(எ-டு)

சீத மதியின் ஒளியும் செழுங்கமலப்
போதின் புதுமலர்ச்சி யும்கொண்டு – வேதாதன்
கைம்மலரான் அன்றிக் கருத்தால் வகுத்(து) அமைத்தான்
மொய்ம்மலர்ப் பூங்கோதை முகம்.

முகத்திற்கு உவமையாகக் கூறப்படுவன சந்திரன், தாமமை, அவற்றிலிருந்து பிரம்மன் முகத்தைப் படைக்கவில்லை. மாறாகச் சந்திரனில் இருந்து ஒளியைக் கொண்டான், தாமதையிலிருந்து மலர்ச்சியைக் கொண்டான். இவ்விரண்டால் உருவாக்கினான் என முகம் வேறு விதமாகக் கூறப்பட்டது. எனவே இது விகார உவமை ஆயிற்று.

## 18.மோக உவமை:-

ஒரு பொருளின் மேல் எழுந்த ஆசை மிகுதியினால் வந்த மனமயக்கம் தோன்ற உரைப்பது மோக உவமையாகும்.

(எ-டு)

கயல்போலும் என்றும்நின் கண்பழிப்பல் கண்ணின்
செயல்போல் பிறழும் திறத்தால் - கயல்புகழ்வல்
ஆரத்தால் நோமருங்குல் அம்தரள வாண்முறுவல்
ஈரத்தால் உள்வெதும்பும் யான்.

இப்பாடலில் கண்ணாகிய பொருளை, உவமையாகிய கயல் மீனுடன் மயக்கம் தோன்ற உவமித்துக் கூறலின் இது மோக உவமையாயிற்று.

## 19.அபூத உவமை:-

முன் இல்லாத ஒன்றை உவமையாக்கி உரைப்பது அபூத உவமை ஆகும். இதனை ‘இல்பொருள் உவமை’ எனவும் வழங்குவர்.

(எ-டு)

எல்லாக் கமலத்து எழிலும் திரண்டு ஒன்றின்
வில்லோர் புருவத்து வேல்நெடுங்கண்-நல்லீர்
முகம் போலும் என்ன முறுவலித்தார் வாழும்
அகம்போலும் எங்கள் அகம்.

இப்பாடலில் எல்லாத் தாமரைகளின் அழகும் ஒன்றினாற் போன்று அமைவது எவ்விடத்தும் இயலாததாகும். ஆதலால் இது அபூத உவமையாயிற்று.

## 20.பலவயிற்போலி உவமை:-

ஒரு தொடர்மொழிக்கண் பல உவமைகள் வரும். அவ்வாறு வரும் உவமைதோறும் உவமஉருபு தோன்றுமாறு அமைப்பது பலவயின் போலி உவமை ஆகும்.

(எ-டு)

மலர்வாவி போல்வாரன் மாதர் கமல
மலர்போலும் மாதர் வதனம் - மலர்சூழ்
அளிக்குலங்கள் போலும் அனகம் அதனுள்
களிக்கும் கயல்போலும் கண்.

இப்பாடலில் மலர்வாவி போல்வர், கமலமலர் போலும், அளிக்குலங்கள் போலும், கயல் போலும் என உவமிக்கப்பட்ட நான்கு இடங்களிலும் போல என்னும் உவமஉருபு வந்ததால் இது பலவயிற் போலி உவமையாயிற்று.

## 21.ஒருவயிற்போலி உவமை:-

உவமைதோறும் உவமைச் சொல் தோன்றாமல் ஓர் இடத்தில் மட்டும் உவமைச்சொல் தோன்ற அமைப்பது ஒருவயின் போலி உவமை ஆகும்.

(எ-டு)

நிழற்கோபம் மல்க நிறைமலர்ப்பூங் காயா
சுழற்கலவ மேல்விரித்த தோகை-தழற்குலவு
தீம்புகை ஊட்டும் செறிகுழலார் போலும்கார்
யாம்பிரிந்தோர்க்(கு) என்னாம் இனி.

இப்பாடலில் செறிகுழலார் போலும் கார் என்பதில் போலும் என்னும் உவமஉருபு, ஓரிடத்தில் மட்டும் இடம் பெற்றுள்ளது. தீம்புகை (போன்ற) தோகை, மயில் (போன்ற) பெண், இந்திரகோபம் (போன்ற) நெருப்பு என்பன உவம உருபுகளோடு சேர்த்து எடுத்துரைக்கப் பெறாததால் இது ஒரு வயிற் போலி உவமையாயிற்று.

## 22.கூடா உவமை:-

ஒரு பொருளுக்குப் பொருந்தாத தன்மை ஒன்றனைப் பொருந்துவதாகக் கொண்டு அதனை ஒன்றற்கு உவமையாக்கி உரைப்பது கூடா உவமை ஆகும்.

(எ-டு)

சந்தனத்தில் செந்தழலும் தண்மதியில் வெவ்விடமும்
வந்தனவே போலுமாய் நும்மாற்றம் - பைந்தொடியீர்
வாவிக் கமல மதிமுகங்கண்(டு) ஏக்கறுவார்
ஆவிக்(கு) இவையோ அரண்.

இப்பாடலில் சந்தனத்தில் நெருப்புப் பிறத்தலும் சந்திரனில் கொடிய நஞ்சு பிறத்தலும் இல்லை. எனவே கூடா உவமையாயின.

## 23.பொதுநீங்கு உவமை:-

ஒன்றற்குக் கூறப்பட்ட உவமையை மறுத்துப் பின் அப்பொருள் தானே தனக்கு நிகராகும் என்று மேம்பாடு தோன்றக் கூறுவது, அதாவது பொருளையே உவமையாக்குவது பொது நீங்கு உவமையாகும்.

(எ-டு)

திருமருவு தண்மதிக்கும் செந்தா மரையின்
விரைமலர்க்கும் மேலாம் தகையால் - கருநெடுங்கண்
மானே இருள் அளகம் சூழ்ந்தநின் வாண்முகம்
தானே உவமை தனக்கு.

இப்பாடலில் முகத்திற்கு உவமையாகச் சந்திரன், செந்தாமரை ஆகியவற்றை முன்னர்க் கூறிப் பின் மறுத்து முகத்துக்கு முகமே ஒக்கும் எனக் கூறியதால் இது பொது நீங்கு உவமையாயிற்று.

## 24.மாலை உவமை:-

ஒரு பொருளுக்குப் பல உவமை அமையும். அவற்றை ஒன்றன் பின் ஒன்றாக இடைவிடாது தொடர்ச்சி உடையனவாகச் சேர்த்து இறுதிக்கண் பொருள் கூட்டி முடிப்பது மாலை உவமையாகும்.

(எ-டு)

மலையத்து மாதவனே போன்றும் அவன்பால்
அலைகடலே போன்றும் அதனுள் - குலவும்
நிலவலய மேபோன்றும் நேரியன்பால் நிற்கும்
சிலைகெழுதோள் வேந்தர் திரு.

சோழனை விட்டு நீங்காத செல்வத்திற்கு அகத்தியனும் அவனோடு தொடர்புடைய கடலும் அதனோடு தொடர்புடைய பூமியும் (பூவொடு பூ சேர்ந்து நிற்கும் மாலை போலத்) தொடர்ந்து நின்றன. இவற்றால் இப்பாடல் மாலை உவமையாயிற்று.

உவமைஅணி பிற அணிகளோடு கூடி வருதல்

“அற்புதம் சிலேடை அதிசயம் விரோதம்
ஒப்புமைக் கூட்டம் தற்குறிப் பேற்றம்
விலக்கே ஏது என வேண்டவும் படுமே.”

(தண்டி-31)

உவமை அணி பலவகைப்பட்டுத் தனித்து வரும். அத்துடன் அற்புதம், சிலேடை, அதிசயம், விரோதம், ஒப்புமைக் கூட்டம், தற்குறிப்பேற்றம், விலக்கு, ஏது ஆகிய எட்டு அணிகளோடு கூடியும் வரும்.

**அற்புத உவமை:-**

ஒரு பொருளின் குணங்களை உவமையில் ஏற்றி வியப்படையும் படியாகச் சொல்லுவது.

(எ-டு)

குழைஅருகு தாழக் குனிபுருவம் தாங்கி
உழையர் உயிர்பருகி நீண்ட – விழி உடைத்தாய்
வண்டே இருள்அளகம் சூழ வருமதிஒன்(று)
உண்டேல் இவன்முகத்திற்(கு) ஒப்பு.

பொருளாகிய பெண்ணின் முகத்தில் காணப்படும் உறுப்புக்களை உவமையாகிய சந்திரனுக்கு ஏற்றிக் கூறி வியக்கும்படி ஒப்புமைப்படுத்தியதால் இது அற்புத உவமை ஆயிற்று.

**சிலேடை உவமை:-**

சிலேடையாவது ஒரு மொழியாய் நின்று பல பொருள் தருவதாகும். அது 1.செம்மொழிச் சிலேடை உவமை 2.பிரிமொழிச் சிலேடை உவமை என இரு வகைப்படும்.

**1.செம்மொழிச் சிலேடை உவமை:-**

ஒரு தன்மைத்தாக நின்று பொருளுக்கேற்பச் சொற்களைப் பிரிக்காமல் சொற்கள் கிடந்தவாறே பலபொருள் புலப்படுவது செம்மொழி. அம்மொழியைக் கொண்டு உவமிப்பது செம்மொழிச் சிலேடை உவமையாகும்.

(எ-டு)

செந்திருவும் திங்களும் பூவும் தலைசிறப்பச்
சந்தத் தொடையோ(டு) அணிதழுவிச் - செந்தமிழ்நூல்
கற்றார் புனையும் கவிபோல் மனங்கவரும்
முற்றா முலையாள் முகம்.
இப்பாடல் கவிதைக்கும் முகத்திற்கும் சிலேடையாய் அமைந்துள்ளது.

| சொற்கள் | | கவி(பாட்டு) | | முகம் |
|---|---|---|---|---|
| சந்தம் | - | ஓசை | - | நிறம் |
| தொடை | - | சொற்கோவை | - | மாலை |
| அணி | - | சொல்,பொருள் அணிகள் | - | அழகு |

புலவரால் சொல்லப்படும் கவிதையைப் போலப் பெண்ணின் முகத்தைக் காட்டியதால் இது செம்மொழிச் சிலேடை உவமை ஆயிற்று.

## <u>பிரிமொழிச் சிலேடை உவமை:-</u>

பிரித்துப் பொருள் காணும் வண்ணம் அமைவது பிரிமொழிச் சிலேடை ஆகும். தொடர்களைப் பிரித்து ஒன்றற்கு ஒரு விதமாகவும் வேறொன்றற்கு மற்றொரு விதமாகவும் பொருள்பட அமைவது பிரிமொழி, அம் மொழியை உவமிப்பதே பிரிமொழிச் சிலேடை உவமையாகும்.

(எ-டு)

நளிதடத்த வல்லியின் கண்நெகிழ ஞாலத்து
அளவின் நிறைகடாம் சிந்திக் - களிறு இகலும்
கந்த மலையா நிலவும் கவடு அசைய
வந்த மலையா நிலம்,

இப்பாடல் யானைக்கும் தென்றலுக்கும் சிலேடையாய் அமைந்துள்ளது. யானையைப் போலத் தென்றல் காற்று வந்தது என்பதை விளக்கும் இப்பாடல் இரு பொருளுக்கும் ஏற்றபடி பிரித்துப் பொருள் காணும் வண்ணம் அமைந்தது. பின் ஒன்று மற்றொன்றுக்கு உவமையானது. எனவே இப்பாடல் பிரிமொழிச் சிலேடை உவமை ஆயிற்று.

| **சொற்கள்** | | **யானை** | | **மாற்றம்** | | **தென்றல்** |
|---|---|---|---|---|---|---|
| நளி | - | செறிவு | - | - | - | பெருமை |
| தடம் | - | பெருமை | - | - | - | பொய்கை |
| வல்லி | - | விலங்கு | - | (அல்லி) | - | பூ |
| கண் | - | மூட்டுவாய் | - | (கள்) | - | தேன் |
| நெகிழ்தல் | - | கழலுதல் | - | - | - | சோர்தல் |
| கந்து | - | கட்டுத்தறி | - | (கந்தம்) | - | மணம் |
| கவடு | - | புரசைக்கயிறு | - | - | - | மரக்கொம்பு |

## அதிசய உவமை:-

ஆன்றோர் வியக்குமாறு புதுமை தோன்றும்படி உவமிப்பது.

(எ-டு)

நின்உழையே நின்முகம் காண்டும் நெடுந்தடம்
தன்உழையே தன்னையும் காண்குவம் - என்னும்
இதுஒன்று மேஅன்றி வேற்றுமை உண்டோ
மதுஒன்று செந்தா மரைக்கு.

இப்பாடலில் தாமரைக்கு ஒப்பாக ஒரு பெண்ணின் முகம் காட்டப்பட்டுள்ளது. முகத்திற்கும், அதற்கு ஒப்புமைக்காட்டப்படும். தாமரைக்கும் சார்ந்திருக்கும் இடங்களைத் தவிர வேறு வேற்றுமை இல்லை என வியப்படையும்படி கூறியதால் இது அதிசய உவமையாயிற்று.

## விரோத உவமை:-

உவமையும் பொருளும் தம்முள் மாறுபட்ட குணமுடையதாகக் காட்டுவது.

(எ-டு)

செம்மை மரைமலரும் திங்களும் நும்முகமும்
தம்மின் பகைவிளைக்கும் தன்மையவே – எம்முடைய
வைப்பாகும் சென்னி வளம்புகார் போல் இனியீர்
ஒப்பாகும் என்பார் உளர்.

பகைகை உடைய தாமரை மலரும், சந்திரனும் பெண்ணின் முகத்திற்கு உவமை என்பதால் இது விரோத உவமை ஆகும்.

## ஒப்புமைக்கூட்ட உவமை:-

ஒப்புமை உடைய செயல்களைக் கொண்ட பொருள்களைக் கூட்டி உவமித்தல்.

(எ-டு)

விண்ணின்மேல் காவல் புரிந்து உறங்கான் விண்ணவர்கோன்
மண்ணின்மேல் அன்னை வயவேந்தே – தண்ணளியில்
சேரா அவுணர் குலங்களையும் தேவர்கோன்
நேரார்மேல் அத்தகையை நீ.

இந்திரனும் சோழனும் காக்கும் தொழிலால் ஒப்புமை உடையவர்கள். பகைவர்களைப் போர் செய்து அழிக்கும் திறத்தாலும் ஒப்புமை உடையவர்கள் என்பதால் இது ஒப்புமைக்கப்பட்ட உவமையாயிற்று.

## தற்குறிப் பேற்ற உவமை:-

பொருளுக்கு மேன்மை தோன்றும் வண்ணம் கவிஞன் தான் நினைத்த உவமையின் மீது பிறிதொன்றை ஏற்றிக் கூறுவது.

(எ-டு)

உண்நீர்மை தாங்கி உயர்ந்த நெறிஒழுகி
வெண்நீர்மை நீங்கி விளங்குமால் - தண்ணீர்த்
தரம்போலும் என்னத் தருகடம்பை மாறன்
கரம்போல் கொடை பொழிவான் கார்.

மழை பொழியும் மேகம் வானத்தில் இருக்கும், தன் உள்ளே நீரைப் பெற்றிருக்கும் வெண்ணிறம் நீங்கித் திகழும். இவை மேகத்தின் இயல்பு. இதனை மாற்றி மாறனின் கைபோல இருந்து கொடுக்க என்பதற்காக இம்மூன்று இயல்புகளையும் மேகம் பெற்றிருந்தது எனக் கற்பித்துக் கூறி உவமையாக்கியதால் இது தற்குறிப்பேற்ற உவமையாகிறது.

## விலக்கு உவமை:-

உவமையை விடப் பொருளுக்குச் சிறப்புத் தந்து, அதனால் உவமை ஒவ்வாது எனக் கூறுவது.

(எ-டு)

குழைபொழுது நீண்டு குமிழ்மேல் மறியா
உழைபொரு(து)என் உள்ளம் கவரா – மழைபோல்
தருநெடுங்கைச் சென்னி தமிழ்நா(டு) அனையார்
கருநெடுங்கண் போலும் கயல்.

இவ்வாறு கூறியதால் காதில் அணிந்துள்ள குழையோடு சேர்ந்து வளர்ந்தது கண். அது மூக்கிற்கு மேலே தாவுகின்ற தன்மையுடையது. மானின் விழியைப் பகைப்பது, என் உள்ளத்தைக் கவரும் தன்மை கொண்டது எனப் புலப்படுத்தப்பட்டுள்ளது.

கண்ணுக்குக் காட்டப்பட்ட மீனாகிய உவமையினும் பொருளே சிறந்தது என உவமையை விலக்கியதால் இப்பாடல் விலக்கு உவமையாயிற்று.

**ஏது உவமை:-**

இன்னின்ன காரணங்களால் இதனை இ்.து ஒக்கும் எனக் காரணம் புலப்படக் கூறுவது.

(எ-டு)

வாள் அரவின் செம்மணியும் வன்னிஇளம் பாசிலையும்
நாள் இளைய திங்கள் நகைநீலவும் - நீள்ஒளியால்
தேன்உலவு பூங்கொன்றைத் தேவர்கோன் செஞ்சடைமேல்
வான்உலவும் வில்போல் வரும்.

இப்பாடலில் சிவபெருமானின் சடைக்கு உவமையாகக் காட்டப்பட்ட பொருள் வானவில், வானவில்லில் பல வண்ணங்கள் இருப்பது போலச் சிவபெருமானின் சடையிலும் பல நிறங்கள் காணப்பட்டன. சடையில் சிவப்பு, பசுமை, வெண்மை, மஞ்சள் நிறங்கள் தோன்றுவதற்குச் செம்மணி, தளிர், பிறை, கொன்றைப்பூ ஆகியவற்றைக் காரணமாகக் காட்டியதால் இது ஏது உவமையாயிற்று.

## உவம வழுவமைதி

‘‘மிகுதலும் குறைதலும் தாழ்தலும் உயர்தலும்
பால்மாறு படுதலும் பாகுபாடு உடைய

மேற்சொல்லப்பட்ட உவமையணி, மிகுந்து வருதல், குறைந்து வருதல், தாழ்ந்து வருதல், உயர்ந்து வருதல், பால் மாறுபடுதல் என்னும் பாகுபாடுகளை உடையனவாம்.

**மிகுதல்:-** உபமான உபமேயங்கள் ஒன்றற்கு ஒன்று அடைகளால் மிகுந்து வருதல்.

**குறைதல்:-** அவை ஒன்றற்கு ஒன்று அடைகளால் குறைந்து வருதல்.

**தாழ்தல்:-** ஒன்றற்கு ஒன்று இழிந்த பொருளாதல்.

**உயர்தல்:-** அவ் ஒன்றற்கு ஒன்று உயர்ந்த பொருளாதல்

**பால் மாறுபடுதல்:-** ஆண்பால் முதலான ஐம்பால்களுள் ஒன்றற்கு ஒன்று மாறி வருதல்.

## உவம உருபுகள்

போல மானப் புரையப் பொருவ
நேரக் கடுப்ப நிகர நிகர்ப்ப
ஏர ஏய மலைய இயைய
ஒப்ப என்ன உறழ ஏற்ப
அன்ன அனைய அமர ஆங்க
என்ன இகல விழைய எதிரத்
துணை தூக்(கு) ஆண்(டு) மிகுதகை வீழ
இணை சிவண் மேழ் அற்றுச் செத்தொடு  பிறவும்
நவைதீர் பான்மை உவமைச் சொல்லே.

(தண்டி-33)

போல, மான, புரைய, பொருவ, நேர, கடுப்ப, நிகர, நிகர்ப்ப, ஏர, ஏய, மலைய, இயைய, ஒப்ப, எள்ள, உறழ, ஏற்ப, அன்ன, அனைய, அமர, ஆங்க, என்ன, இகல, விழைய, எதிர, துணை, தூக்கு, ஆண்டு, ஆங்கு, மிகுதகை, வீழ, இணை, சிவண், கேழ், அற்று, செத்து என்னும் முப்பத்தைந்தும் இவை போல்வன பிறவும் உவம உருபுகள் ஆகும்.

பிறவும் என்றதனால் நாட, நக, நடுங்க, நந்த, கள்ள, கருத, காட்ட, மிளிர, ஏய்ப்ப, மருள முதலியனவும் வரும்.

# பாடம் - 12

## உருவக அணி

உவமையின் தன்மையைப் பொருள்மேல் ஏற்றிக் கூறும் இத்தன்மையே உருவகம் எனக்கூறப்படும். உபமானம், உபமேயம் என்னும் இரண்டுக்கும் வேற்றுமை இல்லாமல் இரண்டும் ஒன்றே என்பது தோன்றக் கூறுவது உருவக அணி ஆகும்.

உவமையும் பொருளும் வேற்றுமை ஒழிவித்து
ஒன்று என மாட்டின் அ∴து உருவகம் ஆகும்.
(தண்டி-34)

உவமையாகும் பொருள் (உபமானம்) உவமிக்கப்படும் பொருள் (உவமேயம்) எனப் பொருள் இருவகைப்படும். அவ்விரண்டுக்குள் வேறுபாடு காண முடியாத வகையில் ஒன்றென்னும்படி ஒற்றுமைப்படுத்திக் கூறுவது உருவகம் என்னும் அணியாகும்.

### உருவக அணியின் வகைகள்:-

தொகையே விரியே தொகைவிரி எனாஅ
இயைபே இயைபிலி வியநிலை எனாஅச்
சிறப்பே விரூபகம் சமாதானம் எனாஅ
உருவகம் ஏகம் அநேககாங்கம் எனாஅ
முற்றே அவயவம் அவயவி எனாஅச்
சொற்றஜம் மூன்று மற்றதன் விரியே.
(தண்டி-35)

தொகை உருவகம், விரி உருவகம், தொகைவிரி உருவகம், இயைபு உருவகம், இயைபிலி உருவகம், வியநிலை உருவகம், சிறப்பு உருவகம், விரூபக உருவகம், சமாதான உருவகம், உருவக உருவகம், ஏகாங்க உருவகம், அநேகாங்க உருவகம், முற்று உருவகம், அவயவ உருவகம், அவயவி உருவகம் என்று சொல்லப்பட்ட பதினைந்தும் உருவகத்தின் வகைகள் ஆகும்.

### தொகை உருவகம்:-

ஆகிய என்னும் தொடர்பை உண்டாக்கும் சொல் பெறாமல் (மறைந்து) வருவதே தொகை உருவகம் ஆகும்.

(எ-டு)

அங்கை மலரும் அடித்தளிரும் கண்வண்டும்
கொங்கை முகிழும் குழற்காரும் - தங்கியதோர்
மாதர்க் கொடி உளதாம் நண்பா அதற்(கு) எழுந்த
காதற்(கு) உளதோ கரை.

அங்கை மலர் (அங்கையாகிய மலர்)
அடித்தளிர் (அடியாகிய தளிர்)
கண்வண்டு (கண்ணாகிய வண்டு)
கொங்கை முகிழ் (கொங்கையாகிய முகிழ்)
குழற் கார் (குழலாகிய கார்)

என்னும் தொடர்களில் ஆகிய என்னும் சொல் மறைந்து (தொக்கு) வந்தள. ஆகையால் இது தொகை உருவகம் ஆயிற்று.

## விரி உருவகம்:-

ஆகிய என்னும் சொல் வெளிப்பட்டு (விரிந்து) நிற்பது விரி உருவகம் ஆகும். ஆகிய என்னும் சொல் ஆக எனவும் ஆ எனவும் திரிந்து நிற்றலும் உண்டு.

(எ-டு)

கொங்கை முகையாக மென்மருங்குல் கொம்பாக
அகங்கை மலரா அடிதளிராத் - திங்கள்
அளிநின்ற மூரல் அணங்காம் எனக்கு
வெளிநின்ற வேனில் திரு.

இப்பாடலில் முகையாக, கொம்பாக என்னும் இரு சொற்களில் ‘ஆக’ என்பது வெளிப்பட்டு நின்றது. மலரா, தளிரா என்பவற்றுள்’ஆ’ என்னும் சொல் வெளிப்பட்டு நின்றது. ஆதலால் இது விரி உருவகம் ஆயிற்று.

## தொகைவிரி உருவகம்:-

தொடர்பை உணர்த்தும் ஆகிய, ஆக, ஆ என்னும் சொற்கள் வெளிப்பட்டும் மறைந்தும் அமைவது தொகை விரி உருவகம் ஆகும்.

(எ-டு)

வையம் தகழியா வார்கடலே நெய்யாக
வெய்ய கதிரோன் விளக்காகச் - செய்ய

சுடர்ஆழி யான் அடிக்கே சூட்டினேன் சொன்மாலை
இடர்ஆழி நீங்குகவே என்று.

நெய்யாக, விளக்காக, தகழியா என்பன விரி உருவகம். -இடராழி என்பது தொகை உருவகம். எனவே இப்பாடல் தொகைவிரி உருவகமாயிற்று.

**இயைபு உருவகம்:-**

பல பொருளை உருவகம் செய்யுமிடத்து ஒன்றற்கொன்று இயைபுடைய பொருளை ஒரு தொடரில் உருவகமாக வரத் தொடுப்பது இயைபு உருவகமாகும்.

(எ-டு)

செவ்வாய்த் தளிரும் நகைமுகிழும் கண்மலரும்
மைவார் அளக மதுகரமும் - செவ்வி
உடைத்தாம் திருமுகம்என் உள்ளத்து வைத்தார்
துடைத்தாரே அன்றோ துயர்.

இப்பாடலில் வாய், நகை, கண், கூந்தல் ஆகிய நான்கும் தளிர், அரும்பு, மலர், வண்டு ஆகிய நான்கும் ஒன்றற்கு ஒன்று இயைபுடைய பொருள். இவ் இயைபுடையவற்றை உருவகித்துக் கூறியதால் இது இயைபு உருவகமாயிற்று.

**இயைபிலி உருவகம்:**

ஒன்றற்கு ஒன்று இயைபில்லாத பொருள்களை ஒரு தொடரில் உருவகமாக அமைப்பது இயைபிலி உருவகமாகும்.

(எ-டு)

தேனக் கலர்கொன்றை பொன்னாகச் செஞ்சடையே
கூனற் பவளக் கொடியாகத் - தான
மழையாகக் கோடு மதியாகத் தோன்றும்
புழையார் தடக்கைப் பொருப்பு.

இங்கு விநாயகப் பெருமான் அணிந்த கொன்றை மலரும், திருச்சடையும், மதநீரும், மருப்பும் (தந்தம்) ஆகிய நான்கும் முறையே பொன், பவளக்கொடி, மழை, மதி என்னும் நான்காக உருவகிக்கப்பட்டுள்ளன. இப்பொருள்கள் அனைத்தும் ஒன்றற்கு ஒன்று இயைபற்றவை, ஆதலால் இயைபிலி உருவகமாயிற்று.

## வியநிலை உருவகம்:-

ஒரு பொருள் பல உறுப்புக்களைப் பெற்றிருக்கும். அவற்றுள் சிலவற்றை உருவகம் செய்தும் சிலவற்றை விடுத்தும் உறுப்பினை உடைய பொருளை (அங்கியை) உருவகம் செய்தும் உரைப்பது வியநிலை உருவகம் ஆகும்.

(எ-டு)

செவ்வாய் நகைஅரும்பச் செங்கைத் தளிர்விளங்க
மைவாள் நெடுங்கண் மதர்த்(து) உலவச் - செவ்வி
நறு(வு) அலரும் சோலைவாய் நின்றதே நண்பா!
குறவர் மடமகளாம் கொம்பு.

இப்பாடலில் கூறப்பட்ட பொருள் (அங்கி) குறப்பெண். அவள் வஞ்சிக் கொம்பாக உருவகப்படுத்தப்பட்டாள். அவளுடைய உறுப்புக்களில் வாய், கண், கை ஆகிய மூன்றும் இங்கு எடுத்துக்காட்டப்பட்டன. அவற்றுள் கை மட்டும் தளிராக உருவகப்படுத்தப்பட்டது. எஞ்சியவை வாளா (உருவகப்படுத்தப்படாமல்) விடப்பட்டன. ஆதலால் இது வியநிலை உருவகமாயிற்று.

## சிறப்பு உருவகம்:-

ஒரு பொருளை எடுத்து அதற்குச் சிறந்த அடைகளை உருவகப்படுத்தி அவற்றின் காரணமாக அப்பொருளையும் உருவகமாக்கி முடிப்பது சிறப்பு உருவகம் ஆகும்.

(எ-டு)

விரிகடல்சூழ் மேதினி நான்முகன்மீ கானாச்
சுரநதிபா யுச்சி தொடுத்த – அரிதிருத்தாள்
கூம்பாக எப்பொருளும் கொண்ட பெருநாவாய்
ஆம்பொலிவில் ஆயினதால் இன்று.

இப்பாடலில் இவ்உலகம், பலபொருள்களைத் தாங்கும் நாவாயாக உருவகப்படுத்தப்பட்டது. நாவாயை இயக்கும் மீகாமனாகப் பிரம்மனும் பாயாகத் தெய்வ கங்கையும் கூம்பாகத் திருமாலின் திருவடியும் சிறப்பித்து உருவகப்படுத்தப் பட்டதால் இது சிறப்பு உருவகமாயிற்று.

## விரூபக உருவகம்:-

ஒரு பொருட்குக் கூடாத தன்மை பலவும் கூட்டி உருவகம் செய்வது விரூபக உருவகம் ஆகும்.

(எ-டு)

தண்மதிக்குத் தோலாது தாழ்தடத்து வைகாது
முன்மருவும் தாள்மேல் முகிழாது – நண்ணி
இருபொழுதும் செவ்வி இயல்பாய் மலரும்
அரிவை வதனாம் புயம்.

சந்திரனுக்கு கூம்பாமை, குளத்தில் வாழாமை, முள்தாளின் மீது மலராமை, இருபொழுதும் மலர்ந்திருத்தல் ஆகிய தன்மைகள் தாமரைக்குப் பொருந்தா. அவற்றை ஏற்றி முகத்தைத் தாமரையாக உருவகிததமையால் இப்பாடல் விரூபக உருவகமாயிற்று.

**சமாதான உருவகம்:-**

ஒரு பொருளை நன்மை தருவதாக உருவகிக்க வேண்டும். அதனையே தீங்கு தருவதாகப் பின்னர்க் கூற வேண்டும். அத்தீங்கு அப்பொருளால் தோன்றியது அன்று என அதற்குப் பிறிதோர் காரணம் கூறுவது சமாதான உருவகம் ஆகும்.

(எ-டு)

கைகாந்தள் வாய்குமுதம் கண்நெய்தல் காரிகையீர்
மெய்வார் தளிர் கொங்கை மென்கோங்கம் - இவ்அனைத்தும்
வன்மை சேர்ந்(து) ஆவிய வருத்துவது மாதவம் ஒன்று
இன்மையே அன்றோ எமக்கு.

இப்பாடலில் பெண்ணின் உறுப்புக்களான கை, வாய், கண், மெய், மார்பு ஆகியவை காந்தள், ஆம்பல், நெய்தல், தளிர், கோங்கரும்பு என்னும் பொருள்களாக உருவகம் செய்யப்பட்டன. இந்நன்மை தரும் பொருள்கள் பின்னர்த் தீமை தருவதாகக் கூறப்பட்டன. அதற்குத் தவம் செய்யாமை என்னும் காரணம் கூறப்பட்டதால் இது சமாதான உருவகமாயிற்று.

**உருவக உருவகம்:-**

ஒரு பொருளைப் பிறிதொன்றாக உருவகம் செய்ய வேண்டும். அவ்வாறு உருவகித்த பொருளை வேறு ஒன்றாக உருவகிக்க வேண்டும். இதுவே உருவக உருவகம் ஆகும்.

(எ-டு)

கன்னிதன் கொங்கைக் குவடாம் கடாக்களிற்றைப்
பொன்நெடுந்தோள் குன்றே புனைகந்தா – மன்னவநின்
ஆகத் தடம்சே வகமாக யான்அணைப்பல்
சோகித்து அருளேல் துவண்டு.

இப்பாடலில் தலைவியின் மார்பு மலையாக உருவகிக்கப்பட்டது. அதுவே பின்னர் மதம் மிகுந்த யானையாகவும் உருவகப்படுத்தப்பட்டது. கன்னியைக் காதலித்த தலைவனின் தோள் மலையாகவும் பின் கட்டுத்தறியாகவும் உருவகிக்கப்பட்டது. எனவே இப்பாடல் உருவக உருவகமாயிற்று.

## ஏகாங்க உருவகம்:-

ஒரு பொருளுக்கு அமைந்த உறுப்புக்கள் பலவற்றுள் ஒன்றை மட்டும் உருவகம் செய்வது ஏகாங்க உருவகமாகும்.

(எ-டு)

காதலனைத் தாஎன்று உலவும் கருநெடுங்கண்
ஏதிலனால் யாது என்னும் இன்மொழித்தேன் - மாதர்
மருண்ட மனமகிழ்ச்சி வாள்முகத்து வந்த
இரண்டினுக்கும் என்செய்கோ யான்.

இப்பாடலில் பெண்களின் உறுப்புக்களாகிய முகம், கண், மொழி மட்டும் தேனாக உருவகப்படுத்தப்பட்டுள்ளது. எஞ்சியவை உருவகம் செய்யப்படாததால் இது ஏகாங்க உருவகமாயிற்று.

## அநேகாங்க உருவகம்:-

ஒரு பொருளுக்கு அமைந்த பல உறுப்புக்களை உருவகம் செய்வது அநேகாங்க உருவகம் ஆகும்.

(எ-டு)

கைத்தளிரால் கொங்கை முகிழ்தாங்கி கண் என்னும்
மைத்தடஞ்சேல் மைந்தர் மனம்கலங்க – வைத்ததோர்
மின்உளதால் மேக மிசைஉளதால் மற்றதுவும்
என் உளதாம் நண்பா இனி.

இப்பாடலில் ஒரு பெண்ணின் உறுப்புக்களாகிய கை, மார்பு, கண், கூந்தல், வடிவம் ஆகிய பல உறுப்புக்கள் பேசப்பட்டன. அவை முறையே தளிர், அரும்பு, கயல், மேகம், மின்னல் என்பனவாக உருவகித்துக் கூறப்பட்டதால் இது அநேகாங்க உருவகமாயிற்று.

## முற்று உருவகம்:-

பல உறுப்புக்களை உடைய உறுப்பினையும் (பொருளையும்) அதன் உறுப்புக்களையும் ஏற்ற இடத்தொடும் பிறவற்றொடும் முழுமையாக உருவகம் செய்வது முற்று உருவகம் ஆகும்.

(எ-டு)

விழியே களிவண்டு மென்நகையே தாது
மொழியே முருகுஉலாந் தேறல் - பொழிகின்ற
தேமருவு கோதைத் தெரிவை திருமுகமே
தாமரைஎன் உள்ளத் தடத்து.

இப்பாடலில் ஒரு பெண்ணின் உறுப்புக்களாகிய விழி, முறுவல், மொழி, முகம் என்பவை வண்டு, தாது, தேன், தாமரைமலர் என்பனவாக உருவகிக்கப்பட்டுள்ளன. தாமரை குளத்தில் வாழ்வது. அதற்கு ஏற்பத் தலைவன் உள்ளத்தைக் குளமாக உருவகித்துள்ளதால் இப்பாடல் முற்றுருவகம் ஆயிற்று.

## அவயவ உருவகம்:-

உறுப்புக்களை உடைய பொருளை (உறுப்பியை) உருவகம் செய்யாமல் உறுப்புக்களை மட்டும் உருவகம் செய்வது அவயவ உருவகமாகும்.

(எ-டு)

புருவச் சிலைகுனித்துக் கண்அம்(பு)என் உள்ளத்(து)
உருவத் துரந்தார் ஒருவர் - அருவி
பொருங்கல் சிலம்பில் புனைஅல்குல் தேர்மேல்
மருங்குல் கொடிநுடங்க வந்து.

இப்பாடலில் ஒரு பெண்ணின் புருவம்-வில், கண்-அம்பு, அல்குல்-தேர், இடை-கொடி என உறுப்புக்கள் (அவயங்கள்) உருவகிக்கப்பட்டுள்ளன. இவ்உறுப்புக்களை உடைய அப்பெண்ணாகிய உறுப்பியை (அவயவி) உருவகம் செய்யாமல் ஒருவர் என்னும் அளவில் சுட்டியுள்ளதால் இது அவயவ உருவகம் ஆயிற்று.

## அவயவி உருவகம்:-

அவயவியாகிய பொருளை உருவகம் செய்து அதன் உறுப்புக்களை உருவகிக்காமல் விட்டு விடுதல் அவயவி உருவகம் ஆகும்.

(எ-டு)

வார்புருவம் கூத்தாட வாய்மழலை சோர்ந்(து) அசைய
வேர் அரும்பச் சேந்து விழிமதர்ப்ப - மூரல்
அளிக்கும் தெரிவை வதனாம் புயத்தால்
களிக்கும் தவம்உடையோன் கண்.

பெண்ணின் முகத்தைத் தாமரை என உருவகித்து அதன் உறுப்புக்களான புருவம் முமதலானவற்றை உருவகிக்காமல் விட்டதால் இது அவயவி உருவகமாயிற்று.

**<u>உருவகம் பிற அணிகளுடன் கூடி வருதல்:-</u>**

“உவமை ஏது வேற்றுமை விலக்கே
அவநுதி சிலேடை என்(று) அவற்றொடும் வருமே”.

பலவகைப்பட வரும் உருவகம் தனித்து வருவதோடு உவமை, ஏது, வேற்றுமை, விலக்கு, அவநுதி, சிலேடை என்னும் ஆறனொடும் கூடி வரும்.

**<u>உவமை உருவகம்:-</u>**

உவமையோடு கூடிவரும் உருவகம் உவமை உருவகம் ஆகும்.

(எ-டு)

மதுமகிழ்ந்த மாதர் வதன மதியம்
உதய மதியமே ஒக்கும் - மதிதளர்வேன்
வெம்மை தணிய மதராக மேமிகுக்கும்
செம்மை ஒளியால் திகழ்ந்து.

முதலில் முகம் மதியமாக உருவகித்துக் காட்டப்பட்டது. பின்னர் அது உதய மதியத்தை ஒக்கும் என உவமையோடு இயைத்துக் கூறியதால் இப்பாடல் உவமை உருவகமாயிற்று.

**<u>ஏது உருவகம்:-</u>**

உரிய காரணத்தோடு கூடி வரும் உருவகம் ஏது உருவகம் ஆகும்.

(எ-டு)

மாற்றத்தால் கிள்ளை நடையால் மடஅன்னம்
தோற்றத்தால் தண்என் சுடர்விளக்கம் - போற்றும்

இயலான் மயில் எம்மை இந்நீர்மை ஆக்கும்.
மயலார் மதர்நெடுங்கண் மான்.

இப்பாடலில் ஒரு பெண் கிளி, அன்னம், விளக்கு, மயில் என்னும் பொருளாக உருவகம் செய்யப்பட்டாள். உருவகப்படுத்துமிடத்துச், சொல்லால்-கிளி, நடையால்-அன்னம், உருவத்தால்-விளக்கு, சாயலால்-மயில் ஆயினாள் என அவற்றிற்குரிய காரணங்களும் கூட்டி உரைக்கப்பட்டதால் இது ஏது உருவகமாயிற்று.

**<u>வேற்றுமை உருவகம்:-</u>**

வேற்றுமையோடு கூடி வருவது வேற்றுமை உருவகமாகும்.

(எ-டு)

வையம் புரக்குமால் மன்னவநின் கைக்காரும்
பொய்யின்றி வானில் பொழிகாரும் - கையாம்
இரு கார்க்கும் இல்லைப் பருவம் இடிக்கும்
ஒருகார் பருவம் உடைத்து.

இப்பாடலில் அரசனுடைய கைகள் மேகமாக உருவகம் செய்யப்பட்டுள்ளன. இடியுடைய மேகத்திற்கும் கையாகிய மேகத்திற்கும் வேற்றுமை காட்டியமையால் இது வேற்றுமை உருவகமாயிற்று.

**<u>விலக்கு உருவகம்:-</u>**

உருவகம் செய்த பொருளையே பின்னர் மறுத்துக் கூறுவது விலக்கு உருவகமாகும்.

(எ-டு)

வல்லி வதன மதிக்கு மதித்தன்மை
இல்லை உளதேல் இரவு அன்றி – எல்லை
விளக்கும் ஒளிவளர்த்து வெம்மையால் எம்மைத்
துளக்கும் இயல்பு உளதோ சொல்.

இப்பாடலில் ஒரு பெண்ணின் முகம் முழுநிலவாக உருவகிக்கப்பட்டது. பின்னர் அம்முகத்திற்கு உள்ள தன்மை நிலவிற்கு இல்லை என விலக்கியதால் இது விலக்கு உருவகமாயிற்று.

அவநுதி உருவகம்:-

உண்மையை மறுத்து உருவகம் செய்வது அவநுதி உருவகமாகும்.

(எ-டு)

பொங்களகம் அல்ல புயலே இது இவையும்
கொங்கை இணை அல்ல கோங்கரும்பே – மங்கைநின்
மைஅரிக்கண் அல்ல மதர்வண்டு இவைஇவையும்
கைஅல்ல காந்தள் மலர்.

இப்பாடலில் ஒரு பெண்ணின் உறுப்புக்கள் சிறப்பிக்கப்படுகின்றன. அவை கூந்தல், மார்பு, கண், கை என்பனவாகும். அவ்உறுப்புக்களை முன்னர்க் கூறிப் பின்னர் மறுத்து அவற்றைப் புயல், கோங்கரும்பு, வண்டு, காந்தள் என உருவகம் செய்ததால் இது அவநுதி உருவகமாயிற்று.

## சிலேடை உருவகம்:-

பலவற்றிற்கும் பொருந்துவதான சொற்களைக் கொண்டு உருவகம் செய்வது சிலேடை உருவகமாகும்.

(எ-டு)

உன் நெகிழ்ந்த செவ்வித்தாய்ப் பொன்தோடு ஒளிவளரத்
தண்அளிசூழ்ந்து இன்பம் தரமலர்ந்து – கண் நெகிழ்ந்து
காதல் கரை இறப்ப வாவி கடவாது
மாதர் வதனாம் புயம்.

இப்பாடலில் தாமரையின் இயல்பும் முகத்தின் இயல்பும் ஒரு சொற்றொடராலேயே அப்பொருள்களுக்குப் பொருந்துமாறு கூறப்பட்டது. இறுதியில் முகத்தைத் தாமரை என்று உருவகப்படுத்தியதால் இது சிலேடை உருவகமாயிற்று.

## உவமை உருவகங்களுக்குப் புறனடை:-

உருவகம் உவமை எனஇரு திறத்தவும்
நிரம்ப உணர்த்தும் வரம்புதமக்(கு) இன்மையின்
கூறிய நெறியின் வேறுபட வருபவை
தேறினர் கோடல் தெள்ளியோர் கடனே.

(தண்டி-37)

உருவகம், உவமை என்னும் இரண்டு திறத்து அணிகளும் மிக விரிந்த பரப்பை உடையன. அவற்றை இத்துணைத்து என வரையறை செய்து உணர்த்துதல் இயலாததாம். ஆகையால் முறைப்படி முன்பு சொல்லப் பட்டவற்றிற்கு வேறுபட்டு வருபவையும் உள. அவற்றைக் கூறப்பட்டவற்றோடு பொருத்திக் காண்பது அறிவுடையோரின் கடமையாகும்.

# தீவக அணி

தீவகம் என்னும் வடசொல்லுக்கு விளக்கு என்னும் பொருளாகும். ஓரிடத்தில் வைக்கப்பட்ட விளக்கு, பல இடங்களிலும் உள்ள பொருளை விளங்கக் காட்டும். அதுபோல ஓரிடத்தில் நின்ற சொல் பல இடங்களிலும் சென்று பொருளை விளக்குவது தீவக அணியாகும்.

குணம் தொழில் சாதி பொருள் குறித்(து) ஒருசொல்
ஒருவயின் நின்றும் பலவயின் பொருள்தரின்
தீவகம் செய்யுள் மூவிடத்து இயலும்.
(தண்டி-38)

குணம், தொழில், சாதி, பொருள் ஆகிய நான்கனுள் யாதானும் ஒன்றைக் குறிக்கும் ஒரு சொல் ஓரிடத்தில் நிற்கும். அச்சொல் செய்யுளில் பல இடத்தும் நின்ற சொற்களோடு பொருந்திப் பொருள் விளைப்பது தீவக அணியாகும். அது செய்யுளின் மூன்றிடத்தும் வெளிப்பட்டுத் தோன்றும்.

மூன்றிடமாவன:- முதல், இடை, கடை என்பனவாம். அவற்றிற்கேற்பத் தீவகமும் முதனிலைத் தீவகம், இடைநிலைத் தீவகம், கடைநிலைத் தீவகம் என மூன்றாயின. இம்மூன்றையும் குணம், தொழில், சாதி, பொருள் என்னும் நான்கோடு உறழப் பன்னிரண்டாகும்.

## முதனிலைத் தீவகம்

### 1.முதனிலைத் குணத்தீவகம்:-

முதற்கண் நிற்கும் பண்பை உணர்த்தும் சொல், பிற சொற்களோடு இயைந்து பொருள் உணர்த்துவது முதனிலைக் குணத்தீவகம் ஆகும்.

சேந்தன வேந்தன் திருநெடுங்கண் தெவ்வேந்தர்
ஏந்து தடந்தோள் இழிகுருதி – பாய்ந்து
திசையனைத்தும் வீரச் சிலைபொழிந்த அம்பும்
மிசையனைத்தும் புட்குலமும் வீழ்ந்து.

குணத்தைக் குறிக்கும் முதலில் நின்ற சேந்தன(சிவந்தன) எனும் சொல் கண் சேந்தன, திசையனைத்தும் சேந்தன, அம்பும் சேந்தன, மிசையனைத்தும் சேந்தன எனப் பல சொற்களோடும் இயைந்து பொருள் தருதலின், இது முதனிலைக் குணத்தீவகமாகும்.

## 2.முதனிலைத் தொழில் தீவகம்:-

முதற்கண் நிற்கும் தொழிலை, உணர்த்தும் சொல், செய்யுளின் பிறசொற்களோடு இயைந்து பொருள்படுதலே முதனிலைத் தொழில் தீவகமாகும்.

(எ-டு)

சரியும் புனைசங்கும் தண்தளிர்போல் மேனி
வரியும் தனதடம்சூழ் வம்பும் - திருமான
ஆரம் தழுவும் தடந்தோள் அகளங்கன்
கோரம் தொழுத கொடிக்கு.

சரிதல் என்பது தொழில் பற்றிய சொல், இப்பாடலின் முதலில் இருக்கும் அச்சொல் சங்கு, உடலழகு, கச்சு ஆகிய சொற்களோடு இயைந்து, சரியும் சங்கு, சரியும் உடலழகு, சரியும் கச்சு எனப் பொருள் தருதலின் முதனிலைத் தொழில் தீவகமாயிற்று.

## 3.முதனிலைச் சாதித் தீவகம்:-

சாதியை உணர்த்தும் சொல் முதலில் நின்று அது செய்யுளின் ஏனைய சொற்களோடும் இயைந்து பொருள் புலப்படுத்துவது முதனிலைச் சாதித் தீவகமாகும்.

(எ-டு)

தென்றல் அனங்கன் துணையாம் சிலகொம்பர்
மன்றல் தலைமகனாம் வான்பொருள்மேல் - சென்றவர்க்குச்
சாற்றிவிடும் தூதாகும் தங்கும் பெரும்புலவி
மாற்ற வருவிருந்தும் ஆம்.

இப்பாடலில் முதற்கண் நின்ற தென்றல் எனும் சொல் துணை, தலைமகன், தூது, விருந்து ஆகிய சொற்களிடத்துச் சென்று இயைந்து பொருள் விளக்கியதால் முதனிலைச் சாதித் தீவகமாயிற்று.

## 4.முதனிலைப் பொருள் தீவகம்:-

செய்யுளின் முதலில் நிற்கும் பொருட்பெயர், பிற சொற்களோடும் சென்று பொருந்திப் பொருள் புலப்படுத்துவது முதனிலைப் பொருள் தீவகமாகும்.

(எ-டு)

முருகவேள் சூர்மா முதல்தடிந்தான் வள்ளி
புரிகுழல்மேல் மாலை புனைந்தான் - சரண் அளித்து

மேலாய வானோர் வியன்சேனை தாங்கினான்
வேலால் இடைகிழித்தான் வெற்பு.

இப்பாடலில் முதலில் நிற்கும் பொருட்பெயர் முருகவேள் என்பதாகும். அப்பெயர் தடிந்தான், புனைந்தான், தாங்கினான், கிழித்தான் என்னும் சொற்களோடு இயைந்து பொருளை விளக்கியதால் முதனிலைப் பொருள் தீவகமாயிற்று.

## இடைநிலைத் தீவகம்

### 1.இடைநிலைக் குணத்தீவகம்:-

செய்யுளின் இடையில் நின்று குணப்பொருள் உணர்த்தும் சொல் பிற சொற்களோடு சென்று இயைந்து பொருள்படுவது இடைநிலைக் குணத்தீவகமாகும்.

(எ-டு)

எடுத்த நிரைகொணா என்றலுமே வென்றி
வடித்(து) இலங்கு வைவாளை வாங்கத் - துடித்தனவே
தண்ணார மார்பும் தடந்தோளும் வேல் விழியும்
எண்ணாத மன்னர்க்(கு) இடம்.

இப்பாடலின் இடையில் நின்ற துடித்தல் என்னும் சொல் பண்பு குறித்த சொல். இது மார்பு துடித்தது, கை துடித்தது, கண் துடித்தது என மூன்று சொற்களோடு இயைந்து பொருள்பட்டதால் இடைநிலைக் குணத்தீவகம் ஆயிற்று.

### 2.இடைநிலைத் தொழில் தீவகம்:-

இடையில் நின்று தொழிலை உணர்த்தும் சொல், ஏனையவற்றொடும் சென்று இயைந்து பொருள்படுவது இடைநிலைத் தொழில் தீவகமாகும்.

(எ-டு)

எடுக்கும் சிலைநின்று எதிர்ந்தவரும் கேளும்
வடுக்கொண்(டு) உரந்துணிய வாளி – தொடுக்கும்
கொடையும் திருஅருளும் கோடாத செங்கோல்
நடையும் பெரும்புலவர் நா.

இப்பாடலின் இடையில் நின்ற தொழிற்சொல் தொடுக்கும் என்பதாகும். அது கொடை, அருள், நடை என்னும் சொற்களோடு இயைந்து பொருள் தந்ததால் இடைநிலைத் தொழில் தீவகமாயிற்று.

## 3.இடைநிலைச் சாதித்தீவகம்:-

இடையில் நின்று சாதியை உணர்த்தும் சொல், ஏனையவற்றொடும் சென்றியைந்து பொருள் புலப்படுத்துவது இடைநிலைச் சாதித் தீவகமாகும்.

(எ-டு)

கரமருவு பொற்றொடியாம் காலில் கழலாம்
பொருவில் புயவலயம் ஆகும் - அர(வு) அரைமேல்
நாணாம் அரற்கு நகைமணிசேர் தாழ்குழையாம்
பூணாம் புனைமாலை யாம்.

இப்பாடலின் இடையில் நின்ற சொல் அரவு என்பதாகும். இது பாம்பினுள் ஒரு சாதியாகிய நல்ல பாம்பினைக் குறிப்பதாகும். இச்சொல் தொடி, கழல், புயவலயம், அரைஞாண், குழை, அணி, மாலை ஆகிய சொற்களோடு இயைந்து நின்று பொருள் புலப்படுத்துவதால் இடைநிலைச் சாதித்தீவகமாயிற்று.

## 4.இடைநிலைப் பொருள் தீவகம்:-

இடையில் நின்று பொருளை உணர்த்தும் சொல், பிற சொற்களோடு சென்று இயைந்து பொருள் புலப்படுத்துவது இடைநிலைப் பொருள் தீவகமாகும்.

(எ-டு)

மான்அமரும் கண்ணாள் மணிவயிற்றில் வந்(து)உதித்தான்
தானவரை என்றும் தலை அழித்தான் - யானைமுகன்
ஓட்டினான் வெங்கலியை உள்ளத்(து) இனி(து) அமர்ந்(து)
வீட்டினான் நம்மேல் வினை.

இப்பாடலின் இடையில் நிற்கும் சொல் யானைமுகன். இச்சொல் பொருள் குறித்த சொல்லாகும். இது உதித்தான், அழித்தான், ஓட்டினான், வீட்டினான் என்னும் சொற்களோடு இயைந்து பொருள் தந்தது. ஆகையால் இடைநிலைப் பொருள் தீவகமாயிற்று.

# கடைநிலைத் தீவகம்

## 1.கடைநிலைக் குணத்தீவகம்:-

இறுதியில் நின்று குணத்தை உணர்த்தும் சொல், ஏனைய சொற்களோடு சென்றியைந்து பொருளைப் புலப்படுத்துவது கடைநிலைக் குணத்தீவகமாகும்.

(எ-டு)

ஒருவன் அறிவானும் எல்லாம் யா(து) ஒன்றும்
ஒருவன் அறியா தவனும் - ஒருவன்
குணம் அடங்கக் குற்றம் உளானும் ஒருவன்
கணன் அடங்கக் கற்றானும் இல்.

இல் என்பது இல்லாமையை உணர்த்தும் பண்புச்சொல் ஆகும். இது ஈற்றில் நின்று அறிவானும் இல், அறியாதவனும் இல், உளானும் இலானும் இல், கற்றானும் இல் என முன் உள்ள சொற்களோடு பொருந்திப் பொருள் தந்தது. எனவே இது கடைநிலைக் குணத் தீவகமாயிற்று.

## 2.கடைநிலைத் தொழில் தீவகம்:-

இறுதியில் நின்று தொழிலை உணர்த்தும் சொல், பிற சொற்களோடு சென்றியைந்து பொருள் புலப்படுத்துவது கடைநிலைத் தொழில் தீவகமாகும்.

(எ-டு)

துற(வு) உளவாச் சான்றோர் இனிவரவும் தூய
பிறஉளவா ஊன்துறவா ஊணும் - பறைகறங்கக்
கொண்டான் இருப்பக் கொடுங்குழையாள் தெய்வமும் ஒன்(று)
உண்டாக வைக்கற்பாற்(று) அன்று.

இச்செய்யுளின் இறுதியிலுள்ள வைக்கப்பாற்றன்று எனும் சொல் தொழில் குறித்து நிற்கிறது. இச்சொல் இளிவரவு, ஊண், தெய்வம் எனும் சொற்களுடன் இயைந்து பொருள் தருதலின், இது கடைநிலைத் தொழில் தீவகமாயிற்று.

## கடைநிலைப் பொருள் தீவகம்:-

இறுதியில் நின்று பொருளை உணர்த்துகின்ற பெயர்ச்சொல், பிற சொற்களோடு இயைந்து பொருள் புலப்படுத்துவது கடைநிலைப் பொருள் தீவகமாகும்.

(எ-டு)

புறத்தன ஊரன நீரன மாவின்
திறத்தன கொல்சே ரியவே – அறத்தின்
மகனை முறைசெய்தான் மாவஞ்சி ஆட்டி
முகனை முறைசெய்த கண்

இப்பாடலின் இறுதியில் இடம்பெற்ற கண் என்னும் பொருள் குறித்த சொல் புறம், ஊர், நீர், மாவடு, கொல்சேரி என்னும் சொற்களோடு இயைந்து பொருள் உணர்த்தியதால் இது கடைநிலைப் பொருள் தீவகமாயிற்று.

## தீவக அணி பிற அணிகளோடு கூடி வருதல்:-

அதுவே
மாலை விருத்தம் ஒரு பொருள் சிலேடை என
நால்வகை யானும் நடைபெறும் என்ப.

(தண்டி-39)

மேற்சொல்லப்பட்ட தீவக அணியானது மாலை, விருத்தம், ஒரு பொருள், சிலேடை என்னும் நான்கோடும் கூடி வரும் என்று சொல்லுவர் புலவர்.

கூடிவரும் இவ்இயல்பால் மாலாத்தீவகம், விருத்தத் தீவகம், ஒரு பொருள் தீவகம், சிலேடைத் தீவகம் எனப் பெயர் பெறும்.

## மாலாத் தீவகம்:-

செய்யுளில் ஓரிடத்து நின்ற சொல், பல சொற்களோடும் சென்று இயைந்து மாலை போலத் தொடர்ந்து வந்து பொருள் புலப்படுத்துவது மாலாத் தீவகமாகும்.

(எ-டு)

மனைக்கு விளக்கம் மடவார் மடவார்
தமக்குத் தகைசால் புதல்வர் - மனக்(கு) இனிய
காதல் புதல்வர்க்கும் கல்வியே கல்விக்கும்
ஓதில் புகழ்சால் உணர்வு.

இப்பாடலில் தீவகமாக அமைந்த சொல் விளக்கம் என்பதாகும். அச்சொல் மனை, மடவார், புதல்வர், கல்வி ஆகிய சொற்களோடு இயைந்து நின்று பொருளுணர்த்தியது. மனைக்கு மடவார், மடவார்க்குப் புதல்வர், புதல்வர்க்குக் கல்வி, கல்விக்கு உணர்வு என்பவை ஒன்றனோடு ஒன்று தொடுக்கப்பட்டதால் மாலையாயிற்று.

## விருத்தத் தீவகம்:-

ஒரு பொருளைக் குறித்த பெயர் இரண்டு மாறுபட்ட குணங்களோடு இயைந்து பொருள்படுவது விருத்தத் தீவகமாகும்.

(எ-டு)

வரிவண்டு நாணா மதுமலர் அம்பாப்
பொருவெஞ் சிலைக்குப் வொலிவும் - பிரிவின்
விளர்க்கு நிறம் உடையார் தம்மேல் மெலிவும்
வளர்க்கும் மலையா நிலம்.

இப்பாடலில் பொருள் குறித்த பெயராக அமைந்தது மலையாநிலம் (தென்றல் காற்று). இது பொலிவு, மெலிவு என்னும் இரண்டு சொற்களுடன் இயைந்து பொருள் புலப்படுத்தியதால் தீவகமாயிற்று. பொலிவு, மெலிவு என்பன தம்முள் மாறுபட்ட குணங்களை விளக்கும் சொற்கள் ஆகும். ஆதலால் விருத்தமாயிற்று.

## ஒரு பொருள் தீவகம்:-

ஒரே பொருளைக் குறிக்கும் பல சொற்கள் உள. அச்சொற்களுடன் ஒரு சொல் சென்று இயைந்து பொருள் படுவது ஒரு பொருள் தீவகமாகும்.

(எ-டு)

வியன்ஞாலம் சூழ்திசைகள் எல்லாம் விழுங்கும்
அயலாம் துணைநீத்(து) அகன்றார் - உயிர்பருகும்
விண்கவரும் வேரிப் பொழில் புதைக்கும் மென்மயில்கள்
கண்கவரும் மீ(து) எழுந்த கார்.

இப்பாடலின் இறுதியில் அமைந்த சொல் கார் என்பதாகும். அப்பொருட்பெயர் விழுங்கும், பருகும், கவரும், புதைக்கும், என்னும் ஒரு பொருள் தரும் சொற்களுடன் இயைந்து பொருள் தந்தது. ஆதலின் இது ஒரு பொருள் தீவகமாயிற்று.

## சிலேடைத் தீவகம்:-

இரு பொருளுடன் ஒரு சொல் சென்று இயைந்து பொருளைப் புலப்படுத்துவது சிலேடைத் தீவகம் ஆகும்.

(எ-டு)

மான்மருவி வாளரிகள் சேர்ந்து மருண்(டு) உள்ளம்
தான்மறுக நீண்ட தகைமையவாம் - கான
வழியும் ஒருதனிநாம் வைத்(து) அகலும் மாதர்
விழியும் தருமால் பொலிவு.

| | | |
|---|---|---|
| சொல் | வழி | விழி |
| மான் | புள்ளிமான் | (மால்) மயக்கம் |
| அரி | சிங்கம் | செவ்வரி |
| மருளல் | அச்சம் | மயக்கம் |

இப்பாடலில் வழி, விழி என்பன மான் மருவி, வாளரிகள் சேர்ந்து மருண்டு உள்ளம், தான் மறுக, நீண்ட தகைமை என்னும் சிலேடைச் சொற்களுடன் இயைந்து நின்று பொருள் தந்ததால் சிலேடைத் தீவகமாயிற்று.

## உவமைத் தீவகம்:-

ஒரு சொல் தீவகமாக நின்று பல உவமைகளோடு இயைந்து பொருள் புலப்படுத்துவது உவமைத் தீவகம் ஆகும்.

(எ-டு)

முன்னம் குடைபோல் முடிநா யகமணிபோல்
மன்னும் திலகம்போல் வாள்இரவி – பொன் அகலம்
தங்கு கவுத்துவம்போல் உந்தித் தடமலர்போல்
அங்கண் உல(கு) அளந்தாற்(கு) ஆம்.

இப்பாடலின் இடையில் அமைந்த சொல் இரவி என்பதாகும். அச்சொல் குடைபோல், மணிபோல், திலகம் போல், கவுத்துவம் போல், மலர்போல் என்னும் தொடர்களோடு இயைந்து பொருளைப் புலப்படுத்தியதால் தீவகமாயிற்று. குடைபோல் முதலாக அமைந்த அனைத்தும் விரி உவமைகளாகும். இரண்டும் இணைந்து வந்ததால் இது உவமைத் தீவகமாயிற்று.

## உருவகத் தீவகம்:-

ஒரு சொல் தீவகமாக நின்று பல உருவகச் சொற்களுடன் இயைந்து பொருளைப் புலப்படுத்துவது உருவகத் தீவகமாகும்.

(எ-டு)

கானல் கயலாம் வயலில் கமலமாம்
ஏனல் கருவிளையாம் இன்புறவில் - மானாம்
கடத்துமேல் வேடர் கடுஞ்சரமாம் நீங்கிக்
கடத்துமேல் மெல்லியலாள் கண்.

இப்பாடலில் ஒரு பெண்ணின் கண்ணைக்கயல், கமலம், கருவிளை மான், சரம் ஆகிய பொருள்களைக் காட்டியதால் உருவகமாயிற்று. அவற்றுடன் கண் என்னும் சொல் இயைந்து பொருள் படுதலின் தீவகமாகி உருவகத் தீவகமாய் நின்றது.

## பின்வருநிலையணி

சொல்லின்பமும் பொருள் இன்பமும் தோன்ற அமைக்கப்படுவது செய்யுள். இது கற்றோரால் புனையப்படும் சிறப்பு வாய்ந்தது. சொற்களை செய்யுளில் பல இடத்தும் வரத் தொடுப்பது பின்வருநிலையாகும்.

''முன்வரும் சொல்லும் பொருளும் பலவயின்
பின்வரும் என்னில் பின்வரு நிலையே''

(தண்டி-40)

ஒரு செய்யுளில் முன்னர் வந்த சொல்லே பின்னர்ப் பல இடத்தும் வருதல், முன்னர் வந்த பொருளே பின்னர்ப் பல இடத்தும் வருதல் ஆகியவை பின்வருநிலை என்னும் அணியாகும்.

### சொற்பின்வருநிலை:-

முன் வந்த சொல்லே பின்னே பலவிடத்தும் வந்து வேறுபொருள் உணர்த்துவது சொற்பின் வருநிலை ஆகும்.

(எ-டு)

மால்கரி காத்(து) அளித்த மாலுடைய மாலைசூழ்
மால்வரைத்தோள் ஆதரித்த மாலையார்-மால் இருள் சூழ்
மாலையின் மால்கடல் ஆர்ப்ப மதன்தொடுக்கும்
மாலையின் வாளி மலர்.

இப்பாடல் தொடரில் மால் என்பது,

மால்கரி-மயக்கம், காத்தளித்தமால்-திருமால், மாலை சூழ்-பூமாலை, மால்-பெருமை, மாலை-இயல்பு, மால் இருள்-மயங்குதல், மாலை-அந்தி, மால்கடல்-கருமை, மாலை-இடைவிடாமை எனப் பலபொருள் தந்தது.

மால் என முன் நின்ற சொல் பின்னும் பல இடங்களிலும் வந்ததால் இது சொற்பின் வருநிலை ஆயிற்று.

## பொருள்பின் வருநிலை:-

செய்யுளில் முன்வந்த பொருள் பின்னர்ப் பல இடங்களிலும் வருவது பொருள் பின்வருநிலை ஆகும்.

(எ-டு)

அவிழ்ந்தன தோன்றி அலர்ந்தன காயா
நெகிழ்ந்தன நேர்முகை முல்லை – மகிழ்ந்(து) இதழ்
விண்டன கொன்றை விரிந்த கருவினை
கொண்டன காந்தன் குலை.

இப்பாடலில் முதலில் நின்ற சொல் 'அவிழ்ந்தன' என்பதாகும். அச்சொல்லிற்குப் பொருள் மலர்தல் என்பதாகும். அப்பொருளை அலர்தல், நெகிழ்தல், விள்ளல், விரிதல் எனப் பின்னர் வந்த சொற்களும் தந்தன. மலர்ந்தன என்னும் பொருள் பின்னர்ப் பல இடங்களிலும் வந்ததால் இது பொருள்பின்வருநிலை ஆயிற்று.

## சொற்பொருட் பின்வருநிலை:-

முன்னர் வந்த சொல்லும் பொருளும் பின்னர்ப் பல இடத்தும் வருவது சொற்பொருட் பின்வருநிலை ஆகும்.

(எ-டு)

வைகலும் வைகல் வரக்கண்டும் அஃதுஉணரார்
வைகலும் வைகலை வைகும்என்(று) இன்புறுவர்
வைகலும் வைகல்தம் வாழ்நாள்மேல் வைகுதல்
வைகலை வைத்(து) உணரா தார்.

இப்பாடலில் வைகல் என்ற சொல் நாள், கழிதல் என்ற அதே பொருளில் பின்னரும் பலமுறை வந்ததால் இது சொற்பொருட்பின்வருநிலை ஆயிற்று.

## பின்வருநிலையணி உவமையொடு கூடி வருதல்:-

## உவமைப் பொருள் பின்வருநிலை:-

உவமையணியுடன் பொருட்பின் வருநிலையணி இயைந்து வருவது உவமைப் பொருட் பின்வருநிலையணி எனப்படும்.

(எ-டு)

செங்கமல நாட்டம் செழுந்தா மரைவதனம்
பங்கயம் செவ்வாய் பதுமம்போல் - செங்கரங்கள்
அம்போ ருகந்தாள் அரவிந்தம் ஆரனார்
தம்போர் உகந்தாள் தனம்.

இப்பாடலில் தாமரை என்னும் ஒரு பொருளைக் குறிக்கச் செங்கமலம், செழுந்தாமரை, பங்கயம், பதுமம், அம்போருகம், அரவிந்தம் என்னும் பல பெயர்கள் பல இடங்களில் வந்துள்ளமையால் பொருட்பின்வருநிலை ஆயிற்று. ஒரு பெண்ணின் கண், முகம், வாய், கை, கால், மார்பு ஆகிய உறுப்புக்களுக்குத் தாமரை உவமையாகக் காட்டப்பட்டுள்ளது. எனவே இது உவமைப் பொருட் பின்வருநிலை ஆயிற்று.

## பாடம் - 13

## முன்ன விலக்கணி

கவிஞன் ஒரு பொருளைக் குறிப்பால் மறுத்து மேன்மை தோன்றச் சொல்லுவது முன்னவிலக்கு என்னும் அணியாகும். இவ்அணியை விலக்கணி, தடைமொழியணி, உட்கோளணி என்னும் வேறு பெயர்களாலும் குறிப்பர்.

### இலக்கணம்:-

முன்னத்தின் மறுப்பினது முன்ன விலக்கே
மூவகைக் காலமும் மேவிய தாகும்.

(தண்டி-41)

ஒரு பொருளைக் குறிப்பினால் மறுத்துக் கூறுவது முன்ன விலக்கு என்னும் அணியாகும். அ∴து இறப்பு, எதிர்வு, நிகழ்வு என்னும் முக்காலங்களையும் பற்றி வரும்.

### இறந்தவினை விலக்கு:-

கடந்த காலத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சியை மறுப்பது இறந்த வினை விலக்காகும்.

(எ-டு)

பாலன் தனது உருவாய் ஏழ்உலகு உண்டு ஆல்இலையின்
மேல் அன்று கண்துயின்றாய் மெய் என்பர்-ஆல் அன்று
வேலைநீர் உள்ளதோ விண்ணதோ மண்ணதோ
சோலைசூழ் குன்றுஎடுத்தாய் சொல்.

உலகங்கள் அனைத்தையும் உண்ட கண்ணன் ஆலிலையில் உறங்கியதாகக் கூறப்படுகிறது. அனைத்தையும் உண்டான் என்றால் இலையை விட்டு உண்ணுதல் பொருந்தாது. அந்த இலை இருந்த இடம் கடலா? விண்ணா? மண்ணா? என ஐயமுற்று வினவப்படுகிறது. இதிலிருந்து கண்ணனை உலகத்தை உண்டான் என்னும் பழைய நிகழ்ச்சி மறுத்துரைக்கப்பட்டதால் இது இறந்தகால வினை விலக்காயிற்று.

### எதிர்வினை விலக்கு:-

இனி, நிகழப்போகும் நிகழ்சிசியை மறுப்பது எதிர்வினை விலக்காகும்.

(எ-டு)

முல்லைக் கொடிநடுங்க மொய்காந்தன் கைகுலைப்ப
எல்லை இனவண்டு எழுந்(து)இரங்க – மெல்லியல்மேல்

தீவாய் நெடுவாடை வந்தால் செயல் அறியேன்
போவாய் ஒழிவாய் பொருட்டு.

இப்பாடலில் தீயாகிய நெடிய வாடைக்காற்று வீசினால் என்பது எதிர்கால நிகழ்ச்சியாகும். அக்காலத்தில் என்னால் செய்யக் கடவது ஒன்றுமில்லை என்று கூறித் தலைவனின் செயலைத் தடுத்ததால் இது எதிர்வினை விலக்காயிற்று.

## நிகழ்வினை விலக்கு:-

நிகழ்ந்து கொண்டிருக்கும் நிகழ்ச்சியை விலக்குவது நிகழ்வினை விலக்காகும்.

(எ-டு)

மாதர் நுழைமருங்குல் நோவ மணிக்குழைசேர்
காதின் மிகைநீலம் கைபுனைவீர் - மீ(து)உல(வு)
நீள் நீல வாள்கண் நெடுங்கடையே செய்யாவோ
நாள்நீலம் செய்யும் நலம்.

இப்பாடலில் நீலநிறம் பொருந்திய கண்களை உடைய தலைவி காதின்மீது நீலநிறக் குவளை மலரை அணிந்திருந்தாள். அம்மலர் செய்யும் அழகைக் கடைக் கண்ணே செய்யும் தன்மை கொண்டது. எனவே மலரைக் களைக என விலக்குவதால் இது நிகழ்வினை விலக்காயிற்று.

## விலக்கணியின் வகைகள்:-

அதுவே
பொருள் குணம் காரணம் காரியம் புணரும்
(தண்டி-42)

விலக்கணி, பொருள் விலக்கு, குணவிலக்கு, காரண விலக்கு, காரிய விலக்கு என்னும் நான்கு வகைப்படும்.

## பொருள் விலக்கு:-

பொருளைக் காட்டி விலக்குவது பொருள் விலக்காகும்.

(எ-டு)

கண்ணும் மனமும் கவர்ந்தவள் ஆடிடம்என்(று)
அண்ணல் அருளும் அடையாளம் - தண்நிழலின்

சுற்(று)எல்லை கொண்(டு)உலவும் சோதித் திரள் அல்லால்
மற்(று) இல்லை காணும் வடிவு.

எழில் வடிவைப் பெற்ற தலைவி ஒளி உருவாகக் காட்சியளித்தாள். அவளுடைய முகம் முதலான உறுப்புக்களின் தன்மை புலப்படவில்லை. பண்பை அறிந்தும் அப்பண்பைக் கொண்ட பொருளின் இயல்பைக் காண இயலவில்லை எனக் கூறியதால் இது பொருள் விலக்காயிற்று.

**<u>குண விலக்கு:-</u>**

ஒரு பொருளின் பண்பைக் காட்டி விலக்குவது குணவிலக்காகும்.

(எ-டு)

மாதர் துவர்இதழ்வாய் வந்(து)என் உயிர்கவரும்
சீத முறுவல் அறிவழிக்கும் - மீ(து) உலவி
நீண்ட மதர்விழி என் நெஞ்சம் கிழித்(து) உலவும்
யாண்டையதோ! மென்மை இவர்க்கு,

தலைவியின் உறுப்புக்களால் வருந்துகிறான் தலைவன். பலவகையிலும் தனக்குத் துனப்ம் தருவதால் பெண்ணுக்கு உரிய மென்மைத்தன்மை தலைவிக்கு இல்லை எனக் கூறுகிறான். மென்மையாகிய பண்பைக் (குணத்தைக்) கூறி விலக்குதலால் இது குண விலக்காயிற்று.

**<u>காரண விலக்கு:-</u>**

ஒரு காரணத்தைக் கூறி விலக்குவது காரண விலக்காகும்.

(எ-டு)

மதர்அரிக் கண்சிவப்ப வார்புருவம் கோட
அதரம்துடிப்பு அணிசேர் - நுதல் வியர்ப்ப
நின்பால் நிகழ்வனகண்(டு) அஞ்சாதால் என்நெஞ்சம்
என்பால் தவ(று) இன்மை யால்.

இப்பாடலில் அச்சத்திற்குக் காரணமான குற்றம் தன்னிடத்தில் இல்லை என்று கூறி, கோபத்திற்கான காரணத்தை விலக்கியதால் இது காரண விலக்காயிற்று.

**காரிய விலக்கு:-**

காரியத்தைக் கூறி விலக்குவது காரிய விலக்காகும்.

(எ-டு)

மன்னவர் சேயா மயில்அகவி ஆடலும்
பொன்அலரும் கொன்றையும் பூந்தளவின்- மென்மலரும்
மின்உயிரா நீள்முகிலும் மெய்என்(று) கொள்வதேல்
என்உயிரோ இன்னும் உளது.

இப்பாடல் வழிக் கார்கால வரவின் காரணம் நிகழ்கிறது. ஆனால் உயிர் போதலாகிய செயல் நிகழவில்லை எனக் கூறப்பட்டதால் இது காரிய விலக்காயிற்று.

**விலக்கணியின் விரி:-**

வன்சொல் வாழ்த்து தலைமை இகழ்ச்சி
துணைசெயல் முயற்சி பரவசம் உபாயம்
கையறல் உடன்படல் வெகுளி இரங்கல்
ஐயம் என்றாங்(கு) அறிந்தனர் கொளலே.

விலக்கணி, வன்சொல் விலக்கு, வாழ்த்து விலக்கு, தலைமை விலக்கு, இகழ்ச்சி விலக்கு, துணைசெயல் விலக்கு, முயற்சி விலக்கு, பரவச விலக்கு, உபாய விலக்கு, கையறல் விலக்கு, உடன்படல் விலக்கு, வெகுளி விலக்கு, இரங்கல் விலக்கு, ஐயவிலக்கு என்றும் பதின்மூன்று விரிகளையும் உடையது.

**வன்சொல் விலக்கு:-**

வன்மையான சொற்களைக் கூறி விலக்குவது வன்சொல் விலக்காகும்.

(எ-டு)

மெய்யே பொருள்மேல் பிரிதியேல் வேறொரு
தையலை நாடத் தகும்நினக்(கு) – நெய்யிலைவேல்
வள்ளல் பிரிவற்றம் பார்த்(து)எங்கள் வாழ்நாளைக்
கொள்ள உழலுமாம் கூற்று.

தலைவனே! நீ பிரிந்தால் உடனே தலைவி உயிர்விடுவாள். எனவே வேறொருத்தியை இப்போதே மணப்பெண்ணாகத் தேடுக என்று வன்மையாகக் கூறித் தலைவனின் பிரிவைத் தடுத்ததால் இப்பாடல் வன்சொல் விலக்காயிற்று.

## வாழ்த்து விலக்கு:-

வாழ்க என வாழ்த்தி விலக்குவது வாழ்த்து விலக்காகும்.

(எ-டு)

செல்லும் நெறி அனைத்தும் சேம நெறியாக
மல்க நிதியம் வளம் சிறக்க – வெல்லும்
அடல்தேர் விடலை அகன்(று) உறைவது யாங்(கு)அவ்
இடத்தே பிறக்க இயாம்.

இப்பாடலில் சேமநெறி ஆக, மல்க நிதியம், வளம் சிறக்க என முன்னர் வாழ்த்துக் கூறப்பட்டுள்ளன. பின்னர் நீ பிரிந்தால் யாம் இறப்போம். இறந்த நாங்கள் நீ வாழும் ஊரில் மீண்டும் பிறக்க எண்ணுகிறோம். எனவே உன் ஊரைக் கூறுக எனக் கேட்டுப் பிரிவை விலக்கியதால் இது வாழ்த்து விலக்காயிற்று.

## தலைமை விலக்கு:-

தன்பால் தலைமை தோன்றக் கூறி விலக்குவது தலைமை விலக்காகும்.

(எ-டு)

பொய்ம்மை நெறிநீர் பொருளும் மிகப்பயக்கும்
எம்உயிர்க்கும் ஏதும் இடரில்லை – வெம்மை தீர்ந்(து)
ஏக இனிய நெறிஅணிய என்றாலும்
போகல் ஒழிவாய் பொருட்டு.

நீ பிரிந்து செல்லினும் எம் உயிர்க்கு இடரில்லை எனத் தம் தலைமை கூறித் தலைவனின் பிரிவைத் தடுத்ததால் இப்பாடல் தலைலை விலக்காயிற்று.

## இகழ்ச்சி விலக்கு:-

ஏதுவை (காரணத்தை) இகழ்ந்து விலக்குவது இகழ்ச்சி விலக்காகும்.

(எ-டு)

ஆசை பெரிதுடையேம் ஆருயிர்மேல் அப்பொருள்மேல்
ஆசை சிறிதும் அடைவலமால் - தேசு
வழுவா நெறியின் வருபொருள்மேல் அண்ணல்
எழுவாய் ஒழிவாய் இனி.

தலைவன் பிரிவதற்குக் காரணமாய் அமைந்தது பொருள். அப்பொருள்மேல் எங்களுக்குச் சிறிதும் ஆசை இல்லை என இகழ்ச்சிப்படக் கூறித் தலைவனின் பிரிவை நீக்குதலால் இது இகழ்ச்சி விலக்காயிற்று.

## துணைசெயல் விலக்கு:-

துணைசெய்வாரைப் போலக் கூறி விலக்குவது துணை செயல் விலக்காகும்.

(எ-டு)

விளைபொருள்மேல் அண்ணல் விரும்பினையேல் ஈண்(டு)எம்
கிளை அழுகை கேட்பதற்கு முன்னே – விளைதேன்
புடைஊறு பூந்தார்ப் புனைகழலாய் போக்கிற்(கு)
இடையூறு வாராமல் ஏகு.

பொருளுக்காகப் பிரியக் கருதும் தலைவனே! உன் பிரிவால் தலைவி இறப்பாள். அதனால் சுற்றத்தவராகிய நாங்கள் அழுவோம். அவ்ஒலி கேட்டால் நீ செலவை மேற்கொள்ள முடியாது. எனவே நாங்கள் அழுவதற்கு முன் செல்வாயாக எனக் கூறினாள் தோழி. இவ்வாறு உதவுவது போலக் கூறித் தலைவனின் செலவைத் தடுத்ததால் இது துணைசெயல் விலக்காயிற்று.

## முயற்சி விலக்கு:-

முயற்சி தோன்றக் கூறி விலக்குவது முயற்சி விலக்காகும்.

(எ-டு)

மல்அணிந்த தோளால் இது என்கொலோ வான்பொருள் மேல்
செல்க விரைந்(து) என்(று) உளம்தெளிந்து – சொல்லுதற்கே
என்று முயல்வல்யான் ஏகல்நீ என்(று) இடையே
தோன்றுகின்ற(து) என்வாயிற் சொல்.

உள்ளம் உன் பிரிவை ஏற்றுக் கொண்டாலும் வாயில்படும் சொல் சொல்லாதே எனத் தடுக்கிறது. இவ்வாறு தன் முயற்சியை எடுத்துரைத்துத் தலைவனின் பிரிவை நீக்கியதால் இது முயற்சி விலக்காயிற்று.

## பரவச விலக்கு:-

தன் உணர்வு இன்றிப் பிறிதொன்றன் வயப்பட்டு நிற்பதாகக் கூறி விலக்குவது பரவச விலக்காகும்.

(எ-டு)

செல்கை திருவுளமேல் யான்அறியேன் தேங்கமழ்தார்
மல்அகலம் தங்கும் மதர்விழியின் - மெல்இமைகள்
நோக்கு விலக்குமே நோவாள் இவள்காதல்
போக்கி அகல்வாய் பொருட்டு.

இப்பாடலில் தோழி ‘செல்கை திருவுளமேல் யானறியேன்’ எனக் கூறுகிறாள். இது விதியே அறியும் என்பதைப் புலப்படுத்துகிறது. அத்துடன் தலைவியின் காதலை நீக்கியே செல்க எனத் தன்வசமின்றிக் காதலின் வயப்பட்டு நிற்பதாய்க் கூறுகின்றாள். பரவசப்பட்டுக் கூறித் தலைவனின் பிரிவைத் தடுத்ததால் இது பரவச விலக்காயிற்று.

## உபாய விலக்கு:-

பிரியுங்கால் எனக்கொரு வழியைச் (உபாயத்தைச்) சொல்லிச் செல்க எனச் செயலை விலக்குவது உபாய விலக்காகும்.

(எ-டு)

இன்னுயிர் காத்(து) அளிப்பாய் நீயே இளவேனில்
மன்னவனும் கூற்றுவனும் வந்(து) அணைந்தால்- அன்னோர்
தமக்(கு) எம்மைத் தோன்றாத் தகைமையதோர் விஞ்சை
எமக்கின்(று) அருள்புரிந்தே ஏகு.

இப்பாடலில் தோழி தலைவனிடம் கேட்கும் உபாயமாவது மன்மதனுக்கும், எமனுக்கும் கண்ணில் படாமல் இருக்க வேண்டும் என்பதாகும். இத்தகு உபாத்தைக் கொடுத்தல் தலைவனுக்கு இயலாததாகும். இவ்வாறு கூறித் தலைவனின் பிரிவைத் தடுத்ததால் இது உபாயவிலக்காயிற்று.

## கையறல் விலக்கு:-

வருத்தம் தோன்றக் கூறி விலக்குவது கையறல் விலக்காகும். கையறுதல் என்பது செயலற்றுப் புலம்புதல் எனக் பொருள்படும். இவ்இடத்தில் செய்யாமல் விட்ட செயலுக்காக வருந்துதலைக் குறித்தது.

(எ-டு)

வாய்த்த கொருள் விளைத்த(து) ஒன்(று) இல்லை மாதவமே
ஆர்த்த அறிவில்லை அம்பலத்துக் - கூத்துடையான்
சீலம் சிறிதேயும் சிந்தியேன் சென்(று) ஒழிந்தேன்
காலம் வறிதே கழித்து.

இதுவரை பொருள் தேடுதல், தவம் செய்தல், இறைவனை நினைத்தல் ஆகியவற்றைச் செய்யாமையால் வருத்தம் தோன்றியது. அச்செயல்கள் இனியும் செய்ய இயலாது என விலக்கியதால் இப்பாடல் கையறல் விலக்காயிற்று.

## <u>உடன்படல் விலக்கு:-</u>

ஒருவர் செயலுக்கு உடன்படுவது போலத் துணைநின்று அச்செயலை விலக்குவது உடன்படல் விலக்காகும்.

(எ-டு)

அப்போது அடுப்பது அறியேன் அருள்செய்த
இப்போது இவளும் இசைகின்றாள் - தப்பில்
பொருளோ புகழோ தரப்போவீர் மாலை
இருளோ நிலவோ எழும்.

இப்பாடலில் ‘இப்போது இவளும் இசைகின்றான்’ என்பது உடன்பாட்டைப் புலப்படுத்தியது. நீ பிரிந்த பின் மாலையில் இருளோ நிலவோ வரும். அவற்றால் தலைவி காதல் நோயுறுவாள். அப்போது ‘அடுப்பதறியேன்’ எனக் கூறி விலக்கியதால் இது உடன்படல் விலக்காயிற்று.

## <u>வெகுளி விலக்கு:-</u>

வெகுளி தோன்றக் கூறி விலக்குவது வெகுளி விலக்காகும்.

(எ-டு)

வண்ணம் கருக வளைசரிய வாய்புலர
எண்ணம் தளர்வேம் எதிர்நின்று – கண்இன்றிப்
போதல் புரிந்து பொருட்காதல் செய்வீரால்
யாதும் பயமிலேம் யாம்.

தலைவன் பொருள் கருதிப் பிரியும் முன்னரே தலைவி உருக்குலைந்தாள். அவள் நிலை கண்டும் தலைவன் பிரியின் எமக்கு யாதும் பயன் இல்லை. என எதிர்நின்று தோழி

வெகுளி தோன்றக் கூறுகிறாள். இவ்வெகுளியால் யாங்கள் இறந்து படுவோம் என்பதைக் குறிப்பாகப் புலப்படுத்திப் பிரிவை விலக்கியதால் இப்பாடல் வெகுளி விலக்காயிற்று.

## இரங்கல் விலக்கு:-

இரக்கம் தோன்றக் கூறிச் செல்லுதலைத் தடுப்பது இரங்கல் விலக்காகும்.

(எ-டு)

ஊசல் தொழில்இழக்கும் ஒப்பு மயில்இழக்கும்
வாசம் சுனை இழக்கும் வள்ளலே – தேசு
பொழில் இழக்கும் நாளைஎம் பூங்குழலி நீங்க
எழில் இழக்கும் அந்தோ இவண்.

பிரிவால் தலைவி உயிரிழக்கப் பல பொருள்களும் தன் இயல்பை இழக்கும் என்பது தோழி கூற்று. இது இரக்கம் தோன்றக் கூறித் தலைவனின் செயலைத் தடுத்ததால் இரங்கல் விலக்காயிற்று.

## ஐய விலக்கு:-

ஐயுற்றதனை விலக்குவது ஐய விலக்காகும்.

(எ-டு)

மின்னோ பொழிலின் விளையாடும் இவ்உருவம்
பொன்னோ எனும்சுணங்கில் பூங்கொடியோ – என்னோ
திசைஉலவும் கண்ணும் திரள்முலையும் தோளும்
மிசை இருளும் தாங்குமோ மின்.

காணுகின்ற உருவம், மின்னோ, கொடியோ என்னும் ஐயத்தைத் தோற்றுவித்தது. கண், மார்பு, தோள், கூந்தல் ஆகியவற்றை மின்னல் சுமந்திருத்தல் இயலாது எனக்கூறி மின்னல் விலக்கப்பட்டுப் பெண் எனத் துணியப்பட்டதால் ஐய விலக்காயிற்று.

## விலக்கணி பிற அணிகளோடும் கூடி வருதல்:-

வேற்றுப்பொருள் சிலேடை ஏதுஎன்று இன்னவை
மேற்கூறு இயற்கையின் விளங்கித் தோன்றும்.

(தண்டி-44)

விலக்கணி வேற்றுப் பொருள் வைப்பு, சிலேடை, ஏது என்னும் மூன்று அணிகளோடும் கூடி வரும்.

## வேற்றுப்பொருள் வைப்பு விலக்கு:-

உலகறிந்த ஒரு பொருளை வைத்து விலக்குவது வேற்றுப்பொருள் வைப்பு விலக்காகும்.

(எ-டு)

தண்கவிகை யால்உலகம் தாங்கும் அனபாயன்
வெண்கவிகைக் குள்அடங்கா வேந்தில்லை – எங்கும்
மதியத்(து) உடன்இரவி வந்து உலவும்வானில்
பொதியப் படாத பொருள்.

இப்பாடலில் அனபாயச் சோழனின் ஆட்சிக்குள் இந்த உலகம் அடங்கியிருக்கிறது என்பது கவிஞர் கூற வந்த பொருள். அதற்கு வானுக்குள் எல்லாப் பொருளும் அடங்கியிருத்தலைக் காட்டுவது வேற்றுப்பொருள் வைப்பு. அனபாயனின் குடைக்குள் அடங்காத வேந்தரில்லை என்று நீக்கியது விலக்காகும். விலக்கு, வேற்றுப் பொருள்வைப்போடு சேர்ந்து வந்ததால் இது வேற்றுப்பொருள் வைப்பு விலக்காயிற்று.

## சிலேடை விலக்கு:-

இரண்டு பொருள்களுக்கும் ஒப்புமைப் பொருள் படக் கூறிப் பின்னர் ஒன்றை விலக்குவது சிலேடை விலக்கு ஆகும்.

(எ-டு)

அம்போ ருகம்செற்(று) அமுத மயமாகி
வம்பார் முறுவல் ஒளிவளர்க்க - இம்பர்
முகைமதுவார் கோதை முகம்உண்(டு) உலகின்
மிகைமதியும் வேண்டுமோ வேறு.

இப்பாடல் முகத்திற்கும் சந்திரனுக்கும் பொதுவாய்ப் பொருந்துகிறது. ஆதலால் இவை சிலேடை ஆயின. முகத்திற்கு வேறாகச் சந்திரனும் வேண்டுமோ என நீக்கியதால் இது சிலேடை விலக்காயிற்று.

## ஏது விலக்கு:-

ஒரு காரணத்தை அடிப்படையாக வைத்து விலக்குவது ஏது விலக்காகும்.

(எ-டு)

பூதலத்துள் எல்லாப் பொருளும் வறியராய்க்
காதலித்தார் தாமே கவர்தலால் - நீதி
அடுத்(து) உயர்ந்த சீர்த்தி அனபாயா யார்க்கும்
கொடுத்தினைக் கொள்கின் றிலேம்.

வறியவர் தாமே கவர்தல் என்னும் காரணத்தால் கொடுத்தல் என்னும் செயல் விலக்கப்பட்டது. எனவே இப்பாடல் ஏது விலக்காயிற்று.

## வேற்றுப்பொருள் வைப்பணி

கவிஞன் ஒரு பொருளைச் சிறப்பிக்கக் கருதுவான். அதற்கு உலகமறிந்த வலிவுடைய பிறிதொரு பொருளை எடுத்துக்காட்டி முடிப்பான், இதுவே வேற்றுப் பொருள் வைப்பணியாகும். வீரசோழியம் இவ்அணியைப் 'பிறபொருள் வைப்பு' எனக் கூறுகின்றது.

### இலக்கணம்:-

முன்ஒன்று தொடங்கி மற்றது முடித்தற்குப்
பின்ஒரு பொருளை உல(கு)அறி பெற்றி
ஏற்றிவைத்(து) உரைப்பது வேற்றுப்பொருள் வைப்பே''

(தண்டி-45)

முன்னர் ஒரு பொருளின் சிறப்பைக் கூறத் தொடங்குவர். பின்னர் அப்பொருளை உறுதிப்படுத்துவதற்கு வலிவுடைய பிறிதொரு பொருளை வைப்பர். அப்படி வைக்கும் பொருள் உலகினர் அனைவரும் அறிந்த பொருளாய் இருக்கும். இவ்வாறு ஒன்றற்குப் பிறிதொரு பொருளை அமைத்துக் காட்டுவது வேற்றுப்பொருள் வைப்பணியாகும்.

### வேற்றுப்பொருள் வைப்பணியின் வகைகள்:-

முழுவதும் சேறல் ஒரு வழிச் சேறல்
முரணித தோன்றல் சிலேடையின் முடித்தல்
கூடா இயற்கை கூடும் இயற்கை
இருமை இயற்கை விபரீதப் படுத்தல் என்(று)
இன்னவை எட்டும் அதனது இயல்பே.

முழுவதும் சேறல், ஒருவழிச் சேறல், முரணித் தோன்றல், சிலேடையின் முடித்தல், கூடா இயற்கை, கூடும் இயற்கை, இருமை இயற்கை, விபரீதப் படுத்தல் என்னும் எட்டும் வேற்றுப்பொருள் வைப்பணியின் வகைகள் ஆகும்.

## முழுவதும் சேறல்:-

ஒன்றற்குக் கூறிய இயல்பு உலகில் உள்ள அனைத்துப் பொருள்களுக்கும் பொருந்தும் வண்ணம் உரைப்பது முழுவதும் சேறல்.

(எ-டு)

புறம்தந்(து) இருள்இரியப் பொன்நேமி உய்த்துச்
சிறந்த ஒளிவளர்க்கும் தேரோன் - மறைந்தான்
புறஆழி சூழ்ந்த புவனத்தே தோன்றி
இறவாது வாழ்கின்றனர் யார்.

இப்பாடலில் கவிஞன் கூற வந்த பொருள் நிலையாமையாகும். இக்கருத்தைப் புலப்படுத்த வைக்கப்பட்ட செய்தி சூரியன் மறைதல், உலகத்தினர் அனைவரும் அறிந்த சூரியன் மறைதலைக் கொண்டு அனைவரும் அழிவர் என்பதைக் காட்டியதால் இது வேற்றுப்பொருள் வைப்பாயிற்று, சூரியனுக்குரிய தோன்றி மறைதலாகிய செயல் அனைத்துப் பொருள்களுக்கும் நிகழும். ஆதலின் இது முழுவதும் சேறலாயிற்று.

## ஒருவழிச் சேறல்:-

ஒன்றற்குக் கூறப்பட்ட இயல்பு சில் பொருள்களுக்கு மட்டும் பொருந்தி வருவது ஒருவழிச் சேறலாகும்.

(எ-டு)

எண்ணும் பயன்தூக்கா(து) யார்க்கும் வரையாது
மண்ணுலகில் வாமன் அருள் வளர்க்கும் - தண்நறுந்தேன்
பூத்(து) அளிக்கும் தாராய் புகழாளர்க்கு எவ்உயிரும்
காத்(து)அளிக்கை அன்றோ கடன்.

முக்கடவுள்களுள் திருமாலே காக்கும் கடவுள் என்பது உலகறிந்த செய்தியாகும். காத்தலைப் புகழுடையார் மீது ஏற்றிக் கூறியதால் இது வேற்றுப் பொருள் வைப்பாயிற்று. எவ்உயிரையும் காத்தளிக்கும் தன்மை அனைவருக்கும் பொருந்தாது. ஒரு சிலராகிய புகழாளர்க்கே பொருந்துவதால் இது ஒருவழிச் சேறலாயிற்று.

## முரணித் தோன்றல்:-

தம்முள் மாறுபட்டு இருக்கும் தன்மையுடைய பொருளை வைப்பது முரணித்தோன்றல் ஆகும்.

(எ-டு)

வெய்ய குரல்தோன்றி வெஞ்சினஏ(று) உட்கொளினும்
பெய்யும் முகில்தன்னைப் பேணுவரால் - வையத்(து)
இருள்பெழியும் குற்றம் பலவரினும் யார்க்கும்
பொருள் பொழிவார் மேற்றே புகழ்.

இப்பாடலில் கவிஞன் கூற வந்த பொருள், குற்றமிருப்பினும் கொடையாளனை யாவரும் புகழ்வர் என்பதாகும். இதனை வலியுறுத்த கொடிய ஓசையைச் செய்து மழையைப் பொழிந்து பாராட்டுப் பெறும் மேகம் வைக்கப்பட்டது. உலகறிந்த இப்பொருளால் இது வேற்றுப்பொருள் வைப்பாயிற்று. குற்றம் உடையவர் பழிக்கப்பட வேண்டும். மாறாகப் புகழப்பட்டதால் இது முரணித் தோன்றல் ஆயிற்று.

## <u>சிலேடையின் முடித்தல்:-</u>

முன் வைத்த பொருளையும் பின்வைத்த பொருளையும் சிலேடையில் முடித்துக் காட்டுவது சிலேடையின் முடித்தலாகும்.

(எ-டு)

எற்றே கொடிமுல்லை தன்னை வளர்த்(து) எடுத்த
முற்றிழையாள் வாடமுறுவலிக்கும் - முற்று
முடியாப் பரவை முழங்(கு) உலகத்(து)என்றும்
கொடியார்க்கும் உண்டோ குணம்.

கொடியார் என்பது கொடுமை உடையார்க்கும் கொடிக்கும் பெயராய் அமைந்தது. தன்னை வளர்த்தெடுத்த தலைவி தலைவனுடைய பிரிவால் வருந்துமாறு முல்லைக் கொடி பூத்துக் கொடுமை செய்கின்றது. இவ்வுலகில் கொடியவர்களிடம் நற்குணம் இல்லை.

இப்பாடலில் கொடியார்க்கும் உண்டோ குணம் என்னும் தொடர் முல்லைப் கொடிக்கும் உண்டோ குணம் என்றும் கொடிய மாந்தர்க்கும் உண்டோ குணம் என்றும் இரு பொருள் தருகின்றது.

## <u>கூடா இயற்கை:-</u>

பொருந்தாத இயல்புடைய ஒன்றைப் பொருந்துவதாகக் கூறுவது.

(எ-டு)

ஆர வடமும் அதிசீத சந்தனமும்
ஈர நிலவும் எரிவிரியும் - பாரில்
துதிவகையான் மேம்பட்ட துப்புரவும் தத்தம்
விதிவகையான் வேறு படும்.

இப்பாடலில் கவிஞன் கூற வந்த பொருள், தனித்திருக்கும் தலைவிக்குக் குளிர்ச்சி தரும் பொருள்கள் வெம்மை செய்யும் என்பதாகும். முத்துமாலை, சந்தனம், நிலவு ஆகிய பொருள்களில் நெருப்பின் தன்மை இருந்ததாகக் காட்டுவது கூடா இயற்கை ஆகும்.

**கூடும் இயற்கை:-**

பொருந்தும் இயல்புடைய ஒன்றை அதற்கேற்பக் காட்டுவது கூடும் இயற்கை ஆகும்.

(எ-டு)

பொய்உரையா நண்பர் புனைதேர் நெறிநோக்கிக்
கைவளைசோர்ந்(து) ஆவிகரைந்(து) உகுவார் மெய்வெதும்பப்
பூத்தகையும் செங்காந்தள் பொங்(கு) ஒலிநீர் ஞாலத்து
தீத்தகையார்க்(கு) ஈதே செயல்.

இப்பாடலில் தலைவனின் வருகையை எதிர்ப்பார்த்துத் துன்பமுறும் பெண்கள் மேலும் வருந்துமாறு செங்காந்தள் பூத்துக் கிடந்தது என்பது கவிஞன் கூற வந்த பொருள். அதற்கு வலிவூட்ட உலகில் கொடிய தன்மை கொண்டவர்க்குப்'' பிறரை வருத்துவதே இயல்பு என்னும் உலகறி பொருளை ஏற்றிக் கூறியதால் இது வேற்றுப்பொருள் வைப்பாயிற்று.

**இருமை இயற்கை:-**

பொருந்தாத இயல்புகளையும் பொருந்தும் இயல்புகளையும் ஒருங்கே வைத்துக் கூறுவது.

(எ-டு)

கோவலர்வாய் வேய்ங்குழலே அன்றிக் குரைகடலும்
கூவித் தமியோரைக் கொல்லுமால் - பாவாய்
பெரியோரும் பேணாது செய்வரே போலும்
சிறியோர் பிறர்க்(கு) இயற்றும் தீங்கு.

இப்பாடலில் தனித்திருக்கும் பெண்களுக்கு ஆயர்களின் குழலும் கடல் ஓசையும் துன்பம் தந்தன என்பது கவிஞர் கூற வந்த கருத்து.

கோவலர் குழலொளி – சிறியோர்

கடலொலி – பெரியோர்

சிறியோர் பிறருக்குத் தீமை செய்வர் என்பது பொருந்தும் இயல்பாகும். பெரியோர் தீங்கு இயற்றல் என்பது பொருந்தா இயல்பாகும். கூடுதல், கூடாமையாகிய இரண்டும் ஒருங்கே கூறப்பட்டதால் இது இருமை இயற்கை ஆயிற்று.

## விபரீதப்படுத்தல்:-

இயற்கைக்கு மாறாய் நடந்ததனைக் கொண்டு முடிப்பது விபரீதப்படுத்தல் ஆகும். (எ-டு)

தலைஇழந்தான் எவ்உயிரும் தந்தான் பிதாவைக்
கொலைபுரிந்தான் குற்றம் கடிந்தான் - உலகில்
தனிமுதன்மை பூண்(டு) உயர்ந்தோர் வேண்டுவரேல் தப்பாம்
வினையும் விபரீத மாம்.

இப்பாடலில் தலையிழந்த பிரம்மன் உயிரைத் தந்தான், தந்தையைக் கொன்ற சண்டீசன் குற்றம் நீங்கினான் என்பன கவிஞர் கூற வந்த கருத்து, இதனை முடித்ததற்கு மேன்மை உடையவர்கள் தவறு செய்யினும் அது தவறாகாது என்னும் உலகறிந்த பொருளை ஏற்றி வைத்து உரைத்ததால் இது வேற்றுப்பொருள் வைப்பாயிற்று. பிரம்மனின் நல்வினைப்பயன் தீதாகவும் சண்டீசனின் தீவினைப்பயன் நன்மையாகவும் வந்ததால் விபரீதப்படுத்தல் ஆயிற்று.

## பயிற்சி வினாக்கள்

## பாடம் (11 – 13)

### குறு வினாக்கள்:

1. தன்மையணியின் இலக்கணத்தை எழுதுக.
2. இதரவிதரவுவமையை – விளக்குக.
3. உருவக அணி என்றால் என்ன? விளக்குக.
4. தொகை உருவகம் என்றால் என்ன?
5. வியநிலை உருவகத்தை எழுதுக.
6. தீவக அணி என்றால் என்ன?
7. விலக்கணி – விளக்கம் தருக.
8. வேற்றுப்பொருள் வைப்பணி என்றால் என்ன?

### கட்டுரை வினாக்கள்:

1. உவமையணியின் இலக்கணத்தைக் கூறி அதன் வகைகளை எழுதுக.
2. உவமையணியின் பாகுபாடுகளை எழுதுக.
3. உருவக அணியின் வகைகளை விவரி.
4. பின்வருநிலையணியை விளக்கிக் கட்டுரை வரைக.
5. விலக்கணியின் வகைகளை விளக்கி எழுதுக.
6. வேற்றுப்பொருள் வைப்பணியை விளக்கிக் கட்டுரை வரைக.

<u>பாடம் - 14</u>

<u>அலகு – 4</u>

# வேற்றுமையணி

கவிஞன் ஒப்புமை உடைய இரு பொருள்களை எடுத்துக் கொண்டு முன்னர் அவற்றுக்குரிய ஒப்புமையைக் கூறுவான். பின்னர் வேற்றுமையையும் கூறி வேறுபடுத்துவது வேற்றுமையணி ஆகும்

## இலக்கணம்:-

கூற்றினும் குறிப்பினும் ஒப்புடை இருபொருள்
வேற்றுமைப் படவரின் வேற்றுமை அதுவே
(தண்டி-47)

கூற்றினாலோ குறிப்பினாலோ இருபொருள்களை ஒப்புமைப்படுத்தி, பின்னர் ஏதேனும் காரணத்தால் ஒன்றிலிருந்து மற்றொன்றை வேறுபடுத்துவது வேற்றுமையணி ஆகும்.

கூற்றாவது சொற்களால் வெளிப்படையாக அறிவிப்பது, குறிப்பாவது சொல்லுக்கு வேறாக உய்த்துணரும்படி நிற்பது, இவ்வேற்றுமை சமமும் உயர்வும் தாழ்வும் தோன்ற வருவதாகும்.

வேற்றுமை என்னாது அதுவே என்ற மிகையால் ஒருபொருளான் வேற்றுமை செய்தலும், இருபொருளான் வேற்றுமை செய்தலும் உடையன.

## ஒருபொருள் வேற்றுமைச் சமம்:-

வேற்றுமை அணிக்கு எடுத்துக் கொள்ளப்படும் இரு பொருள்களுக்கு இடையே உயர்வு, தாழ்வு இல்லாமல் ஒரு பொருளைக் (ஒரு கருத்தை) கூறி ஒப்புமைப்படுத்துவது.

(எ-டு)

அனைத்(து) உலகம் சூழ்போய் அரும்பொருள் கைக்கொண்(டு)
இனைத்(து) அளவைத்(து) என்றற்(கு) அரிதாம் - பனிக்கடல்
மன்னவநின் சேனைபோல் மற்றது நீர் வடிவிற்(று)
என்னும் இதுஒன்றே வேறு.

இப்பாடலில் ஒப்புமை கூறப்பட்ட பொருள்கள் இரண்டு 1.கடல், 2.படை என்பனவாம். இவ்விரண்டும் மூன்று காரணங்களால் ஒத்து நின்றன. ஆனால் நீர் வடிவத்தைக் கொண்டது என அக்கடல் வேற்றுமைப்படுத்தப்பட்டது. ஆயினும் கடலுக்கும் படைக்கும் உயர்வு, தாழ்வு கூறப்படாமல் அவை இரண்டும் ஒப்புமையுடையதாகக் காட்டப்பட்டுள்ளன. எனவே இது ஒருபொருள் வேற்றுமைச் சமமாயிற்று.

## இருபொருள் வேற்றுமைச் சமம்:-

எடுத்துக் கொள்ளப்படும் இரு பொருள்களுக்கு இடையே உயர்வு, தாழ்வு இல்லாமல் இரு பொருளைக் (கருத்தை) கூறி ஒப்புமைப்படுத்துவது. (இது கூற்றான் அமைந்த வேற்றுமை)

(எ-டு)

சென்று செவிஅளக்கும் செம்மையவாய்ச் சிந்தைஉள்ளே
நின்றளவில் இன்பம் நிறைப்பவற்றுள் - ஒன்று
மலர்இவரும் கூந்தலார் மாதர்நோக்(கு) ஒன்று
மலரிவரும் கூத்தன்தன் வாக்கு.

பெண்களின் கண்களும் கூத்தனும் பாடலும் செவியை அளத்தல், உள்ளத்திற்கு இன்பம் தருதல் என்னும் இருபொருள் காரணமாக உயர்வு தாழ்வுற்ற சமம் ஆகின்றன.

## உயர்ச்சி வேற்றுமை:-

ஒரு பொருளுக்குக் காட்டப்படும் உவமையை விட அப்பொருள் உயர்வுடையது எனக் கூறி வேற்றுமைப்படுத்துவது உயர்ச்சி வேற்றுமை ஆகும்.
(இது கூற்றான் அமைந்த வேற்றுமை)

(எ-டு)

மலிதேரான் கச்சியும் மாகடலும் தம்முள்
ஒலியும் பெருமையும் ஒக்கும் - மலிதேரான்
கச்சி படுவ கடல்படா கச்சி
கடல்படுவ எல்லாம் படும்.

காஞ்சிபுரமும் கடலும் ஒலியாலும் பெருமையாலும் ஒத்தன என முதலில் ஒப்புமையாக்கப்பட்டன. கடலைவிடக் காஞ்சிபுரம் உயர்ந்ததெனப் பின்னர்க் கூறி வேற்றுமை செய்ததால் இது உயர்ச்சி வேற்றுமை ஆயிற்று.

## இருபொருள் வேற்றுமைச் சமம்:- (குறிப்பு)

(எ-டு)

கார்க்குலமும் பாய்திரையும் காட்டும் கடல் படையும்
போர்க்களிறும் பாய்மாவும் பொங்(கு)மால் - ஏற்ற
கலம்உடைத்(து) முந்நீர், கதிர் ஆழித் திண்தேர்
பல உடைத்(து) வேந்தன் படை.

கடல் - மேகக்கூட்டம், பாய்திரை
படை - கரியயானை, பாயும் குதிரை

மேகம் போல் யானை, திரை போல் குதிரை என்பன குறிப்பால் உணர்த்தப்பட்டன. பின்னர்க் கடல் கலமுடையது, படை தேர் உடையது என வேற்றுமை கூறப்பட்டது. இரண்டுக்கும் உயர்வு, தாழ்வு கூறப்படாததால் சமமாயிற்று.

## உயர்ச்சி வேற்றுமை:- (குறிப்பு)

பதுமம் களிக்கும் அளிஉடைத்து பாவை
வதனம் மதர்நோக்(கு) உடைத்து – புரைஇருள்சூழ்
அப்போது இயல்(பு) அழியும் அம்போருக வதனம்
எப்போதும் நீங்கா(து) இயல்பு.

தாமரை, பெண்ணின் முகம் - வண்டு, கண்கள் - ஒப்புமை பின்னர் எப்போதும் மலர்ச்சியுடன் இருக்கும் தன்மை முகத்திற்கு உண்டெனத் தாமரையை விட உயர்வு கூறப்பட்டது. எனவே உயர்ச்சி வேற்றுமை ஆயிற்று. வண்டுகளுக்குக் கண்கள் ஒப்புமை உடைமையைக் குறிப்பால் உணர்த்தியமையால் இது குறிப்பால் வந்த வேற்றுமையின் விரியாகும்.

## வேற்றுமை அணியின் வகைகள்:-

அதுவே
குணம் பொருள் சாதி தொழிலொடும் புணரும்
(தண்டி-48)

வேற்றுமை அணியானது குணத்தோடும், பொருளோடும், சாதியோடும், தொழிலோடும் கூடியும் வரும்.

## குண வேற்றுமை:-

இரண்டு பொருள்களை எடுத்துக் கொண்டு அவற்றின் குணங்களை வேறுபடுத்திக் காட்டுவது குணவேற்றுமை ஆகும்.

(எ-டு)

சுற்றுவில் காமனும் சோழர் பெருமானாம்
கொற்றப்போர்க் கிள்ளியும் கேழ்ஒவ்வார் - பொற்கொடியே
ஆழி உடையான் மகன்மாயன் செய்யனே
கோழி உடையான் மகன்.

இப்பாடலில் கூறப்பட்டவர்கள் மன்மதனும் சோழனும் ஆவர். அவர்கள் இருவரும் கருமை, செம்மை என்னும் நிறத்தால் (குணத்தால்) வேற்றுமைப்படுத்திக் காட்டப்பட்டதால் இப்பாடல் குண வேற்றுமை ஆயிற்று.

**பொருள் வேற்றுமை:-**

தொழிலால் ஒப்புமையுடையவற்றை எடுத்துக் கொண்டு அவற்றைப் பொருளால் வேறுபடுத்திக் காட்டுவது பொருள் வேற்றுமை ஆகும்.

(எ-டு)

ஓங்கல் இடைவந்(து) உயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத்(து) இருள் அகற்றும் - ஆங்கவற்றுள்
மின்னேர் தனிஆழி வெங்கதிர்ஒன்(று) ஏனையது
தன்னேர் இலாத தமிழ்.

**சூரியன் :-** உதயகிரியில் தோன்றுதல், மேன்மக்களால் தொழப்படுதல், இருள் அகற்றுதல் ஆகிய மூன்று குணங்களை உடையது.

**தமிழ் :-** பொதிய மலையில் தோன்றியமை, அறிவுடையோர் தொழுதேத்தும்படி விளங்குதல், அறியாமையாகிய இருளை அகற்றுதல் ஆகிய மூன்று குணங்களை உடையது.

ஆயினும் இவ்விரண்டும் தொழிலால் ஒன்றுபட்டும், பொருளால் வேறுபட்டவை என்பதைக் காட்டுவதால் இது பொருள் வேற்றுமை ஆயிற்று.

**சாதி வேற்றுமை:-**

ஒரு சாதிக்குரிய பொருள்களை ஒன்றாக வைத்து அவற்றிடையே வேற்றுமை தோன்றக் கூறுவது சாதி வேற்றுமை ஆகும்.

(எ-டு)

வெங்கதிர்க்கும் செந்தீ விரிசுடர்க்கும் நீங்காது
பொங்கு மதிஒளிக்கும் போகாது – தங்கும்
வளமையான் வந்த மதிமருட்சி மாந்தர்க்(கு)
இளமையான் வந்த இருள்.

மருட்சி என்பது அக இருள், இருள் என்பது புற இருள். இவை இரண்டும் இருள் என்னும் ஒரு சாதியினைச் சார்ந்ததாகும். இவற்றுள் புற இருள் சூரியனாலும், விளக்காலும் சந்திர ஒளியாலும் நீங்கும். இம்மூன்றாலும் நீங்காதது மருட்சி எனக் குறிப்பாய் வேற்றுமைப் படுத்தப்பட்டதால் இது சாதி வேற்றுமை ஆயிற்று.

## தொழில் வேற்றுமை:-

தொழிலால் ஒற்றுமை உடைய இரு பொருள்களை வைத்து அவற்றைத் தொழில் நிகழ்ச்சியால் வேறுபடுத்திக் காட்டுவது தொழில் வேற்றுமையாகும்.

(எ-டு)

புனல்நாடர் கோமானும் பூந்துழாய் மாலும்
வினைவகையான் வேறு படுவர் - புனல்நாடன்
ஏற்(று)எறிந்து மாற்றலர்பால் எய்தியபார் மாயவன்
ஏற்(று) இரந்து கொண்டமையி னால்.

இப்பாடலில் கூறப்பட்ட சோழனும் திருமாலும் உலகத்தைக் காக்கும் தொழிலால் ஒப்புமை உடையவர்கள். ஆயினும் சோழன் பகைவருடன் போரிட்டு மண்ணைப் பெறுவான். திருமால் இரந்து பெறுவான் எனப் பெறுகின்ற முறையில் வேற்றுமைப்படுத்தப்பட்டதால் இது தொழில் வேற்றுமையாயிற்று.

## வேற்றுமையணி பிற அணிகளோடு கூடி வருதல்:-

வேற்றுமை அணி விலக்கு, சிலேடை முதலிய பிற அணிகளோடு சேர்ந்து வருதலும் கொள்ளப்படும்.

## விலக்கியல் வேற்றுமை:-

ஒப்புமை உடைய இரண்டு பொருள்களை வேற்றுமைப்படுத்தி அவற்றுள் ஒன்றனை நீக்குவது விலக்கியல் வேற்றுமை ஆகும்.

(எ-டு)

தம்மால் பயன்தூக்கா(து) யாவரையும் தாங்கினும்
கைம்மாறும் காலம் உடைத்தன்றே – எம்ஆவி
அன்னவனை ஆழி அனபா யனைஅலராள்
மன்னவனை மானுமோ வான்.

பயன் கருதாமல் கொடுக்கும் தன்மையால் சோழனும் மேகமும் ஒப்பாவர். ஒரு குறிப்பிட்ட காலத்தில் மட்டுமே மழை பொழியும் மேகம், பொய்க்கவும் செய்யும். ஆனால் காலம் பாராமலும் தவறாமலும் கொடுப்பவன் அனபாயன் எனக்கூறி வேற்றுமைப்படுத்தப்பட்டது. இறுதியில் சோழனுக்கு மேகம் ஒப்பாகாது என நீக்கியதால் இப்பாடல் விலக்கியல் வேற்றுமையாயிற்று.

**<u>சிலேடை வேற்றுமை:-</u>**

ஒப்புமை உடைய இரு பொருள்களை இருபொருள் படக் கூறி வேற்றுமைப்படுத்துவது சிலேடை வேற்றுமை ஆகும்.

(எ-டு)

ஏ(று) அடர்த்து வில்முருக்கி எவ்வுலகும் கைக்கொண்டு
மாறடர்த்த வாழி வலவனைக் - கால்தொழுதற்(கு)
எஞ்சினார் இல்எனினும் மாயன் இகல்நெடுமால்
வஞ்சியான் நீர்நாட்டார் மன்.

மாயன் என்னும் சொல் கரிய நிறத்தை உடையவன் எனவும் வஞ்சனை உடையவன் எனவும் இருபொருள்படக் கூறப்பட்டுள்ளது. வஞ்சியான் என்னும் சொல் வஞ்சனை இல்லாதவன் என்றும் வஞ்சி என்னும் ஊருக்கு உரியவன் என்றும் இரு பொருள்படக் கூறப்பட்டுள்ளது. எனவே இவ்இருசொற்களும் சிலேடையாய் நின்று சிலேடை வேற்றுமை ஆயிற்று.

## <u>விபாவனையணி</u>

கவிஞன் ஒன்றன் வினையைக் குறிப்பிடுகின்ற பொழுது அதற்குப் பலரால் அறியப்படும் காரணத்தைக் கூறாமல் பிறிதொரு காரணத்தைக் குறிப்பாகப் புலப்படும்படி இயல்பாக உரைப்பது விபாவனை அணியாகும்.

**<u>இலக்கணம்:-</u>**

உலகுஅறி காரணம் ஒழித்(து)ஒன்று உரைப்புழி
வேறொரு காரணம் இயல்பு குறிப்பின்
வெளிப்பட உரைப்பது விபாவனை ஆகும்.

(தண்டி-49)

ஒன்றன் வினையை உரைக்கும் இடத்து அவ்வினைக்கு உலகத்தாரால் விளக்கமாக அறியப்பட்ட ஒரு காரணம் இருக்கும். அதனை விடுத்துப் பிறிதொரு காரணத்தையோ

இயற்கையில் அமைந்த தன்மையையோ குறிப்பினால் வெளிப்படும்படி உரைப்பது விபாவனை என்னும் அணியாகும்.

## அயற்காரண விபாவனை:-

நிகழ்ச்சியானது உரிய காரணத்தால் அல்லாமல் வேறொன்றால் நிகழ்வதை ஆராய்ந்து அறிதலே அயற்காரண விபாவனை ஆகும்.

(எ-டு)

தீயின்றி வேம்தமியோர் சிந்தை செழுந்தேறல்
வாயின்றி மஞ்ஞை மகிழ்தூங்கும் - வாயிலார்
இன்றிச் சிலர்ஊடல் தீர்ந்தார் அமர்இன்றிக்
கன்றிச் சிலை வளைக்கும் கார்.

வெந்து போவதற்குத் தீ, மகிழ்வதற்குக் கள், ஊடல் தீர்வதற்கு வாயில், வில் வளைப்பதற்குப் போர் ஆகியவை உலகத்தாரால் அறியப்பட்ட காரணங்களாகும். இவை இல்லாமலேயே அச்செயல்கள் நிகழ்வதற்குக் கார்காலம் என்னும் வேறொரு காரணம் சிந்தித்து ஆராய்ந்ததால் வெளிப்பட்டது. ஆதலின் இது அயற்காரண விபாவனை ஆயிற்று.

## இயல்பு விபாவனை:-

ஒன்றற்கு இயல்பாய் அமைந்து கிடக்கும் தன்மையினைச் சிறப்பித்துக் கூறுவது இயல்பு விபாவனை ஆகும்.

(எ-டு)

கடையாமே கூர்த்த கருநெடுங்கண் தேடிப்
படையாமே ஏய்ந்ததனம் பாவாய் - கடைஞெமிரக்
கோட்டாமே கோடும் புருவம் குலிகச்சே(று)
ஆட்டாமே சேந்த அடி.

கூர்மைக்குக் கடைதலும் சிறப்பாக அமைய ஆராய்ந்து ஆக்குதலும் வளைவதற்கு வளைத்தலும் பாதங்கள் சிவத்தற்குக் குங்கிலியக் குழம்பு பூசுதலும் காரணங்களாகும். ஆனால் இங்கு அக்காரணங்கள் இன்றி இயல்பாகவே செயல்கள் நிகழ்தல் கூறப்பெற்றுள்ளது.

## குறிப்பு விபாவனை:-

குறிப்பால் காரணம் கொள்ளுமாறு கூறுவது.

(எ-டு)

பாயாத வேங்கை மலரப் படுமதமா
பூவாத புண்டரிகம் என்(று) அஞ்சி – மேவும்
பிடிதழுவி மா(று) அதிரும் கானிற் பிழையால்
வடிதழுவும் வேலோய் வரவு.

பாயாத வேங்கை, பூவாத புண்டரிகம் என்பன முறையே வேங்கை மரத்தையும், புலியையும் குறிப்பாக உணர்ததுவதால் இது குறிப்பு விபாவனையாயிற்று.

## வினை எதிர்மறுத்துப் பொருள் புலப்படுத்துவது:-

ஒன்றற்கு உரிய வினையை மறுப்பதும், பொருளைப் புலப்படுத்திக் கூறுவதும் வினை எதிர் மறுத்துப் பொருள் புலப்படுத்தல் ஆகும்.

(எ-டு)

பூட்டாத வில் குனித்துப் பொங்குமுகில் எங்கும்
தீட்டாத அம்பு சிதறுமால் - ஈட்டமாய்க்
காணாத கண்பரப்பும் தோகை கடும்பழிக்கு
நாணா(து) அயர்த்தார் நமர்.

வில்லுக்கு நாண் பூட்டுதல், அம்பிற்குக் கூர் தீட்டுதல், கண்ணிற்குக் காணுதல் ஆகியவை அவ்அவற்றிற்கு உரிய வினைகளாகும். அவ்வினைகள் மறுக்கப்பட்டுப் பூட்டாத வில் என்பது வானவில்லைப் புலப்படுத்தியது. தீட்டாத அம்பு என்பது மழைத்துளியைக் குறித்தது. காணாத கண் என்பது மயில்தோகையில் உள்ள கண்களைக் குறித்தது. எனவே இது வினை எதிர்மறுத்துப் பொருள் புலப்படுத்தலாயிற்று.

## பொது வகையால் காரணம் விலக்கிக் காரியம் புலப்படுத்துவது:-

ஒரு வினைக்கான காரணத்தைப் பொதுவாக விலக்கிக், குறிப்பாகப் பெறும் வகையில் செயல்களைக் கூறும் அணி.

(எ-டு)

காரணம் இன்றி மலையா நிலம்கனலும்
ஈரமதிவெதும்பற்(கு) என்நிமித்தம் - காரிகையார்க்(கு)
யாமே தளர இயல்பாக நீண்டன கண்
தாமே திரண்ட தனம்.

இச்செய்யுளில் கனலுதல், வெதும்புதல், நீளுதல், திரளுதல் என்பனவற்றிற்குரிய காரணங்களைப் பொதுவாக விலக்கிக் காரியங்கள் கூறப்பட்டுள்ளன.

## ஓட்டணி

கவிஞன் தான் கூறக் கருதிய ஒன்றை நேரே கூறாமல் விடுத்து, அதனை ஒப்புமை உடைய பொருளோடு ஒட்டிக் கூறுவான். அதன் வாயிலாகச் சொல்லக் கருதியதைக் குறிப்பாக உணர்த்துவான். இதனை ஒட்டணி, பிறிதுமொழிதல், நுவலா நுவற்சி, உவமப்போலி எனவும் கூறுவர்.

## இலக்கணம்:-

“கருதிய பொருள்தொகுத்(து) அதுபுலப்படுத்தற்(கு)
ஒத்ததுஒன்(று) உரைப்பான் அ஼து ஒட்(டு) என மொழிப”
(தண்டி-50)

புலவன் தன்னால் கருதப்பட்ட பொருளை மறைத்து அதனை வெளிப்படுத்துவதற்குத் தகுதியுடைய பிறிதொன்றினைச் சொல்லின் அது ஒட்டு என்னும் அணியாகும்.

## ஓட்டணியின் வகைகள்:-

அதுவே
அடையும் பொருளும் அயல்பட மொழிதலும்
அடைபொது ஆக்கி ஆங்ஙனம் மொழிதலும்
விரவத்தொடுத்தலும் விபரீதப் படுத்தலும்
எனநால் வகையினும் இயலும்என்ப”
(தண்டி-51)

மேற்சொல்லப்பட்ட ஒட்டணியானது கூறுகின்ற பொருளும் அதனது அடையும் வேறுபட மொழிதல், அடைபொதுவாக்கிப் பொருள் வேறுபட மொழிதல், அடை விரவிப் பொருள் வேறுபட மொழிதல், அடையைத் திரிபுபடுத்திப் பொருள் வேறு படமொழிதல் என நான்கு வகைப்படும்.

## அடையும் பொருளும் அயல்பட மொழிதல்:-

அடைமொழியையும் அடையடுத்த பொருளையும் வேறாகக் கூறுவது அடையும் பொருளும் அயல்பட மொழிதலாகும்.

(எ-டு)

வெறிகொள் இனச்சுரும்பு மேய்ந்ததோர் காவிக்
குறைபடுதேன் வேட்டும் குறுகும் - நிறைமதுச்சேர்ந்(து)
உண்டாடும் தன்முகத்தே செவ்வி உடையதோர்
வண்தா மரைபிரிந்த வண்டு.

இப்பாடலில் சொல்லக் கருதிய பொருளான தலைவனை விடுத்து அதற்கு வேறான வண்டையும் அதற்கேற்ற அடைமொழிகளையும் கூறியுள்ளமையால் இது அடையும் பொருளும் அயல்பட மொழிதல் ஆயிற்று.

**<u>அடைபொதுவாக்கிப் பொருள் வேறுபட மொழிதல்:-</u>**

அடைமொழிகளைப் பொதுவாகக் கூறிப்பொருளை மட்டும் வேறுபடக் கூறுவது அடைபொதுவாக்கிப் பொருள் வேறுபடக் கூறுதலாகும்.

(எ-டு)

உண்நிலவு நீர்மைத்தாய் ஓவாப் பயன்சுரந்து
தண்ணளி தாங்கும் மலர்முகத்துக் - கண் நெகிழ்ந்து
நீங்கல் அரிய நிழல் உடைத்தாய் நின்(று)எமக்கே
ஓங்கியதோர் சோலை உளது.

இப்பாடலில் கவிஞன் சொல்லக் கருதி மறைந்த பொருள் வள்ளல், அதனைப் புலப்படுத்த எல்லா வகையிலும் ஒத்ததாகக் கூறப்பட்ட பொருள் சோலையாகும். இவ்இரண்டுக்கும் பொருந்துமாறு அடைமொழிகள் கூறப்பட்டன. சொல்லக் கருதிய வள்ளலுக்கு வேறாகச் சோலையைக் காட்டியதால் இது அடைபொதுவாகிப் பொருள் வேறுபட மொழிதல் ஆயிற்று.

**<u>அடைவிரவிப் பொருள் வேறுபட மொழிதல்:-</u>**

புலவன்தான் கூறக் கருதிய பொருளை மறைத்துப் பிறிதொன்றாகிய உவமையைக் கூறிக் குறிப்பால் அப்பொருளை உணர்த்தும் வகையில் இரண்டிற்கும் விரவி வரும் அடைமொழிகளை அமைப்பது.

(எ-டு)

தண்ணளிசேர்ந்(து) இன்சொல் மருவும் தகைமைத்தாய்
எண்ணிய எப்பொருளும் எந்நாளும் - மண்ணுலகில்
வந்து நமக்களித்து வாழும் முகில்ஒன்(று)
தந்ததால் முன்னனத் தவம்.

இப்பாடலில் ‘தண்ணளிசேர்ந்து இன்சொல் மருவும் தகைமைத்தாய்’ என்னும் அடைமொழி முகிலுக்கும் வள்ளலுக்கும் பொதுவாய் வந்துள்ளது. ‘எண்ணிய எப்பொருளும் எந்நாளும் மண்ணுலகில் வந்து நமக்களித்து வாழும்’ என்னும் அடைமொழி முகிலுக்குப் பொருந்தாது. வள்ளலுக்கே பொருந்தியும் விரவி நிற்க, முகிலாகிய பொருள் வள்ளலைப் புலப்படுத்துகிறது.

## அடையை விபரீதப்படுத்துப் பொருள் வேறுபட மொழிதல்:-

சொல்ல மறைத்த பொருளைப் புலப்படுத்திக் காட்டும் பொருளுக்குப் பொருந்தாத அடைமொழிகளைச் சேர்த்துக் கூறுவது அடையை விபரீதப்படுத்துப் பொருள் வேறுபட மொழிதலாகும்.

(எ-டு)

கடைகொல் உலகியற்கை காலத்தின் தீங்கால்
அடைய அரிதாயிற்று அன்றே-அடைவோர்க்(கு)
அருமை உடைத்தன்றி அம்தேன் சுவைத்தாய்க்
கருமை விரவாக் கடல்.

இப்பாடலில் கவிஞன் கூறக் கருதி மறைத்த பொருள் ஒரு ‘வள்ளல்’ அதனைப் புலப்படுத்திக் கூறிய பொருள் ‘கடல்’ அடைவோருக்கு அருமையின்றி இருத்தல், தேன்சுவை உடைத்தாய், கருமை விரவாதிருத்தல் ஆகிய அடைமொழிகளைக் கடலுக்கு விபரீதமாகக் (மாறுபாடாக) கூறியிருத்தலின் இ·து அடையை விபரீதப்படுத்துப் பொருள் வேறுபட மொழிதலாயிற்று.

## அதிசயவணி

தான் கூறக் கருதிய ஒருபொருளின் உண்மைத் தன்மையினை உள்ளபடி கூறாமல் உயர்த்திக் கூறுவது. இதனை உயர்வு நவிற்சி அணி, வியப்பணி என்றும் கூறுவர்.

## அதிசய அணியின் இலக்கணம்:-

மனப்படும் ஒரு பொருள் வனப்(பு)உவந்து உரைப்புழி
உல(கு)வரம்(பு) இறவா நிலைமைத்(து) ஆகி
ஆன்றோர் வியப்பத் தோன்றுவ(து) அதிசயம்.

(தண்டி-52)

புலவன் தான் எண்ணிய பொருளினது அழகை உவந்து சொல்லுவான். அவ்இடத்து உலக இயல்புக்கு மாறாகாத வண்ணம் உயர்ந்தோர் வியப்படையும்படி சொல்லுவது அதிசயம் என்னும் அணியாகும்.

## அதிசய அணியின் வகைகள்:-

அதுதான்
பொருள்குணம் தொழில்ஐயம் துணிவேதிரிபு எனத்
தெருள்உறத் தோன்றும் நிலைமைய(து) என்ப.
(தண்டி-53)

அதிசய அணி ஆறு வகைப்படும். பொருள் அதிசயம், குண அதிசயம், தொழில் அதிசயம், ஐய அதிசயம், துணிவு அதிசயம், திரிபு அதிசயம் என்ப பெயர் பெறும்.

## பொருள் அதிசயம்:-

பொருளால் அதிசயம் தோன்றும்படி கூறுவது பொருள் அதிசயமாகும்.

(எ-டு)
பண்டு புரம்எரித்த தீமேல் படர்ந்(து) இன்றும்
அண்ட முகடு நெருப்புஅறா(து) – ஒண்தளிர்க்கை
வல்லி தழுவக் குழைந்த வடமேடு
வில்லி நுதல்மேல் விழி.

இப்பாடலில் முப்புரத்தை எரித்த தீயானது வான்வெளியில் இன்றும் அணையாமல் இருக்கின்றது என்பது உலக இயல்புக்கு மாறாக அமைந்துள்ளது. இது வியப்பைத் தருவதால் பொருள் அதிசயமாயிற்று.

## குண அதிசயம்:-

குணத்தால் வியக்கும்படியாகக் காட்டுவது குண அதிசயம் ஆகும்.

(எ-டு)
மாலை நில(வு)ஒளிப்ப மாதர் இழைபுனைந்த
நீலமணிகள் நிழல்உமிழ – மேல்விரும்பிச்
செல்லும் இவள்குறித்த செல்வன்பால் சேர்தற்கு
வல்இருள்ஆ கின்ற மறுகு.

இப்பாடலில் கவிஞன் கூறக்கருதிய பொருள் நீலமணியின் ஒளியாகும். தலைவி அணிந்த நீலமணியின் ஒளி சந்திரன் ஒளியை மறைத்துத் தெருவில் இருளை உண்டாக்கியது என்று ஒரு பொருளின் பண்பை வியந்து கூறுவதால் இது குண அதிசயமாயிற்று.

## தொழில் அதிசயம்:-

தொழிலை வியக்கும்படியாகக் கூறுவது தொழில் அதிசயம் ஆகும்.

(எ-டு)

ஆளும் பரியும் கரியும் சொரிகுருதி
தோளும் தலையும் சுழித்(து) எறிந்(து) – நீள்குடையும்
வள்வார் முரசும் மறிதிரைமேல் கொண்(டு) ஒழுக
வெள்வாள் உறைகழித்தான் வேந்து.

இப்பாடலில் வாளினை உறையிலிருந்து உருவுதலாகிய தொழிலால் காலாளும், யானையும், குதிரையும் வெட்டப்படுகின்றன. இதில் அரசனது போர்த்தொழில் மிகுத்துக் கூறப்பட்டதால் தொழில் அதிசயமாயிற்று.

## ஐய அதிசயம்:-

ஐயுற்றுக் கூறுவதால் அதிசயப்பட்ட எடுத்துரைப்பது ஐயஅதிசயம் ஆகும்.

(எ-டு)

உள்ளம் புகுந்தே உலாவும் ஒருகால் என்
உள்ளம் முழுதும் உடன்பருகும் - ஒள்ளிழைநின்
கள்ளம் பெருகும் விழிபெரிய வோகவல்வேன்
உள்ளம் பெரிதோ உரை.

இப்பாடலில் ‘விழி பெரியவோ உள்ளம் பெரிதோ’ என்னும் ஐயத்தினால், கண்களின் பெருமை மிகுத்துக் கூறப்பட்டதனால் ஐயவதிசயம் ஆயிற்று.

## துணிவு அதிசயம்:-

துணிவுற்றுக் கூறும் முறையால் அதிசயம் தோன்றும்படி உரைப்பது துணிவு அதிசயமாகும்.

(எ-டு)

பொங்கிச் செறிந்து புடைதிரண்டு மீ(து) இரண்டு
செங்கலசக் கொங்கை திகழுமால் - எங்கோன்தன்
தில்லையே அன்னார் இவர் அல்குல் தேரின்மேல்
இல்லையோ உண்டா இடை.

இப்பாடலில் கவிஞன் கூறவந்த பொருள் பெண்ணின் மெல்லிடை. முதலில் அவ்இடை உண்டோ? இல்லையோ? என ஐயுற்றுக் கூறப்பட்டது. பின் மார்புகள் வாயிலாக உண்டு எனத் தெளிவதால் துணிவாயிற்று. இடையின் நுண்மையைச் சிறப்பித்துக் கூறியதால் துணிவதிசயமாயிற்று.

## திரிபு அதிசயம்:-

ஒரு பொருளை அதனோடு ஒத்த வேறு பொருளோ எனத் திரித்துக்காணும் அளவுக்கு உயர்த்திக் கூறுவது.

(எ-டு)

திங்கள் சொரிநிலவு சேர்வெள்ளி வள்ளத்துப்
பைங்கிள்ளை பால்என்று வாய்மடுக்கும் - அங்(கு)அயலே
காந்தர் முயக்(கு) ஒழிந்தார் கைவறிதே நீட்டுவரால்
ஏந்திழையார் பூந்துகிலாம் என்று.

இப்பாடலில் முற்றத்தில் தோன்றும் நிலவின் ஒளியினைக் கிளி பால் என்றும், பெண்கள் பூந்துகில் என்றும் மயக்கம் கொள்வதால் இது திரிபு அதிசயமாயிற்று.

# பாடம் - 15

## தற்குறிப்பேற்ற அணி

இயல்பாக நிகழும் நிகழ்ச்சி ஒன்றின் மேல் கவிஞன் தான் கூறக் கருதிய பொருளை ஏற்றிச் சுவைபட உரைப்பது தற்குறிப்பேற்ற அணியாகும். இதனை நோக்கணி என்றும் கூறுவர்.

### தற்குறிப்பேற்ற அணியின் இலக்கணம்:-

பெயர்பொருள் அல்பொருள் எனஇரு பொருளினும்
இயல்பின் விளைதிறன் அன்றி அயல்ஒன்(று)
தான்குறித்(து) ஏற்றுதல் தற்குறிப் பேற்றம்.
(தண்டி-54)

இயங்கும் பொருளும், இயங்காத பொருளும் ஆகிய இருவகை பொருள்களிடத்தும் இயல்பாக நிகழும் தன்மையை விடுத்து, கவிஞன் தான் கருதிய வேறொன்றினை அவற்றின் மீது ஏற்றிச் சொல்லுவதே தற்குறிப்பேற்றம் என்னும் அணியாகும்.

### பெயர் பொருள் தற்குறிப்பேற்றம்:-

இயங்குகின்ற பொருளில் இயல்பாக நடக்கும் நிகழ்ச்சி மீது தன் கருத்தை ஏற்றிக் கூறுவது பெயர் பொருள் தற்குறிப்பேற்றம் ஆகும்.

(எ-டு)

மண்படுதோள் கிள்ளி மதயானை மாற்(று)அரசர்
வெண்குடையைத் தேய்த்த வெகுளியால் - விண்படர்ந்து
பாயும்கொல் என்று பனிமதியம் போல்வதூஉம்
தேயும் தெளிவிசும்பில் நின்று.

இப்பாடலில் பெயர்பொருளாக உள்ளது ‘சந்திரன்’ அதனிடம் இயல்பாக உள்ள தன்மை தேய்தல் ஆகும். இத்தன்மையை மறைத்துச் ‘சோழனுடைய மதயானை பகையரசரது வெண் கொற்றக் குடையைச் சிதைத்த சினத்தைக் கண்டு, தன் மீது பாயுமோ’ என்னும் அஞ்சத்தால் அஞ்சித் தேயும் எனக் கவிஞர் தன் கருத்தைச் சந்திரன்மேல் ஏற்றிக் கூறியிருப்பதால், இது பெயர் பொருள் தற்குறிப்பேற்றம் ஆயிற்று.

## பெயராப் பொருள் தற்குறிப்பேற்றம்:-

இயங்காத பொருளில் இயல்பாக நடக்கும் நிகழ்ச்சி மீது தன் கருத்தை ஏற்றிக் கூறுவது பெயராப் பொருள் தற்குறிப்பேற்றம் ஆகும்.

(எ-டு)

வேனில் வெயிற்(கு) உலர்ந்த மெய்வறுமை கண்(டு)இரங்கி
வானின் வளம்சுரந்த வண்டியற்குத்-தான்உடைய
தாதுமே தக்க மதுவும் தடம்சினையால்
போதுமீது ஏந்தும் பொழில்.

இப்பாடலில் கூறப்பட்ட பொருள் சோலை. இது பெயராத பொருள். வெப்பத்தால் வாடிய காலத்தில் மழை பொழிந்தது மேகம் அதற்குக் கைமாறாகத் தன்னிடத்துள்ள பூவையும் தேனையும் சோலைகள் கிளையாகிய கையில் ஏந்தி நின்றன என்பது கவிஞன் ஏற்றிக் கூறிய கருத்தாகும். ஆதலால் இது பெயராப் பொருள் தற்குறிப்பேற்றம் ஆயிற்று.

## தற்குறிப்பேற்றம் உவமஉருபுகளோடும் வருதல்:-

அன்னபோல எனும் அவைமுதல் ஆகிய
சொல்நிலை விளங்கும் தோற்றமும் உடைத்தே
(தண்டி-55)

அன்ன, போல என்பவை முதலாகிய உவமை உருபுகளைப் பெற்றும் தற்குறிப்பேற்ற அணி அமையும்.

(எ-டு)

காமருதேர் வெய்யவன் எங்கும் கரம்பரப்பித்
தேமருவு சோலை மலர்திறக்கும் - தாமரையின்
தொக்க இதழ்விரித்துப் பார்க்கும் தொலைந்(து) இருள்போய்ப்
புக்க புரைதிளைப்பான் போல்.

சூரியனைக் கண்டு மலர்கள் மலர்தல் என்பது இயல்பான நிகழ்ச்சி. ஆனால் தனக்குத் தோற்ற இருள், மலர்களுள் மறைந்திருக்குமோ எனத் தன் கைகளால் திறந்து பார்த்துத் தேடியதை ஒத்திருந்தது என்பது கவிஞன் ஏற்றிக் கூறிய கருத்தாகும். இப்பாடலில் போல என்னும் உவமஉருபு இடம் பெற்றுள்ளது. இதனால் உவம உருபுகளைப் பெற்றும் தற்குறிப்பேற்றம் அமையும் என்பது காட்டப்பட்டது.

## ஏதுவணி

ஒரு பொருளில் தோன்றும் தன்மைக்கு இதனாலேயே இது நிகழ்ந்தது எனக் காரணத்தை மிகுத்துச் சொல்லுவது ஏது என்னும் அணியாகும்.

### ஏது அணியின் இலக்கணம்:-

யாதன்திறத்தினும் இதனின்இது விளைந்த(து)என்(று)
ஏதுவிதந்(து) உரைப்ப(து) ஏது அதுதான்
காரகம் ஞாபகம் எனஇரு திறப்படும்.
(தண்டி-56)

யாதானும் ஒரு பொருள் திறத்து அதனால் இது நிகழ்ந்தது என்று காரணத்தைச் சிறப்பித்துச் சொல்லுவது ஏது என்னும் அணியாகும். அது காரக ஏது, ஞாபக ஏது என்னும் இரண்டு வகைப்படும்.

### காரக ஏதுவின் வகைகள்:-

முதல்வனும் பொருளும் கருமமும் கருவியும்
ஏற்பது நீக்கமும் எனஇவை காரகம்.
(தண்டி-57)

கருத்தா, பொருள், கருமம், கருவி, ஏற்பது, நீக்கம் என்னும் ஆறும் காரக ஏதுவின் வகைகளாகும்.

### கருத்தா காரக ஏது:-

கருத்தாவின் செயலைக் காரணமாக்கிக் கூறுவது கருத்தா காரக ஏதுவாகும்.
(எ-டு)

எல்லைநீர் வையகத்(து) எண்ணிறந்த எவ்உயிர்க்கும்
சொல்லரிய பேரின்பம் தோற்றியதால் - முல்லைசேர்
தா(து) அலைத்து வன்கொன்றைத் தார்அலைத்து வண்(டு)ஆர்க்கப்
பூதலத்து வந்த புயல்.

இப்பாடலில் கூறப்பட்ட கருத்தா ‘வந்தபுயல்’. அது உயிர்களுக்கு இன்பத்தைத் தோற்றுவித்தது எனக் காரகமாகவும் தாதலைத்தல், தார் அலைத்தல் ஆகிய செயல்கள் நிகழ்வதற்கு ஏதுவாகவும் நிற்றலால் கருத்தா காரக ஏதுவாயிற்று.

## பொருட்காரக ஏது:-

பொருள்களின் செயலைக் காரணமாக்கிக் கூறுவது.

(எ-டு)

கனிகொள் பொழில்அருவி கைகலந்து சந்தின்
பனிவிரவிப் பாற்கதிர்கள் தோய்ந்து – தனியிருந்தோம்
சிந்தை உடனே உயிர்உணக்கும் தென்மலயம்
தந்த தமிழ்மா ருதம்.

இப்பாடலில் கூறப்பட்ட பொருள் மாருதம் ஆகும். அது பிரிந்திருந்தோரின் மனத்தோடு உயிரையும் வாட்டுகின்றது என்று காரகமாகவும், கைகலத்தல், மருவல், தோய்தல் ஆகிய காரணங்களால் எனக் கூறுவதால் இது பொருட் காரக ஏதுவாயிற்று.

## கரும காரக ஏது:-

வினையின் செயலைக் காரணமாக்கிக் கூறுவது.

(எ-டு)

மலையின் அலைகடலின் வாள்அரவின் வெய்ய
தலையில் பயின்ற தவத்தால் - தலைமைசேர்
அம்மாதர் புல்லும் அபயன் புயம்புணர
எம்மா தவம்புரிந்தோம் யாம்.

இப்பாடலில் தவம் என்பது செயப்படுபொருளாகும். அது புரிந்தோம் என்னும் வினையோடு முடிந்தது. அத்தவமே கருவியாக நின்றது. அதுவே சோழனின் தோளைப் புணர்தலாகிய காரியத்திற்கு ஏதுவும் ஆகியது. ஆதலால் இது கரும காரக ஏதுவாயிற்று.

## கருவி காரக ஏது:-

கருவியாகிய துணைக்காரணத்தின் செயலினை ஏதுவாக்கிக் காட்டுவது.

(எ-டு)

கரடத்தான் மாரியும் கண்ணால் வெயிலும்
நிரைவயிரக் கோட்டால் நிலவும் - சொரியுமால்
நீளார்த் தொடைஅதுலன் நேரார் கலிங்கத்து
வாளால் கவர்ந்த வளம்.

இப்பாடலில் கூறப்பட்ட கருவிகள் கரடம் (மதம்), கண், கோடு ஆகியன. இவை முறையே மழை, வெயில், நிலவு ஆகியவற்றைத் தோற்றுவித்தன எனக் கூறுவதால் காரகமாகவும், இவற்றை அக்கருவிகள் தோற்றுவித்தன எனக் கூறுவதால் அவை ஏதுவாகவும் நிற்கின்றன. இது கருவி காரக ஏதுவாயிற்று.

## ஞாபக ஏது

தொழிலை அறிவிப்பது ஞாபக ஏதுவாகும்.

### ஞாபக ஏதுவின் இலக்கணம்:-

''அவையல பிறவின் அறிவது ஞாபகம்''

(தண்டி-58)

சொல்லப்பட்ட காரணமன்றிப் பிற காரணத்தினால் சிந்தித்து அறிவது (உய்த்துணர்வது) ஞாபக ஏதுவாகும்.

(எ-டு)

காதலன்மேல் ஊடல் கரைஇறத்தல் காட்டுமால்
மாதர் நுதல்வியர்ப்ப வாய்துடிப்ப-மீது
மருங்குவளை வில்முரிய வாள்இடுக நீண்ட
கருங்குவளை சேந்த கருத்து.

பெண்ணின் நெற்றி வியர்த்தல், வாய் துடித்தல், புருவங்கள் குவிந்து வளைதல், கண்கள் சிவத்தல் ஆகிய செயல்கள் தங்கள் காதலன் மேல் கொண்ட ஊடல் மிகுதியைக் குறிப்பால் உணர்த்தியதால் இது ஞாபக ஏதுவாயிற்று.

### ஏதுவணியின் வேறுபாடு:-

### அபாவஏது

''அபாவம் தானும் அதன்பாற் படுமே''

(தண்டி-59)

ஒன்றினது இன்மையாகிய அபாவமும் அவ்ஏதுவின் பகுதியாக வரும். (அபாவம் - இன்மை)

## அபாவத்தின் வகைகள்:-

என்றும் அபாவமும் இன்மையது அபாவமும்
ஒன்றின்ஒன்(று) அபாவமும் உள்ளதன் அபாவமும்
அழிவுபாட்(டு) அபாவமும் எனஐந்து அபாவம்
(தண்டி-60)

மேலே சொல்லப்பட்ட அபாவஏது, என்றும் அபாவம், இன்மையது அபாவம், ஒன்றின் ஒன்று அபாவம், உள்ளதன் அபாவம், அழிவுபாட்டு அபாவம் என ஐந்து வகையாகச் சொல்லப்பெறும்.

## என்றும் அபாவ ஏது:-

எக்காலத்தும் இல்லாத ஒரு தன்மையை காரணமாக்கிக் கூறுவது.

(எ-டு)

யாண்டும் மொழிதிறம்பார் சான்றவர் எம்மருங்கும்
ஈண்டு மயில்கள் இனம்இனமாய் - மூண்(டு) எழுந்த
காலையே கார்முழங்கும் என்(று)அயரேல் காதலர்தேர்
மாலையே நம்பால் வரும்.

இப்பாடலில், 'மொழி திறம்புதல்' என்பது சான்றோரிடம் எக்காலத்தும் இல்லாத தன்மையாகும் என்று கூறப்பட்டுள்ளது. இவ் ஏதுவால் 'காதலர் தேர் மாலையே வரும்' எனக் கூறப்படுவதால், இது என்றும் அபாவம் ஆயிற்று.

## இன்மையது அபாவம்:-

இல்லாமையினது இல்லாமை ஏதுவாக வருவது இன்மையது அபாவ ஏதுவாகும்.

(எ-டு)

காரார் கொடிமுல்லை நின்குழல்மேல் கைபுனைய
வாராமை இல்லை வயவேந்தர் - போர் கடந்த
வாளைஏய் கண்ணி நுதல்மேல் வரும்பசலை
நாளையே நீங்கும் நமக்கு.

இப்பாடலில் வாராமை இல்லை என்பது இன்மையது அபாவம். வருதலுக்கு எதிர்மறை – வாராமை அது இல்லை. எனவே வருதல் உண்டென்பது பெறப்படுகிறது. வாராமையின்மையால் பசலை நீங்கும் என்பதால் இது இன்மையது அபாவ ஏதுவாயிற்று.

## ஒன்றினொன்று அபாவ ஏது:-

ஒன்றன்கண் ஒன்றனது இல்லாமை ஏதுவாக வருவது ஒன்றினொன்று அபாவ ஏதுவாகும்.

(எ-டு)

பொய்ம்மை உடன்புணரார் மேலானோர் பொய்ம்மையும்
மெய்ம்மைசூழ் மேலாரை மேவாவாம் - இம்முறையால்
பூஅலர்ந்த தாரார் பிரிந்தால் பொலங்குழையார்
காவலர்சொல் போற்றல் கடன்.

இப்பாடலில் பொய்ம்மையாகிய ஒன்றின் கண் பெரியோர் புணரார். பொய்யும் பெரியோரைப் புணராது என்பது ஒன்றின் ஒன்று அபாவமாகும். இதுவே பெரியோராக விளங்கும் தலைவரின் சொல்லைப் பாதுகாப்பதற்கு ஏதுவாக அமைந்தது. ஆதலின் இது ஒன்றினொன்று அபாவஏதுவாயிற்று.

## உள்ளதன் அபாவ ஏது:-

ஓரிடத்தும் ஒரு காலத்தும் உள்ள பொருள் வேறு ஓர் இடத்தும் வேறொரு காலத்தும் இல்லாதிருத்தலே உள்ளதன் அபாவ ஏதுவாகும்.

(எ-டு)

கரவொடு நின்றார் கடிமனையின் கையேற்(று)
இரவொடு நிற்பித்த(து) எம்மை – அரவொடு
மோட்(டு)ஆமை பூண்ட முதல்வனை முன்வணங்கு
மாட்டாமை பூண்ட மனம்.

இப்பாடலில் கூறப்பட்ட பொருள் மனம். அதனது இன்மை முற்பிறவியில் சிவனை வணங்காமை. உள்ளதாய்த் திகழ்வது மறைப்போரிடம் பொருள் கேட்டு நிற்றல். முன்பு வணங்காமையே தற்போது இரந்து நிற்றற்கு ஏதுவானதால் இது உள்ளதன் அபாய ஏதுவாயிற்று.

## அழிவுபாட்டு அபாவ ஏது:-

முன்பு உள்ளது அழிவுபட்டு இப்போது இல்லாமல் போதலே அழிவுபாட்டு அபாவ ஏதுவாகும்.

(எ-டு)

கழிந்த(து) இளமை களிமயக்கம் தீர்ந்த(து)
ஒழிந்த(து) காதல்மேல் ஊக்கம் - சுழிந்து
கருநெறியும் கூந்தலார் காதல்நோய் தீர்ந்த(து)
ஒருநெறியே சேர்ந்த(து) உளம்.

இப்பாடலில் இளமை கழிதல், மயக்கம் தீர்தல், ஊக்கம் ஒழிதல், காதல் நோய் தீர்தல் ஆகியவை அழிவுபட்டதைக் கூறுதலால் அழிவுபாட்டு அபாவம் ஆகும். அவை மனம் ஒருவழிப்படுவதற்கு ஏதுவானதால் இது அழிவுபாட்டு அபாவ ஏதுவாயிற்று.

## சித்திர ஏது

ஆச்சரியத்தைத் தரத்தக்கதாய் அமைவது சித்திர ஏதுவாகும்.

## ஏது அணியின் பிறிதோர் வகைகள்:-

தூரகா ரியமும் ஒருங்குடன் தோற்றமும்
காரணம் முந்துறூஉம் காரிய நிலையும்
யுத்தமும் அயுத்தமும் முத்தையோ(டு)இயலும்.
(தண்டி-61)

## தூர காரிய ஏது:-

காரியம் ஓரிடத்திலும் காரணம் வேறிடத்திலும் நிகழ்வது தூர காரிய ஏதுவாகும்.

(எ-டு)

வேறொரு மாதர்மேல் வேந்தன் நகநுதியால்
ஊறுதர இம்மா(து) உயிர்வாடும் - வேறே
இருவரே மெய்வடிவில் ஏந்திழை நல்லார்
ஒருவரே தம்மில் உயிர்.

தலைவன் புண் உண்டாக்கியதற்குப் (காரணம்) பரத்தையே உயிர் வாடி இருக்க (காரியம்) வேண்டும். அவ்உயிர் வாடுதல் பரத்தையரிடம் நிகழாமல் வேறோர் இடத்தில் இருந்த தலைவியிடம் ஏற்பட்டதால் இது தூரகாரியம் ஆயிற்று. தலைவி உயிர் வாடுவதற்குப் பரத்தையின் மேல்பட்ட நகம் ஏதுவாயிற்று. ஆதலின் இது தூரகாரிய ஏதுவாயிற்று. இச்செயல்கள் வியக்கும்படி இருந்ததால் சித்திரமாயிற்று.

## ஒருங்குடன் தோற்ற ஏது:-

காரணமும் காரியமும் ஒன்றாக நிகழ்வது ஒருங்குடன் தோற்ற ஏதுவாகும்.

(எ-டு)

விரிந்த மதிநிலவின் மேம்பாடும் வேட்கை
புரிந்த சிலைமதவேள் போரும் - பிரிந்தோர்
நிறைதளர்வும் ஒக்க நிகழ்ந்தனவால் ஆவி
பொறைதளரும் புன்மாலைப் போழ்து.

இப்பாடலில் நிலவின் மேம்பாடு, மன்மதனின் போர் ஆகிய காரணங்கள் பிரிந்தோர் தளர்தல் ஆகிய காரியத்தோடு ஒருங்கே நிகழ்ந்தன. தளர்வதற்கு நிலவும் மன்மதனும் காரணங்கள் என்பதால் அவை ஏதுவாயின. ஆகையால் இது ஒருங்குடன் தோற்ற ஏதுவாயிற்று.

## காரணம் முந்துறூஉம் காரியநிலை ஏது:-

காரணத்திற்கு முன்னர்க் காரியம் நிகழ்வது காரணம் முந்துறூஉம் காரியநிலை ஏதுவாகும்.

(எ-டு)

தம்புரவு பூண்டோர் பிரியத் தனியிருந்த
வம்புலவு கோதையர்க்கு மாரவோள் - அம்பு
பொரும்என்று மெல்லாகம் புண்கூர்ந்த மாலை
வரும்என்(று) இருண்ட மனம்.

இப்பாடலில் மார்பு புண்ணாதல், மனம் இருளல் ஆகிய இரண்டும் காரியங்கள். இதற்கு முறையே அம்பு தைத்தல், மாலைப்பொழுது வருதல் என்னும் இரண்டும் காரணங்களாவன. காரணம் நிகழ்வதற்கு முன்னரே காரியங்கள் நிகழ்ந்ததாலும் அந்நிகழ்வுகளுக்குத் தோன்றா ஏது கூறப்பட்டதாலும் இது காரணம் முந்துறூஉம் காரியநிலை ஏதுவாயிற்று.

## யுத்த ஏது:-

காரணத்திற்குப் பொருத்தமான காரியம் நிகழ்வது யுத்த ஏதுவாகும்.

(எ-டு)

பொன்னி வளநாடன் கைவேல் பொழிநிலவால்
முன்னர் அசைந்து முகுளிக்கும் - தன்னோ்
பொரவந்த வேந்தர் புனைகடகச் செங்கை
அரவிந்தம் நூறா யிரம்.

சந்திரனைக் கண்டு செந்தாமரைகள் குவிதல் இயல்பு. அதற்கு ஏற்பக் கையாகிய தாமரையின் குவிவுக்கு வேட்படையின் ஒளியாகிய நிலவொளி காட்டப்பட்டது. ஆதலால் இது காரணத்திற்குப் பொருத்தமான காரியமாய் யுத்த ஏதுவாயிற்று.

**அயுத்த ஏது:-**

காரணத்திற்குப் பொருந்தாத காரியம் நிகழ்வது அயுத்த ஏதுவாகும்.

(எ-டு)

இகன்மதமால் யானை அனபாயன் எங்கோன்
முகமதியின் மூரல் நிலவால் - நகமலர்வ
செங்கயற்கண் நல்லார் திருமருவு வாள்வதன
பங்கயங்கள் சாலப் பல.

தாமரை மலர்வதற்குச் சூரிய ஒளியே பொருத்தமான காரணமாகும். இப்பாடலில் சந்திரனாக விளங்கும் முகத்திலிருந்து தோன்றும் முறுவலாகிய ஒளியைக் கண்டு பெண்களின் முகத்தாமரை மலர்ந்ததாகக் காட்டப்பட்டுள்ளது. தாமரைகளின் மலர்ச்சியாகிய காரியத்திற்கு நிலவொளி பொருத்தமில்லாத காரணமாதலால் இது அயுத்த ஏதுவாயிற்று.

**ஐய ஏது:-**

ஒரு காரியத்திற்குரிய காரணத்தை ஐயுற்றுக் கூறுவது ஐய ஏதுவாகும்.

(எ-டு)

மாதர் உமைவாய் மழலை மொழியாலோ
ஓது மறையின் ஒலியாலோ – யாதாலோ
கோலம் இருதிறனாக் கொண்டான் திருமிடற்றின்
ஆலம் அமிர்தான வாறு.

மிடற்றில் உள்ள நஞ்சு அமிர்தமானதற்குக் காரணம் மழலை மொழியோ? மறையின் ஒலியோ? யாதோ? என வினவியதால் ஐயமாயிற்று. அவ்ஐயங்களே ஏதுவாயும் நின்றன. ஆதலால் இது ஐய ஏதுவாயிற்று.

## நுட்பவணி

பிறருடைய கருத்தை அறிந்து, அதற்குரிய மறுமொழியைச் சொல்லால் வெளிப்படுத்தாமல் குறிப்பாலோ செயலாலோ அரிதாக உய்த்துணரும்படி புலப்படுத்துவது நுட்ப அணியாகும்.

## நுட்ப அணியின் இலக்கணம்:-

தெரி(பு) வே(று) கிளவாது குறிப்பினும் தொழிலிலும்
அரி(து) உணர் வினைத்திறம் நுட்பம் ஆகும்.
(தண்டி-62)

விளங்க அறிந்து கொண்டதற்கு வேறு வகையாகக் கூறாமல், குறிப்பினாலாவது தொழிலினாலாவது அரிதாக நோக்கி உணரும் தன்மையை உடையது நுட்பம் என்னும் அணியாகும்.

## குறிப்பு நுட்பம்:-

குறிப்பால் நுட்பமாக உணர்ந்து கொள்ளச் செய்வது குறிப்பு நுட்பமாகும்.

(எ-டு)

காதலன் மெல்உயிர்க்குக் காவல் புரிந்ததால்
பேதையர் ஆயம் பிரியாத – மாதர்
படர் இருள்கால் சீக்கும் பகலவனை நோக்கிக்
குடதிசையை நோக்கும் குறிப்பு.

ஆயக்கூட்டத்தால் சூழப்பெற்ற தலைவியைக் கண்டும், பேச முடியாமல் வருந்துகிறான். அந்நேரத்தில் தலைவி கதிரவனையும் பார்க்கிறாள் பின்னர் அது சென்று மறைகின்ற மேற்குத் திசையையும் பார்க்கிறாள். இச்செயல்களாகிய குறிப்புக்கள் ஞாயிறு மறையும் மாலைக்காலத்தில் கூடுதற்கு உடன்பட்டாள் என்பதை உய்த்துணர்ந்து கொள்ள வைத்தன. ஆதலின் இது குறிப்பு நுட்பமாயிற்று.

## தொழில் நுட்பம்:-

தொழிலால் நுட்பமாக உணர்ந்து கொள்ளச் செய்வது தொழில் நுட்பமாகும்.

(எ-டு)

பாடல் பயிலும் பணிமொழி தன்பணைத்தோள்
கூடல் அவாவால் குறிப்(பு) உணர்த்தும் - ஆடவற்கு
மென்தீந் தொடையாழின் மெல்லவே தைவந்தாள்
இன்தீம் குறிஞ்சி இசை.

இப்பாடலில் இடம்பெற்ற தொழில் யாழில் குறிஞ்சிப் பண் மீட்டுதல் ஆகும். இப்பண் புணர்தலுக்குரிய இசையாகும். இது யாமத்தில் இரைக்கப்படுவது. இதனை வேறொரு பொழுதில் தலைவி மீட்டியதால் தனக்குள்ள புணர்ச்சி விருப்பத்தைத் தலைவனுக்கு நுட்பமாகப் புலப்படுத்தினாள். ஆதலின் இது தொழில் நுட்பமாயிற்று.

## இலேசவணி

ஒருவர் தன்னிடத்தில் வெளிப்படும் மெய்ப்பாட்டு உணர்விற்குரிய மெய்யான காரணத்தை மறைத்து அது வேறொன்றால் நிகழ்ந்ததாகக் கூறுவது இலேச அணி எனப்படும்.

## இலேச அணியின் இலக்கணம்:-

குறிப்பு வெளிப்படுக்கும் சத்துவம் பிறிதின்
மறைத்(து) உரையாடல் இலேசம் ஆகும்.
(தண்டி-63)

உள்ளம் கருதியதனை வெளிப்படுத்தும் சத்துவமாகிய குணங்களைப் பிறிதொன்றால் நிகழ்ந்ததாக மறைத்துச் சொல்லுவது இலேசம் என்னும் அணியாகும்.

சத்துவம் என்பன: வெண்பளிங்கில் செந்நூல் கோத்தால் அதன் செம்மை புறம்போ தோன்றும். அதுபோல உள்ளம் கருதியது புலனாக்கும் குணங்கள். அவை சொல் தளர்தல், மெய்வியர்த்தல், கண்ணீர் வழிதல், மெய்நடுக்கம், மெய்வெதும்பல், மெய்ம்மயிர் சிலிர்த்தல் முதலியன. (சத்துவம் - உள்ளதன் தன்மை)

## இலேச அணியின் வகைகள்:-

புகழ்வது போலப் பழித்திறம் புனைதலும்
பழிப்பது போலப் புகழ்புலப் படுத்தலும்
அவையும் அன்ன(து) என்(று) அறைகுநர் உளரே.
(தண்டி – 63)

உள்ளம் கருதியனை வெளிப்படுத்தும் சத்துவமாகிய குணங்களைப் பிறிதொன்றால் நிகழ்ந்ததாக மறைத்துச் சொல்லுவது இலேசம் என்னும் அணியாகும்.

சத்துவம் என்பன: வெண்பளிங்கில் செந்நூல் கோத்தால் அதன் செம்மை புறம்பே தோன்றும். அதுபோல உள்ளம் கருதியது புலனாக்கும் குணங்கள், அவை சொல் தளர்தல், மெய்வியர்த்தல், கண்ணீர் வழிதல், மெய்நடுக்கம், மெய்வெதும்பல், மெய்ம்மயிர் சிலிர்த்தல் முதலியன. (சத்துவம் - உள்ளதன் தன்மை)

## இலேச அணியின் வகைகள்:-

புகழ்வது போலப் பழித்திறம் புனைதலும்
பழிப்பது போலப் புகழ்புலப் படுத்தலும்
அவையும் அன்ன(து) என்(று) அறைகுநர் உளரே.
(தண்டி-64)

ஒன்றனைப் புகழ்வது போலப் பழித்து உரைத்தல், பழிப்பது போலப் புகழ்ந்து உரைத்தல் என்பனவும் முற்கூறிய இலேச அணி ஆகுமென்று சொல்லுவாரும் உளர்.

## புகழ்வது போலப் பழித்தல்:-

ஒன்றனைப் புகழ்வது போலப் பழித்துக் கூறுதலே புகழ்வது போலப் பழித்தல் ஆகும்.

(எ-டு)

மேய கலவி விளைபொழுது நம்மெல்லென்
சாயல் தளராமல் தாங்குமால் - சேயிழாய்
போர்வேட்ட மேன்மைப் புகழாளன் யாம்விரும்பித்
தார்வேட்ட தோள்விடலை தான்.

இப்பாடலில் தலைவி, 'தலைவன் தன்னை புணருங்காலத்துத் தன் மென்மை கெடாமல் பாதுகாக்கிறாள்' எனப் புகழ்வது போலக்கூறி, அக்காலத்தே தன் மென்மைத் தன்மைக் கெட கூட வேண்டியிருக்க, அங்ஙனம் கூடும் தன்மை அறியாதிருக்கிறான் என்ற பழித்துக் கூறுவதால் இது புகழ்வது போலப் பழித்தலாயிற்று.

## பழிப்பது போலப் புகழ்தல்:-

ஒன்றனைப் பழிப்பது போலப் புகழ்ந்து கூறுதலே பழிப்பது போலப் புகழ்தல் ஆகும்.

(எ-டு)

ஆடல் மயில்இயலி அன்பன் அணியாகம்
கூடுங்கால் மெல்லென் குறிப்(பு) அறியான் - ஊடல்
இளிவந்த செய்கை இரவாளன் யார்க்கும்
விளிவந்த வேட்கை இலன்.

இப்பாடலில், தலைமகள் 'புணருங்காலத்தே தன் தலைவன் தன் மென்மை கெடக் கூடுகிறான்' காமவயப்பட்டு நடந்ததனால், குறிப்பறியான் 'இரவாளன்' வேட்கையிலன் எனப் பழிப்பது போலக் கூறி அக்காலத்து அங்ஙனம் கூடுதலே இயல்பாதல் தோன்றப் புகழ்ந்து கூறுவதால், இது பழிப்பது போலப் புகழ்தலாயிற்று.

# நிரல்நிறையணி

கவிஞர் தம் செய்யுட்களில் முதலில் சொற்பொருட்களை வரிசைப்படுத்துவர். அவற்றோடு தொடர்புடையவற்றைப் பின்னர் அதேமுறையில் பொருள்படுமாறு வரிசைப்படுத்திப் பாடுவர். இவ்வாறு அமைப்பதே நிரல்நிறை என்னும் அணியாகும். இதற்கு அடைவணி என்னும் வேறு பெயரும் உண்டு.

## நிரல்நிறை அணியின் இலக்கணம்:-

"நிரல்நிறுத்(து) இயற்றுதல் நிரல்நிறை அணியே"

(தண்டி-65)

சொல்லையும் பொருளையும் நிரலே நிறுத்தி நேரே பொருள் கொள்வது நிரல்நிறை என்னும் அணியாகும். நிரல் நிறுத்துதல் என்று கூறாமல் இயற்றுதல் எனக் கூறப்பட்டதால் இது மொழிமாற்றியும் கொள்ளப்படும்.

## நிரலே நிறுத்தி நேரே பொருள் கொள்வது:- (முறைநிரல் நிறை)

எழுவாயாய் அமைந்த பொருள்களையும் அவற்றிற்குரிய பயனிலைகளையும் கிடந்த முறையிலே இயைத்துப் பொருள் காண்பது முறைநிரல்நிறை அணியாகும். இதனை நிரலே நிறுத்தி நேரே பொருள் கொள்வது என்றும் கூறுவர்.

(எ-டு)

காரிகை மென்மொழியால் நோக்கால் கதிர்முலையாள்  
வார்ப்புருவத் தால் இடையால் வாய்த்தளிரால் - நேர்தொலைந்த  
கொல்லி வடிநெடுவேல் கோங்கரும்பு வில்கரும்பு  
வல்லி கவிர்மென் மலர்.

இப்பாடலில் முன்னர் வைக்கப்பட்ட பொருள் ஆறு. அவை மொழி, நோக்கு, கொங்கை, புருவம், இடை, வாய் என்பன. அவற்றிற்கேற்பக் கொல்லி, வேல், கோங்கரும்பு, கரும்பு வில், வல்லி, முருக்க மலர் என்பவை பின் வைக்கப்பட்டன. இவை மொழியால் தொலைந்தது கொல்லிப் பண் என்பது முதலாகப் பொருள்பட நிரலே வைக்கப்பட்டமையால் முறை நிரல் நிறையாயிற்று.

## நிரலே நிறுத்தி மொழி மாற்றிப் பொருள் கொள்வது:- (மொழிமாற்று நிரல்நிறை)

நிரலே கிடந்த எழுவாய்க்கேற்பப் பயனிலைகளை மாற்றிப்பொருள் பொருந்துமாறு இயைத்துக் காண்பது மொழிமாற்று நிரல்நிறை ஆகும். இதனை நிரலே நிறுத்தி மொழி மாற்றிப் பொருள் கொள்வது என்றும் குறிப்பர்.

(எ-டு)

ஆடவர்கள் எவ்வா(று) அகன்(று) ஒழிவார் வெ.ஃ.காவும்
பாடகமும் ஊரகமும் பஞ்சரமா – நீடியமால்
நின்றான் இருந்தான் கிடந்தான் இதுவன்றோ
மன்றார் மதிற்கச்சி மாண்பு.

இப்பாடலில் முன்னர் வரிசைப்படுத்தப்பட்ட பொருள்கள் மூன்று. அவை வெ.ஃ.கா, பாடகம், ஊரகம் என்பன. பின் நிறுத்தப்பட்ட தொழில்கள் நிற்றல், இருத்தல், கிடத்தல் என்பன. இவை முன் நிறுத்தப்பட்ட சொற்களோடு பொருந்துமாறு நிறுத்தப்படவில்லை. வெ.ஃ.காவில் கிடந்தான், பாடகத்தில் இருந்தான். ஊரகத்தில் நின்றான் எனச் சொற்களை மாற்றி இயைபுபடுத்தப்பட்டதால் இது மொழிமாற்று நிரல்நிறை ஆயிற்று.

## ஆர்வமொழியணி

உள்ளத்தின்கண் நிகழும் ஆர்வத்தின் காரணமாக நிகழ்ச்சிகளை மிகுதிபடுத்திக் கூறுவது ஆர்வமொழி அணியாகும். இதற்கு மகிழ்ச்சி அணி என்னும் வேறுபெயரும் உண்டு.

### ஆர்வமொழி அணியின் இலக்கணம்:-

ஆர்வ மொழிமிகுப்ப(து) ஆர்வ மொழியே
(தண்டி-66)

உள் நிகழ்ந்த ஆர்வம் பற்றி நிகழும் மொழிகள் மிகுதியும் தோன்றுமாறு கூறப்படுவது ஆர்வமொழி என்னும் அணியாகும்.

(எ-டு)

சொல்ல மொழிதளர்ந்து சோரும் துணைமலர்த்தோன்
புல்ல இருதோள் புடைபெயரா – மெல்ல
நினைவோம் எனில்நெஞ் சிடம்போதா(து) எம்பால்
வனைதாராய் வந்ததற்கு மாறு.

இப்பாடலில், தலைவி தலைவன் மீதுள்ள அன்பின் மிகுதியால் தன் மொழியானது தடுமாறிச் சோர்வுபடுகின்றது. தோளானது வளர்வனவல்ல, உள்ளம் இடம் போதாது எனக் கூறுவதால் இது ஆர்வமொழி அணியாயிற்று.

# சுவையணி

உள்ளத்தின்கண் நிகழும் தன்மைகளைப் பிறர் அறியும் வகையில் உடலால் புலப்படுத்திக் காட்டுவதே மெய்ப்பாடாகும். அவைநகை, அழுகை, இளிவரல், மருட்கை, என்றும் கூறப்படும். இச்சுவையினை விளக்குவதே சுவையணி ஆகும்.

## சுவை அணியின் இலக்கணம்:-

உள்நிகழ் தன்மை புறத்துத் தோன்ற
எண்வகை மெய்ப்பாட்டின் இயல்வது சுவையே.
(தண்டி-67)

உள்ளே நிகழ்ந்த தன்மை புறத்துப் புலனாய் விளங்கும்படியாக எட்டுவகைப்பட்ட மெய்ப்பாட்டினாலும் நடப்பது சுவை என்னும் அணியாகும்.

## சுவை அணியின் வகைகள்:-

அவைதாம்
வீரம் அச்சம் இழிப்பொடு வியப்பே
காமம் அவலம் உருத்திரம் நகையே
(தண்டி-68)

மேற்கூறப்பட்ட எண்வகை மெய்ப்பாடுகளைாவன. வீரம், அச்சம், இழிப்பு வியப்பு, காமம், அவலம், உருத்திரம், நகை என்பனவாம்.

## வீரச்சுவை:-

வீரம் காரணமாகத் தோன்றும் சுவையே வீரச் சுவையாகும். இது மனத்துணிவினால் புலப்படுவதாகும்.

(எ-டு)

சேர்ந்த புறவின் நிறைதன் திருமேனி
ஈர்ந்திட்(டு) உயர்துலைதான் ஏறினான் - நேர்ந்த
கொடைவீர மோ?மெய்ந் நிறைகுறையா வன்கண்
படைவீர மோ? சென்னி பண்பு.

இப்பாடலில் சோழ மரபினரின் கொடைவீரம் சிறப்பிக்கப்படுகிறது. புறாவைக் காக்கும் பொருட்டு அதன் எடைக்கு நிகராக தன் தசையை அறுத்து வைத்தும் சரியாகாமையால், தானே தராசில் ஏறி நின்ற துணிவைக் காட்டுவதால் இது வீரச்சுவை ஆயிற்று. சிபிச்சக்கரவர்த்தியின் வரலாறு அவனது குலத்தினைச் சார்ந்த சோழன் மீது ஏற்றிப் பாடப்பட்டுள்ளது.

**அச்சச்சுவை:-**

அச்சம் காரணமாகத் தோன்றும் சுவையே அச்சச் சுவையாகும். அணங்கு, விலங்கு, கள்வர், இறை ஆகி நான்கானும் அச்சம் பிறக்கும் என்பது தொல்காப்பியர் கருத்தாகும்.

(எ-டு)

கைநெரித்து வெய்(து) உயிர்ப்பக் கால்தளர்ந்து மெய்பனிப்ப
மையரிக்கண் நீர்ததும்ப வாய்ப்புலர்ந்தாள் - தையல்
சினவேல் விடலையால் கைஇழந்த செங்கண்
புனவேழம் மேல்வந்த போது.

இப்பாடலில் யானையைக் கண்டதன் காரணமாக அச்சத்திற்குரிய கை நெரித்தல் முதலான செயல்கள் புலப்படுத்தப்பட்டதால் இது அச்சச் சுவையாயிற்று.

**இழிப்புச் சுவை:-**

இழிப்புக் காரணமாகத் தோன்றும் சுவையே இழிப்புச் சுவையாகும். இச்சுவையைத் தொல்காப்பியர் இளிவரல் எனக் குறிப்பிடுகின்றார்.

(எ-டு)

உடைதலையும் மூளையும் ஊன்தடியும் என்பும்
குடரும் கொழுங்குருதி ஈர்ப்ப – மிடைபேய்
பெருநடஞ்செய் பெற்றித்தே கொற்றப்போர்க் கிள்ளி
கருநடரைச் சீறும் களம்.

இப்பாடலில் போர்க்களக்காட்சி சிறப்பிக்கப்படுகிறது. அக்களத்தில் காட்டப்படும் உடைந்த தலை, மூளை, கொழுப்புப் போன்றவை அருவருப்புச் சுவையைத் தோற்றுவித்தன. ஆகையால் இது இழிப்புச்சுவையாயிற்று.

## வியப்புச்சுவை:-

மன எழுச்சி (வியப்பு) காரணமாகத் தோன்றும் சுவை வியப்புச்சுவை ஆகும். இச்சுவையைத் தொல்காப்பியர் மருட்கை எனக் கூறுகிறார்.

(எ-டு)

முத்(து) அரும்பிச் செம்பொன் முறிதனதந்து பைந்துகிரின்
தொத்(து) அலர்ந்து பல்கலனும் சூழ்ந்(து) ஒளிரும் கொத்தினதாம்
பொன்னேர் மணிகொழிக்கும் பூங்கா விரிநாடன்
தன்னேர் பொழியும் தரு.

இப்பாடலில் குறிக்கப்பெறும் பொருள் கற்பக மரமாகும். அது அரும்பாக முத்து, தளிராகச் செம்பொன், பூங்கொத்தாகப் பவளம் என்பவற்றைப் பெற்றிருந்தது. அவற்றுடன் கிளைகளில் பலவகை அணிகலன்களை அணிந்து ஒளிர்ந்தது எனக் காட்டப்படுகிறது. இயற்கையான மரத்திற்கு மாறாகக் காட்டப்பெறும் கற்பகத்தரு புதுமை செறிந்தது. ஆதலால் இது வியப்புச் சுவையைத் தோற்றுவித்தது.

## காமச்சுவை:-

காமம் காரணமாகத் தோன்றும் சுவையே காமச்சுவையாகும். இச்சுவையைத் தொல்காப்பியர், ‘உவகைச் சுவை’ தோன்றும் அடிப்படையாகக் காட்டுகிறார்.

(எ-டு)

திங்கள் நுதல் வியர்க்கும் வாய்துடிக்கும் கண்சிவக்கும்
அங்கைத் தளிர்நடுங்கும் சொல்அசையும் - கொங்கை
பொருகாலும் ஊடிப் புடைபெயரும் காலும்
இருகாலும் ஒக்கும் இவர்க்கு.

இப்பாடலில் கூறப்பட்ட பொருள்கள் கூடல், ஊடல் என்பனவாம். இவை இரண்டும் காமம் பற்றியவை. இவ்இரண்டிலும் காமச்சுவையின் குறிப்புக்கள் ஒரு நிகரனவாய்க் கூறப்பட்டுள்ளன. அவை நுதல் வியர்த்தல் முதலியனவாம். ஆதலால் இது காமச்சுவை ஆயிற்று.

## அவலச்சுவை:-

அவலம் காரணமாகத் தோன்றும் சுவை அவலச்சுவையாகும். இச்சுவையைத் தொல்காப்பியர் அழுகை எனக் குறிப்பிடுகின்றார்.

(எ-டு)

கழல்சேர்ந்த தான்விடலை காதலிமெய் தீண்டும்
அழல்சேர்ந்து தன்நெஞ்(சு) அயர்ந்தான் - குழல்சேர்ந்த
தாமம் தரியா(து) அசையும் தளிர்மேனி
ஈமம் தரிக்குமோ என்று.

தனக்குப் பற்றுள்ள ஒன்றனைப் பிரிவதனால் தோன்றுவது அவலம் என்பர். அதற்கேற்ப மனைவியை இழந்து வருந்தும் தலைவனின் புலம்பலைக் காட்டுவதால் இது அவலச்சுவை ஆயிற்று.

**<u>உருத்திரச் சுவை:-</u>**

சினத்தின் காரணமாகத் தோன்றும் சுவை உருத்திரச் சுவையாகும். தொல்காப்பியர் இதனை வெகுளி எனக் குறிப்பிடுகிறார்.

(எ-டு)

கைபிசையா வாய்மடியாக் கண்சிவவா வெய்துயிரா
மெய்குலையா வேரா வெகுண்(டு) எழுந்தான் - வெய்யபோர்த்
தார் வேய்ந்த தோளான் மகளைத் தருகஎன்(று)
போர்வேந்தன் தூ(து) இசைத்த போது.

பகையரசன் தன் மகளைத் தருக என கேட்டலாகிய செயலால் உருத்திரச்சுவை தோன்றிற்று. உள்ளே நிகழ்ந்த சினமானது கைபிசைதல் முதலாகிய குறிப்புக்களால் காட்டப்பட்டது. இதனால் இப்பாடல் உருத்திரச்சுவை ஆயிற்று.

நகை காரணமாகத் தோன்றும் சுவை நகைச்சுவையாகும். இதனைத் தொல்காப்பியர் நகை என்று காட்டுகின்றார்.

(எ-டு)

நாண்போலும் தன்மனைக்குத் தான்சேறல் இந்நின்ற
பாண்போலும் வெவ்அழலில் பாய்வதூஉம் - காண்தோழி
கைத்தலங் கண்ணாக் களவுகாண் பான்ஒருவன்
பொய்த்தலைமுன் நீட்டியற்றும் போந்து.

இப்பாடலில், தலைமகனையும், அவனால் அனுப்பப்பட்ட பாணனையும் ஒருங்கே எள்ளி நகையாடி தலைவி தோழியிடம் கூறும் கருத்து கூறப்பட்டுள்ளது. எனவே, இது என்னல் பற்றி வந்த நகைச்சுவையாகும்.

## பாடம் - 17

## தன்மேம்பாட்டுரையணி

தன்னுடைய ஆற்றலைத் தானே எடுத்துக் கூறுவது, இதனை ஊக்க அணி என்றும் கூறுவர்.

### தன்மேம்பாட்டுரை அணியின் இலக்கணம்:-

தான்தன் புகழ்வது தன்மேம் பாட்(டு)உரை

(தண்டி-69)

ஒருவன் தன்னைத்தானே புகழ்ந்து சொல்லுவது தன்மேம்பாட்டுரை அணி ஆகும்.

(எ-டு)

எஞ்சினார் இல்லை எனக்(கு) எதிரா இன்னுயிர் கொண்(டு)
அஞ்சினார் அஞ்சாது போய் அகல்க – வெஞ்சமத்துப்
பேரா(து) அவர்ஆகத்(து) அன்றிப் பிறர்முதுகில்
சாரா என் கையில் சரம்.

இப்பாடலில் எனக்கு எதிராக வந்தோர் எவரும் உயிரோடு செல்ல முடியாது என்பதும், என் அம்பு முதுகில் பாயாது என்பதும் ஒருவன் தன்னைத் தானே புகழ்ந்து கொள்வதாய் அமைந்துள்ளன. ஆதலால் இது தன்மேம்பாட்டுரை அணி ஆயிற்று.

## பரியாயவணி

கவிஞன் தான் கூறக் கருதிய ஒன்றனை அவ்விடத்துக் கூறுதல் தகாது எனக் கருதிப் பிறிதொன்றால் அப்பொருளை விளக்குவது பரியாய அணி ஆகும். இதனைப் பிறிதின் நவிற்சி எனவும் கூறுவர்.

### பரியாய அணியின் இலக்கணம்:-

கருதியது கிளவா(து) அப்பொருள் தோன்றப்
பிறி(து) ஒன்(று) உரைப்பது பரியா யம்மே.

(தண்டி-70)

தான் எண்ணியதனைக் கூறாது அப்பொருள் தோன்றப் பிறிதொன்றினைக் கூறுவது பரியாயம் என்னும் அணியாகும்.

(எ-டு)

மின்நிகராம் மாதே விரைசாந் துடன்புணர்ந்(து)
நின் நிகராம் மாதவிக்கண் நின்றருள்நீ – தன்நிகராம்
செந்தீ வரமலரும் செங்காந்தள் போதுடனே
இந்தீ வரம்கொணர்வல் யான்.

தலைவனோடு தலைவியைச் சேர்த்து வைக்கக் கருதிய தோழி அதனை நேராகக் கூறவில்லை. கூடுதற்குத் தான் தடையாய் இருக்கக்கூடாது என்பதற்காகப் பூப்பறித்து உன் கூந்தலில் சூட வருகிறேன் என்று வேறொரு செயலைத் திறம்படக் கூறியதால் இது பரியாய அணி ஆயிற்று.

## சமாயிதவணி

இதனை துணைப்பேறு அணி என்றும் கூறுவர்.

### சமாயித அணியின் இலக்கணம்:-

முந்(து)தான் முயல்உறூஉம் தொழிற்பயன் பிறி(து)ஒன்(று)
தந்ததா முடிப்பது சமாயிதம் ஆகும்.

(தண்டி-71)

முன்பு தன்னால் முயலப்பட்ட தொழிலினது பயன் அத்தொழிலால் அன்றிப் பிறிதொன்றால் நிகழ்ந்ததாகக் கூறி முடிப்பது சமாயிதம் என்னும் அணியாகும்.

(எ-டு)

அருவியம் குன்றம் அரக்கன் பெயர்ப்ப
வெருவிய வெற்(பு) அரையன் பாவை – பெருமான்
அணியாகம் ஆரத் தழுவினாள் தான்முன்
தணியாத ஊடல் தணிந்து.

சிவபெருமான் முயன்ற செயல் உமையம்மையின் ஊடலைத் தணிவித்தலாகும். ஆனால் அப்பயன் அம்முயற்சியால் கிட்டாது. இராவணன் மலையை அசைத்தலால் கிடைத்ததாகக் கூறப்பட்டுள்ளது. எனவே இது சமாயித வணியாயிற்று.

## உதாத்த அணி

செல்வத்தையும், உள்ளத்தையும் உயர்த்திக் கூறுவது. இதனை வீறுகோளணி என்றும் கூறுவர்.

### உதாத்த அணியின் இலக்கணம்:-

வியத்தகு செல்வமும் மேம்படும் உள்ளமும்
உயர்ச்சி புனைந்(து) உரைப்ப(து) உதாத்தம் ஆகும்.

வியக்கத்தக்க செல்வத்தினது உயர்ச்சியையோ மேம்பட்ட உள்ளத்தினது உயர்ச்சியையோ அழகு பொருந்தக் கூறுவது உதாத்தம் என்னும் அணியாகும்.

### செல்வ மிகுதி:-

ஒருவருடைய செல்வத்தின் மிகுதியை உயர்த்திக் கூறுவது செல்வ மிகுதியாகும்.

(எ-டு)

கன்றும் வயவேந்தர் செல்வம் பலகவர்ந்தும்
என்றும் வறிஞர் இனங்கவர்ந்தும் - ஒன்றும்
அறி(வு) அரிதாய் நிற்கும் அளவினதால் அம்ம
செறிகதிர்வேல் சென்னி திரு.

இப்பாடல் சோழனுடைய செல்வத்தின் மிகுதியை உயர்த்திக் கூறுவதால் செல்வமிகுதி ஆயிற்று.

### உள்ள மிகுதி:-

ஒருவருடைய உள்ளத்தின் மிகுதியை உயர்த்திக் கூறுவது உள்ள மிகுதி ஆகும்.

(எ-டு)

மண்அகன்று தன்கிளையின் நீங்கி வனம்புகுந்(து)
பண்ணும் தவத்(து) இசைந்த பார்த்தன்தான் - எண்ணிறந்த
மீதண்டர் கோன்குலையும் வெய்யோர் குலம்தொலைத்தான்
கோதண்ட மேதுணையாக் கொண்டு.

இப்பாடலில் அருச்சுணன் தனது ஒரே வில்லின் துணை கொண்டு அசுரர் குலம் அனைத்தையும் அழித்தான் என்று அவனுடைய உள்ளத்தின் (ஊக்கம்) மிகுதி கூறப்பட்டிருப்பதால் இது உதாத்தமாயிற்று.

## பாடம் - 18

## அவநுதியணி

பொருளின் உண்மைத் தன்மையை மறுத்துப் பிறிதொரு தன்மையை அதன்கண் ஏற்றி உரைப்பது அவநுதி அணியாகும். இதனை ஒழிப்பணி, மறுப்பணி என்றும் கூறுவர்.

### அவநுதி அணியின் இலக்கணம்:-

''சிறப்பினும் பொருளினும் குணத்தினும் உண்மை
மறுத்துப் பிறி(து) உரைப்ப(து) அவநுதி ஆகும்''.
(தண்டி-73)

சிறப்பினாலும் பொருளினாலும் குணத்தினாலும் ஆகிய உண்மையை மறுத்துப் பிறிதொன்றாக உரைப்பது அவநுதி என்னும் அணியாகும்.

### சிறப்பு அவநுதி:-

சிறப்புடைய ஒன்றைச் சிறப்பற்றதன் மேல் ஏற்றி உரைப்பது சிறப்பு அவநுதியாகும்.

(எ-டு)

நறைகமழ்தார் வேட்டார் நலன்அணியும் நாணும்
நிறையும் நிலைதளரா நீர்மை – அறநெறிசூழ்
செங்கோலன் அல்லன் கொடுங்கோலன் தெவ்வடுபோர்
வெங்கோப மால்யானை வேந்து.

அரசனுக்குச் சிறப்பைத் தருவது செங்கோன்மை. அது மறுத்துரைக்கப்பட்டு அவன் மீது கொடுங்கோன்மை ஏற்றிச் சொல்லப்பட்டதால் இப்பாடல் சிறப்பு அவநுதி ஆகும்.

### பொருள் அவநுதி:-

ஒரு பொருளின் உண்மைத் தன்மையை மறுத்து அதன்மீது வேறொன்றை ஏற்றி உரைப்பது பொருள் அவநுதி ஆகும்.

(எ-டு)

நிலனாம் விசும்பாம் நிமிர்கால்நீர் தீயாம்
அலர்கதிராம் வான்மதியாம் அன்றி – மலர்கொன்றை
ஒண்நறுந் தாரான் ஒருவ(ன்)இய மானனுமாய்
எண்ணிறந்த எப்பொருளும் ஆம்.

ஒரு பொருளாக இருப்பவன் சிவபெருமான். அவன் எட்டாகவும் எண்ணிறந்த பல்பொருளாகவும், விளங்குகிறான் எனக் குறிக்கப் பெறுகிறான். ஒருவனாம் தன்மை மறுக்கப்பட்டுப் பலவாம் தன்மை ஏற்றி உரைக்கப்பட்டதால் இது பொருள் அவநுதி ஆயிற்று.

## குண அவநுதி:-

ஒரு பொருளின் உண்மையான பண்பை மறுத்து அதன்மீது வேறொன்றை ஏற்றி உரைப்பது குண அவநுதி ஆகும்.

(எ-டு)

மனுப்புவிமேல் வாழ மறைவளர்க்கும் ஆரப்
பனித்தொடையல் பார்த்திபர்கோன் எங்கோன் - தனிக்கவிகை
தண்மை நிழற்(று)அன்று தன்தொழுத பேதையர்க்கு
வெம்மை நிழற்றாய் மிகும்.

இப்பாடலில் சோழனின் வெண்கொற்றக் கொடையின் குளிர்ந்த தன்மை மறுக்கப்பட்டு வெம்மைத் தன்மை ஏற்றி உரைக்கப்பட்டிருப்பதால் இது அவநுதி ஆயிற்று. தண்மை ஆகிய குணம் வெம்மையாகிய குணமாகக் கூறப்பட்டதால் இது குண அவநுதியாயிற்று.

## அவநுதிஅணி பிற அணிகளோடு கூடி வருதல்:-

## சிலேடை அவநுதி:-

அவநுதி அணியுடன் சிலேடை அணியும் கூடி வருவது சிலேடை அவநுதி ஆகும்.

(எ-டு)

நறவேந்து கோதை நலம்கவர்ந்து நல்கா
மறவேந்தன் வஞ்சியின் அல்லன் - துறையின்
விலங்காமை நின்று வியன்தமிழ்நா(டு) ஐந்தின்
குலம்காவல் கொண்(டு) ஒழுகும் கோ.

இப்பாடலில் அரசன் வஞ்சியாதவன் என்பதை மறுத்து வஞ்சிப்பவன் என்னும் தன்மையை ஏற்றிக் கூறியதால் அவநுதியாயிற்று. வஞ்சியான் என்னும் தொடர் இருபொருள்படுவதால் (வஞ்சனை செய்யாதவன், வஞ்சிநகரை உடையவன்) சிலேடையும் ஆயிற்று. இத்தொடர் வினையாகையால் இது வினை பற்றிய சிலேடை அவநுதியாயிற்று.

## சிலேடையணி

செய்யுளில் இடம்பெறும் ஒரு சொல்லோ தொடரோ தனித்து நின்றோ பிரிந்து நின்றோ பலபொருள் பட அமைவதனைச் சிலேடை அணி என்பர். இதனை இரட்டுறமொழிதல் அணி என்றும் கூறுவர்.

### சிலேடை அணியின் இலக்கணம்:-

ஒருவகைச் சொற்றொடர் பலபொருள் பெற்றி
தெரி(வு)தர வருவது சிலேடை ஆகும்.
(தண்டி-74)

ஒரு வகையாய் நின்ற தொடர்ச்சொல் பல பொருள்களது தன்மை புலப்பட வருவது சிலேடை என்னும் அணியாகும்.

### சிலேடை அணியின் வகைகள்:-

அதுவே
செம்மொழி பிரிமொழி எனஇரு திறப்படும்
(தண்டி-75)

மேற்கூறப்பட்ட சிலேடை, செம்மொழிச் சிலேடை, பிரிமொழிச் சிலேடை என இரண்டு வகைப்படும்.

### செம்மொழிச் சிலேடை:-

பிரிக்கப்படும் தன்மை அற்று நேரே நின்று பலபொருள் தரும் சொற்களால் அமைவது செம்மொழிச் சிலேடை ஆகும்.

(எ-டு)

செங்கரங்க ளான்இரவு நீக்கும் திறம்புரிந்து
பங்கய மாதர் நலம்பயிலப் - பொங்(கு)உதயத்(து)
ஓர்ஆழி வெய்யோன் உயர்ந்த நெறிஒழுகும்
நீராழி நீள்நிலத்து மேல்.

இப்பாடல் கதிரவனுக்கும் சோழனுக்கும் சிலேடையாய் அமைந்துள்ளது. ஒரே நிலையில் நின்ற சொற்கள் அந்நிலையிலேயே சூரியன், சோழன் ஆகிய இரண்டு பொருள்களுக்கும் பிரிந்து பொருள்படுவதால் இது செம்மொழிச் சிலேடை ஆயிற்று.

## பிரிமொழிச் சிலேடை:-

ஒரு வகையாய் நின்ற சொல்லையோ தொடரையோ பிரித்துப் பொருளுக்கேற்பக் கொள்ளப்படுவது பிரிமொழிச் சிலேடையாகும்.

(எ-டு)

தள்ளா விடத்தேர் தடந்தா மரைஅடைய
எள்ளா அரிமான் இடர்மிகுப்ப – உள்வாழ்தேம்
சிந்தும் தகைமைத்தே எங்கோன் திருஉள்ளம்
நந்தும் தொழில்புரிந்தார் நாடு.

இப்பாடல் சோழனின் ஆட்சியை ஏற்றுக் கொண்டோரின் நாட்டின் நிலையையும், ஏற்றுக் கொள்ளாதவரின் நாட்டின் நிலையையும் எடுத்துரைக்கும் சிலேடையாகும். இருநிலைக்கேற்பப் பிரித்துப் பொருள் கொள்ளப்பட்டதால் இது பிரிமொழிச் சிலேடை ஆயிற்று.

## சிலேடையின் விரி:-

ஒருவினை பலவினை முரண்வினை நியமம்
நியம விலக்கு விரோதம் அவிரோதம்
எனஎழு வகையினும் இயலும் என்ப.

அச்சிலேடை, ஒரு வினைச் சிலேடை, பலவினைச் சிலேடை, முரண்வினைச் சிலேடை, நியமச் சிலேடை, நியம விலக்குச் சிலேடை, விரோதச் சிலேடை, அவிரோதச் சிலேடை என ஏழு வகைப்படும்.

## ஒருவினைச் சிலேடை:-

ஒரு வினையால் வருவது ஒரு வினைச் சிலேடையாகும்.

(எ-டு)

அம்பொன் பணைமுகத்துத் திண்கோட்(டு) அணிநாகம்
வம்புற்ற ஓடை மலர்ந்(து) இலங்க – உம்பர்
நவம்புரியும் வானதியும் நாண்மதியும் நண்ணத்
தவம்புரிவார்க்(கு) இன்பம் தரும்.

இப்பாடலில் உள்ள தொடர்கள் விநாயகருக்கும் மலைக்கும் பொருந்தி, இறுதியில் இன்பம் தரும் என்னும் ஒரு வினையால் முடிந்துள்ளது. எனவே இது ஒரு வினைச் சிலேடை ஆயிற்று.

## பலவினைச் சிலேடை:-

பல வினையாய் வருவது பலவினைச் சிலேடை ஆகும்.

(எ-டு)

தவிரா மது உண்(டு) களிதளிர்ப்ப நீண்டு
செவிமருவிச் செந்நீர்மை தாங்கிக் - குயில்இசையும்
மின்உயிரா நுண்ணிடையார் மென்நோக்கு மேவலார்
இன்னுயிரை ஈர்க்கின் றன.

இப்பாடல் குயிலின் குரலுக்கும், பெண்ணின் கண்ணுக்கும் பொருந்தும் தன்மையில் அமைந்துள்ளன. இடையில் நீண்டு, மருவி, தாங்கி ஈர்க்கின்றன என்னும் பலவினைகளோடும் இயைந்து பொருள்படுவதால் இது பலவினைச் சிலேடை ஆயிற்று.

## முரண்வினைச் சிலேடை:-

மாறுபட்ட வினையால் வருவது முரண்வினைச் சிலேடையாகும்.

(எ-டு)

மாலை மருவி மதிதிரிய மாமணம்செய்
காலைத் துணைமேவ லார்கடிய – வேலைமிசை
மிக்கார் கலிஅடங்கா தார்க்கும் வியன்பொழில்கள்
புக்கார் கலிஅடங்கும் புள்.

இப்பாடல் துணைவரைப் பிரிந்தார்க்கும் சேர்ந்தார்க்கும் பொருந்தும் வகையில் அமைந்துள்ளன. ஆர்க்கும், அடங்கும் என்ற முரண்பட்ட வினைகளுடன் இயைந்து பொருள் தருவதால், இது முரண்வினைச் சிலேடை ஆயிற்று.

## நியமச் சிலேடை:-

சிலேடைப் படுத்தப்பட்ட இரு பொருள்களுள் ஒன்றினை வரையறுத்துக் கூறுவது நியமச் சிலேடையாகும்.

(எ-டு)

வெண்நீர்மை தாங்குவனே முத்தே வெறியவாய்க்
கண்நீர்மை சோர்வ கடிபொழிலே – பண்நீர்மை
மென்கோல யாழே இரங்குவன வேல்வேந்தே
நின்கோல் உலாவும் நிலத்து.

பொருள்களுக்குப் பொதுவாகிய தன்மைகளை ஒரு பொருளிடத்திலேயே இருப்பனவாக உறுதியாகக் கூறினமையால் இப்பாடல் நியமச் சிலேடை அணிக்குச் சான்றாகும்.

வெண்ணீர்மை – வெண்மை நிறம், அறியாமை
கண்ணீர்மை – கள்ளாகிய நீர், கண்ணீர்

## நியம விலக்குச் சிலேடை:-

இருபொருள்பட எடுத்துக் கொண்ட பொருளை உறுதிப்படக் கூறி அதனை விலக்குவது நியம விலக்குச் சிலேடை ஆகும்.

(எ-டு)

சிறைபடுவ புட்குலமே தீம்புனலும் அன்ன
இறைவநீ காத்(து) அளிக்கும் எல்லை – முறையில்
கொடியன குன்றத்தின் மாளிகையே அன்றிக்
கடிஅவிழ்பூங் காவும் உள.

ஓர் அரசனின் நாட்டில் சிறைச்சாலையும் கொடுமையும் இல்லை என்று கூறிச் சிறப்பிப்பதாக அமைந்தது இப்பாடல். இதில் சிறை, கொடி என்பவை சிலேடைப் பொருள்பட அமைந்துள்ளன.

சிறை – சிறகு, அணை, கொடி – துணிக்கொடி, பூங்கொடி

## விரோதச் சிலேடை:-

முன்னர்ச் சிலேடையாக்கப்பட்ட பொருள்களைப் பின்னர் விரோதமுறத் தொடுப்பது விரோதச் சிலேடையாகும்.

(எ-டு)

விச்சா தரனேனும் அந்தரத்து மேவானால்
அச்சுத னேனும்அம் மாயன்அலன் - நிச்ச

நிறைவான் கலையையான் அகளங்கன் நீதி
இறையான் அநகன்எம் கோ.

இப்பாடல் சோழனுக்கும் பல பொருள்களுக்கும் சிலேடைப் பொருள் பட அமைக்கப்பட்டுள்ளது. விச்சாதரன், திருமால், திங்களஞ்செல்வன், சிவன் ஆகிய நால்வரோடும் செய்யப்பட்ட சிலேடை, பின்னர் மாறுபடக் கூறப்பட்டதால் இது விரோதச் சிலேடை ஆயிற்று.

**அவிரோதச் சிலேடை:-**

முன்னர்ச் சிலேடையாக்கப்பட்ட பொருள்களோடு பின்வரும் சிலேடைச் சொற்பொருள்கள் மாறுபடாமல் பொருந்தத் தொடுப்பது அவிரோதச் சிலேடையாகும்.

(எ-டு)

சோதி இரவி கரத்தான் இர(வு) ஒழிக்கும்
மாதிடத்தான் மன்மதனை மா(று) அழிக்கும் மீதாம்
அகைமதி தோற்றிக் குமுதம் அளிக்கும்
தனதன் இருநிதிக்கோன் தான்.

இப்பாடலில் சோதி இரவி, மாதிடத்தான், மதி, தனதன் என்னும் சொற்கள் ஞாயிறு, சிவன், திங்கள், குபேரன் என்னும் பொருள்களுக்கும் சோழனுக்கும் சிலேடைச் சொற்பொருள்கள் புலப்பட அமைந்தன. இவை இரவொழித்தல் முதலான சொற்களோடு இன்றி இயைபுப்படுத்தப்பட்டன. ஆகையால் இது அவிரோதச் சிலேடை ஆயிற்று.

## விசேடவணி

ஒரு பொருளுக்குக் குணம், தொழில், சாதி, உறுப்புப் போன்றவற்றால் ஏதேனும் ஒரு குறைபாடு தோன்றும். அக்குறைபாடு காரணமாக அப்பொருளுக்கு மேம்பாடு தோன்ற உரைப்பது விசேட அணியாகும். இதற்கு தோன்ற உரைப்பது விசேட அணியாகும். இதற்கு வேண்டலணி, சிறப்பணி என்னும் வேறு பெயர்களும் உண்டு.

**விசேட அணியின் இலக்கணம்:-**

குணம்தொழில் முதலிய குறைபடு தன்மையின்
மேம்பட ஒருபொருள் விளம்புதல் விசேடம்.
(தண்டி-77)

## குணக்குறை விசேடம்:-

குணத்தால் குறைவுபடுவதனை மேம்பாடு தோன்ற உரைப்பது குணக்குறை விசேடமாகும்.

(எ-டு)

கோட்டம் திருப்புருவம் கொள்ளா அவர்செங்கோல்
கோட்டம் புரிந்த கொடைச்சென்னி – நாட்டம்
சிவந்தன இல்லை திருந்தார் கலிங்கம்
சிவந்தன செந்தீத் தெற.

சோழன் சினங்கொண்டு போர் தொடுப்பதற்கு முன்னரே பகைவர் நாடு அழிந்தலைக் காட்டுவது இப்பாடலாகும். புருவங்கள் வளைதலும், கண் சிவத்தலும் சினத்தின் அறிகுறிகளாகும். அக்குணங்களால் குறைவுபட்டாலும் பகைவர் நாடு அழிந்தன என்னும் வெற்றி மேம்பாடு தோன்றக் கூறியதால் இது குணக்குறை விசேடமாயிற்று.

## தொழிற்குறை விசேடம்:-

தொழிலால் குறைவுபடுவதனை மேம்பாடு தோன்ற உரைப்பது தொழில்குறை விசேடமாகும்.

(எ-டு)

ஏங்கா முகில்பொழியா நாளும் புனல்தேங்கும்
பூங்கா விரிநாடன் போர்மதமா – நீங்கா
வளைபட்ட தாளணிகள் மா(று) எதிர்ந்த தெவ்வர்
தளைபட்ட தாள்தா மரை.

யானைகள் பேரணி பூண்ட அன்றே தோல்வியுற்ற பகைவர்களின் கால்கள் விலங்கிடப்பட்டன எனச் சோழ மன்னர்களின் யானைப்படை ஆற்றலை இப்பாடல் எடுத்துரைக்கிறது. அத்தொழில் நடைபெறும் முன்னரே செயலால் மேம்பாடு தோன்ற எடுத்துரைக்கப்பட்டுள்ளது. எனவே இது தொழிற்குறை விசேடமாயிற்று.

## சாதிக்குறை விசேடம்:-

சாதியால் குறைவுபடுவதனை மேம்பாடு தோன்ற உரைப்பது சாதிக்குறை விசேடமாகும்.

(எ-டு)

மேய நிரைபுரந்து வெண்ணெய் தொடுஉண்ட
ஆயனார் மா(று) ஏற்(று) அமர்புரிந்தார் - தூய
பெருந்தருவும் பின்னும் கொடுத்(து) உடைந்தார் விண்மேல்
புரந்தரனும் வானோரும் போல்.

ஆயனார் எனச் சாதியால் குறைவுபடக் காட்டப்பட்டவன் கண்ணபிரான். ஆயினும் தேவர்களைப் புறமுதுகிட்டு ஓடும்படி வெல்லுதலாகிய செயலால் மேம்பட்டவனாகக் கூறியதால் இது சாதிக்குறை விசேடமாயிற்று.

## பொருட்குறை விசேடம்:-

பொருளால் குறைவுபடுவதனை மேம்பாடு தோன்றக் கூறுவது பொருட்குறை விசேடமாகும்.

(எ-டு)

தொல்லை மறைதேர் துணைவன்பால் ஆண்(டு) வரை
எல்லை இருநாழி நெல்கொண்(டு)ஓர்-மெல்லியலாள்
ஓங்(கு) உலகில் வாழும் உயிர்அனைத்தும் ஊட்டுமால்
ஏங்(கு) ஒலிநீர்க் காஞ்சி இடை.

இப்பாடலில் உலக உயிர்களைப் பாதுகாக்கும் உமையம்மையாகிய அம்பிகையின் கருணைத்திறம் வெளிப்படுத்தப் படுகிறது.

இருநாழி நெல் மட்டுமே என்பது பொருட்குறை. அந்நெல்லைக் கொண்டு உலகம் முழுவதும் காப்பாற்றினாள் என்பது மேம்பாடு.

## உறுப்புக்குறை விசேடம்:-

உறுப்பால் குறைவுபடுவதனை மேம்பாடு தோன்றக் கூறுவது உறுப்புக்குறை விசேடமாகும்.

(எ-டு)

யானை இரதம் பரிஆள் இவைஇல்லை
தானும் அனங்கன் தனுக்கரும்பு – தேனார்
மலர் ஐந்தினால் வென்று அடிப்படுத்தான் மாரன்
உலகங்கள் மூன்றும் ஒருங்கு.

உடம்பு இல்லாதவன் மன்மதன். எனவே அவனுக்கு உறுப்புக்கள் இல்லை என்பது தெளிவு. அவ்வாறு உறுப்பற்று இருந்தும் உலகத்தையே ஒருசேர வென்று அடிமைப்படுத்தினான் என மேம்பாடு தோன்றக் கூறியதால் இது உறுப்புக்குறை விசேடமாயிற்று.

## ஒப்புமைக் கூட்டவணி

இதனை உடனிலைச்சொல்லணி என்றும் கூறுவர்.

## இலக்கணம்:-

கருதிய குணத்தின் மிகுபொருள் உடன்வைத்(து)
ஒரு பொருள் உரைப்ப(து) ஒப்புமைக் கூட்டம்.
(தண்டி-78)

ஒரு பொருளைச் சொல்லுமிடத்துத் தான் கருதிய குணம் முதலியவற்றின் மிகுதியான பொருளைக் கூட வைத்துச் சொல்லுவது ஒப்புமைக் கூட்டம் என்னும் அணியாகும்.

## ஒப்புமைக்கூட்ட அணியின் வகைகள்:-

புகழினும் பழிப்பினும் புலப்படும் அதுவே
(தண்டி-79)

புகழ் ஒப்புமைக் கூட்டம், பழிப்பு ஒப்புமைக் கூட்டம் என இருவகைப்படும்.

## புகழ் ஒப்புமைக் கூட்டம்:-

புகழத்தக்க பொருள்களை ஒருங்கு கூறுவது புகழ் ஒப்புமைக் கூட்டமாகும்.

(எ-டு)

பூண்தாங்கு கொங்கை பொரவே குழைபொருப்பும்
தூண்டாத தெய்வச் சுடர்விளக்கும் - நாண்தாங்கு
வண்மைசால் சான்றவரும் காஞ்சி வளம்பதியின்
உண்மையால் உண்டுஇவ் உலகு.

சிவபெருமானாகிய ஏகாம்பர நாதர், தூண்டாத விளக்கு, சான்றோர் ஆகிய பொருள்கள் மூன்றும் புகழத்தக்க உயர்ந்த பொருள்கள். இம்மூன்றும் ஒரு நிகரனவாய்த் தொகுத்துக் கூறப்பட்டிருப்பதால் இது புகழ் ஒப்புமைக் கூட்டமாயிற்று.

## பழிப்பு ஒப்புமைக்கூட்டம்:-

பழிக்கத்தக்க பொருள்களை ஒருங்கு கூறுவது பழிப்பு ஒப்புமைக் கூட்டமாகும்.

(எ-டு)

கொள்பொருள் வெ∴கிக் குடிஅலைக்கும் வேந்தனும்
உள்பொருள் சொல்லாச் சலமொழி மாந்தரும்
இல் இருந்(து) எல்லை கடப்பாளும் இம்மூவர்
வல்லே மழைஅருக்கும் கோள்.

கொடுங்கோலன், பொய்க்கரியாளர், கற்பில்லா மனைவி ஆகியோர் இகழத்தக்கவர். பழிப்பிற்குரிய இம்மூவரும் ஒரு நிகரனவாய் தொகுத்துக் கூறப்பட்டிருப்பதால் இது பழிப்பு ஒப்புமைக் கூட்டமாயிற்று.

## பயிற்சி வினாக்கள்

## பாடம் (14 – 15)

### குறு வினாக்கள்:

1. விபாவனை அணி என்றால் என்ன?
2. வேற்றுமையணியை விளக்குக.
3. இயல்பு விபாவனை என்றால் என்ன?
4. ஒட்டணி – விளக்கம் தருக.
5. அதிசய அணி விளக்குக.
6. ஏது அணி – விளக்குக.
7. நுட்ப அணி – விளக்குக.

### கட்டுரை வினாக்கள்:

1. விவாவனை அணியின் வகைகளை விளக்கி வரைக.
2. அதிசயவணியின் வகைகளை விளக்கி வரைக.
3. தற்குறிப்பேற்ற அணியின் வகைகளை விளக்கி வரைக?

## பயிற்சி வினாக்கள்

## பாடம் (16 – 18)

### குறு வினாக்கள்:

1. நிரல்நிறை அணி – விளக்குக.
2. சுவையணி – விளக்குக.
3. ஆர்வமொழி அணி – விளக்கம் தருக.
4. பரியாய அணி – விளக்குக.
5. சமாயித அணியை விளக்குக.
6. உதாத்த அணி – விளக்குக.
7. ஒப்புமைக் கூட்ட அணி – விளக்குக.

8. விசேட அணி – விளக்குக.
9. சிலேடை அணியின் வகைகளை எழுதுக.

## கட்டுரை வினாக்கள்:

1. இலேச அணியை விளக்கிக் கட்டுரை வரைக.
2. அவநுதி அணி என்றால் என்ன? விளக்குக.
3. சிலேடை அணியை விளக்கிக் கட்டுரை வரைக.

## பாடம் - 19

## விரோதவணி

இதற்கு முரணணி என்றும் வேறுபெயரும் உண்டு.

விரோத அணியின் இலக்கணம்:-

மாறுபடு சொல் பொருள் மாறுபாட்(டு) இயற்கை
விளை(வு)தர உரைப்பது விரோதம் ஆகும்
(தண்டி-80)

மாறுபட்ட சொல்லாலும் பொருளாலும் மாறுபாட்டுத் தன்மை விளைவு தோன்ற உரைப்பது விரோதம் என்னும் அணியாகும்.

### சொல் விரோதம்:-

சொற்கள் மாறுபடத்தொடுப்பது சொல் விரோதம் ஆகும்.

(எ-டு)

காலையும் மாலையும் கைகூப்பிக் கால்தொழுதல்
மேலை வினைஎல்லாம் கீழவாம் - கோலக்
கருமான்தோல் வெண்நீற்றுச் செம்மேனிப் பைந்தார்ப்
பெருமானைச் சிற்றம் பலத்து.

இப்பாடலில் காலை-மாலை, கைகூப்புதல்-கால் தொழுதல், மேல்-கீழ், கருமை-வெண்மை, செம்மை-பசுமை என்பன ஒன்றோடு ஒன்று மாறுபட்டு நிற்பதால் இது சொல் விரோதமாயிற்று.

### பொருள் விரோதம்:-

மாறுபட்ட பொருள்களைக் கொண்டு தொடுப்பது பொருள் விரோதம் ஆகும்.

(எ-டு)

சோலை பயிலும் குயில்மழலை சோர்ந்(து)அடங்க
ஆலும் மயில் இனங்கள் ஆர்த்(து) எழுந்த ஞாலம்
குளிர்ந்த முகில் கறுத்த கோபம் சிவந்த
விளர்ந்த துணைபிரிந்தார் மெய்.

இப்பாடலில் குயில்களின் குரல்கள் அடங்கின, மயிலினங்கள் ஆர்த்து எழுந்தன என்பவை ஒன்றற்கு ஒன்று மாறுபட்ட பொருள்கள் ஆதலின் பொருள் விரோதமாயிற்று.

## சிலேடை விரோதம்:-

சிலேடை அணியுடன் விரோத அணி கூடி வருவது சிலேடை விரோதமாகும்.

(எ-டு)

இனமான் இகல எளிய எனினும்
வனமேவு புண்டரிகம் வாட்டும் - வனமார்
கரிஉருவம் கொண்டும் அரிசிதறக் காயும்
வரிமலர்மென் கூந்தல் விழி.

மான் எளிய எனினும் புலியை வாட்டும். யானைத் தன் வடிவைக் கொண்டு சிங்கம் பயந்தோடக் காயும் என்பன விரோதமாகும். எனவே இப்பாடல் சிலேடை விரோதமாயிற்று.

## மாறுபடு புகழ்நிலையணி

இதற்கு வஞ்சப்புகழ்ச்சிஅணி, தெளிவில் புகழ்ச்சி அணி என்னும் வேறு பெயர்களும் உண்டு.

## இலக்கணம்:-

கருதிய பொருள் தொகுத்(து) ஆங்(கு) அது பழித்தற்(கு)
வேறு ஒன்(று) புகழ்வது மாறுபடு புகழ்நிலை.
(தண்டி-81)

ஒருவன் சொல்லக் கருதிய பொருளின் இகழ்ச்சித் தன்மை வெளிப்படுமாறு மற்றொரு பொருளைப் புகழ்ந்துரைப்பது மாறுபடு புகழ்நிலை என்னும் அணியாகும்.

(எ-டு)

இர(வு) அறியா யாவரையும் பின்செல்லா நல்ல
தருநிழலும் தண்ணீரும் புல்லும் - ஒருவர்
படைத்தனவும் கொள்ளா இப்புள்ளிமான் பார்மேல்
துடைத்தனவே அன்றோ துயர்.

முயற்சியால் வாழ வழி இருந்தும் அதனைச் செய்யாது பிறரைச் சார்ந்து வாழ்வோரைப் பழிக்க எண்ணுகிறான் கவிஞன். அதனை மறைத்து அச்செயல்கள் அற்றமானைப் புகழ்கிறான். இரவலனை இழித்துக் கூற மானைப் புகழ்வதால் இது மாறுபடு புகழ்நிலை ஆயிற்று.

(எ-டு)

போதும் தளிரும் புனைந்து மணம்புணர்ந்து
சூதப் பணைதழுவித் தோன்றுமால் - மாதே
பலமா தவங்கள் பயின்றதோ? பண்(டு)இக்
குலமா தவியின் கொடி.

களவில் கூடி வந்த தலைவியைப் பழிக்கக் கருதுகிறான் கவிஞன். அதனை மறைத்து உலகத்தார் அறிய மாமரத்தின் கிளைகளைத் தழுவிப் படர்கின்ற மாதவிக்கொடியைப் புகழ்கின்றான். ஆதலால் இது மாறுபடு புகழ்நிலை ஆயிற்று.

## புகழாப் புகழ்ச்சியணி

**இலக்கணம்:-**

பழிப்பது போலும் பான்மையின் மேன்மை
புலப்பட மொழிவது புகழாப் புகழ்ச்சி.
(தண்டி-82)

ஒன்றனைப் பழித்துக் கூறுவது போன்ற தன்மையால் அதற்கு மேம்பாடு தோன்ற உரைப்பது புகழாப் புகழ்ச்சி என்னும் அணியாகும்.

(எ-டு)

போர்வேலின் வென்றதூஉம் பல்புகழால் போர்த்ததூஉம்
தார்மேவு திண்புயத்தால் தாங்குவதூஉம் - நீர்நாடன்
தேரடிக்கூர் வெம்படையால் காப்பதூஉம் செங்கண்மால்
ஓர்அடிக்கீழ் வைத்த உலகு.

எளிமையாகத் திருமால் ஓரடியைக் கொண்டு இவ்வுலகத்தை அளந்தான். அந்த ஓரடி நிலத்தையே சோழனை வென்றும் முடியும் தாங்கியும் காத்தும் துன்பப்படுகிறான் எனப் பழித்துக் கூறப்பட்டது. இவ்வாறு கூறினும் சோழன் இவ்வுலகத்தை ஒருங்கே ஆட்சி புரிகின்றான் என மேம்பாடு தோன்றக் கூறியதால் பழிப்பது போலப் புகழப்பெற்றுப் புகழாப்புகழ்ச்சி ஆயிற்று.

(எ-டு)

நினைவரிய பல்புகழார் நின்குலத்துத் தொல்லோர்
அனைவரையும் புல்லினாள் அன்றே – மனுநூல்
புணர்ந்த நெறிஒழுகும் பூழியநீ இந்நாள்
மணந்த தடமலர்மேல் மாது.

உன் குலத்து முன்னோர்களுக்கு உரிமையானவன் திருமகள். அவளையே நீயும் உரிமையாக்கிக் கொண்டிருக்கிறாய் எனப் பழித்தாற் போலக் கூறப்பட்டது. ஆயினும் வழிவழியாக மாறாமல் உலகத்தை ஆளுதலாகிய பேரைப் பெற்றுப் பெருஞ்செல்வம் உடையனாய்த் திகழ்பவன் என மேன்மைபடுத்திக் கூறியதால் பழிப்பது போலப் புகழப்பெற்றுப் புகழாப் புகழ்ச்சி ஆயிற்று.

## நிதரிசனவணி

இதற்கு காட்சியணி, சுட்டணி என்னும் வேறு பெயர்களும் உண்டு.

நிதரிசன அணியின் இலக்கணம்:-

ஒருவகை நிகழ்வதற்(கு) ஒத்தபயன் பிறிதிற்குப்
புகழ்மை தீமை என்(று) இவைபுலப்பட
நிகழ்வது ஆயின் நிதரிசனம் அதுவே.

ஒரு வகையால் நிகழ்வது ஒன்றற்குப் பொருந்தியதொரு பயனைப் பிறிதொன்றற்கு நன்மை பயப்பதாகவோ தீமை பயப்பதாகவோ புலப்படுத்திக் காட்டுவது நதரிசனம் என்னும் அணியாகும்.

### புகழ்மை நிதரிசனம்:-

நற்பொருளை அறிவுறுத்துவதாகக் கூறுவது.

(எ-டு)

பிறர்செல்வம் கண்டால் பெரியோர் மகிழ்வும்
சிறியோர் பொறாத திறமும் - அறிவுறீஇச்
செங்கமல மெய்ம் மலர்ந்த தேன்குமுதம் மெய்அயர்ந்த
பொங்கு ஒளியோன் வீறு எய்தும் போது.

இப்பாடல் கதிரவன் ஒளியைக் கண்டு தாமரை மலர்வதும் ஆம்பல் குவிவதும் ஆகிய நிகழ்ச்சிகளைக் குறிப்பிட்டு, இவற்றின் மூலம் முறையே பிறர் செல்வத்தைக் கண்டால் பெரியோர் மகிழ்வர். சிறியோர் பொறாமை கொள்வர் என்னும் கருத்துகள் பெறப்பட்டதாகக் கூறுகின்றது. இது புகழ்மை நிதரிசனம் ஆகும்.

### தீமை நிதரிசனம்:-

தீய பொருளை அறிவுறுத்துவதாகக் கூறுவது.

(எ-டு)

பொரியோர் உழையும் பிழைசிறி(து) உண்டாயின்
இருநிலத்துள் யாரும் அறிதல் - தெரிவிக்கும்

தேக்கும் கடல்உலகில் யாவர்க்கும் தெள்அமுதம்
வாக்கு மதிமேல் மறு.

மதியில் உள்ள மறு யாவர்க்கும் எளிதில் புலப்படுதல் ஒரு நிகழ்வாகும். அது பொரியோரிடத்துப் பிழை சிறிது உண்டாயின் அதனை எல்லோரும் அறிவர் என்னும் தீய பயனைக் காட்டியது, ஆதலின் இது தீமை நிதரிசனமாயிற்று.

## பாடம் - 20

## புணர்நிலையணி

இதற்கு உடன் நிகழ்ச்சி அணி, ஒருங்கு இயலணி என்னும் வேறுபெயர்களும் உண்டு.

### இலக்கணம்:-

வினை பண்பு எனஇவை இருபொருட்(கு) ஒன்றே
புணர மொழிவது புணர்நிலை ஆகும்
(தண்டி-84)

வினையாலும், பண்பாலும் இரண்டு பொருள்களுக்கு ஒன்றே பொருந்தச் சொல்லுவது புணர்நிலை என்னும் அணியாகும்.

### வினைப் புணர்நிலை:-

இரு பொருள்களுக்கு ஒரு வினைச்சொல்லைப் பொருந்துவதாகக் கூட்டி உரைப்பது வினை புணர்நிலை ஆகும்.

(எ-டு)

வேண்(டு) உருவம் கொண்டு கருகி வெளிபரந்து
நீண்ட முகில் உடனே நீர்பொழிந்த – ஆண்டகையோர்
மேவல் விரும்பும் பெருநசையால் மெல்ஆவி
காவல் புரிந்(து) இருந்தோர் கண்.

இப்பாடலில் கூறப்படும் பொருள்கள் மேகம், கண் ஆகியவை, இவ்விரண்டிற்கும் உடனிகழ்ச்சி பற்றி 'நீர் பொழிந்த' என்னும் தொழில் பற்றிய ஒரு சொல் அமைந்திருத்தலால் இது வினைப்புணர்நிலை ஆயிற்று.

### பண்புப் புணர்நிலை:-

இருபொருள்களுக்கு ஒரு பண்பினைப் புணர்த்துச் சொல்லுவது பண்புப் புணர்நிலை ஆகும்.

(எ-டு)

பூங்காவில் புள்ஒடுங்கும் புன்மாலைப் போழ்(து) உடனே
நீங்காத வெம்மையவாய் நீண்டனவால் - தாம்காதல்

வைக்கும் துணைவர் வரும்அவதி பார்த்(து)ஆவி
உய்க்கும் தமியார் உயிர்.

இப்பாடலில் கூறப்பெற்ற மாலைப்பொழுது, தமியார் உயிர் என்னும் இருபொருளுக்கும் 'வெம்மையவாய் நீண்டன' எனும் பண்பு பற்றிய ஒரு சொல்லே முடிவாக அமைந்திருத்தலின், இது பண்புப் புணர்நிலையாயிற்று.

## பரிவருத்தனை அணி

ஒரு பொருளைக் கொடுத்து வேறோரு பொருளைப் பெற்றுக் கொள்வதாகச் சொல்லுவது பரிவருத்தனை அணியாகும். இதனைப் பரிமாற்ற அணி, பண்டமாற்று அணி என்றும் கூறுவர்.

### பரிவருத்தனை அணியின் இலக்கணம்:-

பொருள்பரி மாறுதல் பரிவருத் தனையே
(தண்டி-85)

பொருள்கள் ஒன்றற்கு ஒன்று கொடுத்து ஒன்று கொண்டனவாகச் சொல்லுவது பரிவருத்தனை என்னும் அணியாகும்.

(எ-டு)

காமனை வென்றோன் சடைமதியும் கங்கையும்
தாம நிழல் ஒன்(று) தாம்கொடுத்து – நாமப்
பருவாள் அரவின் பணமணிகள் தோறும்
உருஆ யிரம்பெற்(று) உள.

இப்பாடலில் திங்களும் கங்கையும் பாம்பு மணிகளுக்கு ஓர் நிழலைக் கொடுத்தன. அப்பாம்புகளிடம் இருந்து ஆயிரம் ஆயிரம் உருவத்தைப் பெற்றன எனக் கூறியதால் இது பரிவருத்தனை ஆயிற்று.

## வாழ்த்தணி

### இலக்கணம்:-

இன்னார்க்(கு) இன்ன(து) இயைக என்(று)தாம்
முன்னியது கிளத்தல் வாழ்த்(து) என மொழிய.
(தண்டி-86)

இன்ன தன்மை உடையார்க்கு இன்னது நிகழ்க என்று கவிஞன் தான் கருதியதனை விதிப்பது வாழ்த்து என்னும் அணி என்று சொல்லுவர் புலவர்.

(எ-டு)

மூவாத் தமிழ்பயந்த முன்னூல் முனிவாழி
ஆவாழி வாழி அருமறையோர் - காவிரிநாட்(டு)
அண்ணல் அனபாயன் வாழி அவன்குடைக்கீழ்
மண்ணுலகில் வாழி மழை.

இப்பாடலில் அனபாயனுக்கும் அவனுடைய நாட்டிற்கும் இன்றியமையாதனவாகவுள்ள அகத்திய முனிவர், ஆ, அருமறையோர், அனபாயன், மழை ஆகிய அனைத்தும் வாழ்க என வாழ்த்தியுள்ளமையால், இது வாழ்த்தணி ஆயிற்று.

## சங்கீரண அணி

தன்மை முதலாக வாழ்த்து ஈறாகக் கூறப்பட்ட பொருளணிகள் முப்பத்து மூன்று. அவற்றுள் இரண்டுக்கு மேற்பட்ட பல அணிகள் தம்முள் கலந்துவர உரைப்பது சங்கீரண அணியாகும். இதற்குக் கலவை அணி, விரவணி என்னும் வேறு பெயர்களும் உண்டு.

### சங்கீரண அணியின் இலக்கணம்:-

மொழியப் பட்ட அணிபல தம்முள்
தழுவ உரைப்பது சங்கீ ரணமே.
(தண்டி-87)

மேற்சொல்லப்பட்ட அணிகள் பலவும் தம்முள் பொருந்த உரைப்பது சங்கீரணம் என்னும் அணியாகும்.

(எ-டு)

தண்துறைநீர் நின்ற தவத்தால் அளிமருவு
புண்டரிகம் நின்வதனம் போன்றதால் - உண்டோ
பயின்றார் உளம்பருவம் பால்மொழியாய் பார்மேல்
முயன்றால் முடியாப் பொருள்.

தண்துறை நீர் நின்ற தவம் - தற்குறிப்பேற்ற அணி
தவத்தால் - காரக ஏதுவணி
அளி மருவு – சிலேடை யணி
புண்டரிகம் நின்வதனம் போலும் - உவமையணி
உண்டோ முயன்றால் முடியாப் பொருள் - வேற்றுப்பொருள் வைப்பணி
உளம் பருகும் பால் மொழியாய் - சுவையணி.
எனப் பல அணிகளும் விரவி வந்துள்ளன. ஆதலின் இது சங்கீரண அணி ஆயிற்று.

# பாவிக அணி

ஒரு பாடலாலோ (குளகம்) பல பாடல்களாலோ (முத்தகம்) ஆகிய செய்யுள் வகைகளுள் அடங்காமல் தொடர்நிலையாகப் பாடப் பெறுவது காப்பிய வகையாகும். அவ்வகையுள் ஒன்றை முழுவதுமாக நோக்கிக் கொள்ளப்படுவதாய்க் கவிஞனால் கருதிச் செய்யப்படுவதே பாவிகம் என்னும் அணியாகும்.

## பாவிக அணியின் இலக்கணம்:-

பாவிகம் என்பது காப்பியப் பண்பே

(தண்டி-89)

பாவிகம் என்று சொல்லப்படுவது பொருள் தொடாநிலைச் செய்யுள் திறத்தின் கவியால் கூறிச் செய்யப்படுவதொரு குணமாகும்.

(எ-டு)

1.பிறனில் விழைவோர் கிளையொடும் கெடுப - இராமாயணம்

2.பொறையில் சிறந்த கவசம் இல்லை. – மகாபாரதம்

3.வாய்மையில் கடியதோர் வாளி இல்லை – அரிச்சந்திர புராணம்.

# பயிற்சி வினாக்கள்

## பாடம் (19 – 20)

### குறு வினாக்கள்:

1. விரோதவணியை விளக்கி வரைக.
2. சிலேடை விரோதம் - விளக்குக.
3. மாறுபடு புகழ்நிலையணி – விளக்குக.
4. புகழாப் புகழ்ச்சி விளக்கம் தருக.
5. நிதரிசனவணியை விளக்கி வரைக.
6. புணர்நிலை அணியை விளக்கி வரைக.
7. பரிவருத்தனையணி – விளக்கம் தருக.
8. வாழ்த்தணி – விளக்குக.
9. சங்கீரணவணி – விளக்குக.
10. பாவிக அணி – விளக்குக.

<u>மாதிரி வினாத்தாள்</u>

**B.Litt., DEGREE EXAMINATION**

**First Year**

**இலக்கணம் - யாப்புநூல், அணி நூல்**

**Time : 3 hours** **100 Marks.**

**பகுதி – அ** (5X5=25)

**எவையேனும் ஐந்தனுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.**

1. அசை பற்றி விளக்குக.
2. வெண்பாவின் இனங்களை விளக்குக.
3. பொதுச்சீர் பற்றி விளக்கி வரைக
4. கலிப்பாவிற்குரிய ஓசையை விளக்கி வரைக.
5. தற்குறிப்பேற்ற அணி பற்றி விளக்குக.
6. ஒப்புமைக் கூட்டவணியைப் பற்றி விளக்கி வரைக
7. பெருங்காப்பியத்திற்குரிய இலக்கணங்களை எழுதுக.
8. தன்மையணி பற்றி விளக்கி வரைக.

**பகுதி – ஆ** (5X15=75)

**எவையேனும் ஐந்தனுக்கு மூன்று பக்க அளவில் விடை தருக.**

1. தீவக அணி பற்றி விளக்கிக் கட்டுரை வரைக.
2. சீர்கள் குறித்துக் கட்டுரை வரைக.
3. ஆசிரியப்பாவின் வகைகளை விளக்கி வரைக.
4. கலிப்பாவின் வகைகளை விளக்கி வரைக.
5. செய்யுள் வகைகளை விளக்கி வரைக.
6. தொடை பற்றி விளக்கிக் கட்டுரை வரைக.
7. உவமையணி பற்றி விளக்கிக் கட்டுரை வரைக.
8. வைதருப்ப நெறியை விளக்கி வரைக.

**முனைவர். சு.சிவசங்கர்**
தமிழ்த்துறைத் தலைவர்
திருவள்ளுவர் கல்லூரி
பாபநாசம் - 627425
திருநெல்வேலி மாவட்டம்

## பாரதி காட்டும் அஞ்சாமை

ஓரறிவு முதல் ஆறறிவு வரை கொண்ட உயிரினங்கள் இப்பரந்த பூமியில் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து மறைகின்றன. அவற்றுள் ஆறறிவு கொண்டதான மனிதப்பிறவி கிடைத்தற்கரியது என அறிஞர்கள் கூறுவர். எனினும் அதிலிருந்து குறைவுபட்டு ஐயறிவு கொண்ட விலங்குகளாகவும் அதற்கும் கீழான உயிரினங்களாகவும் வாழ்வோர் பலர். தன்னுணர்வு இன்றி, சமுதாய உணர்வின்றி, அச்சம் உந்தித் தள்ள, கொன்றழிக்கும் கவலைக் குழியில் வீழ்ந்துபட்டுக் கிடக்கும் மனிதர்களும் பலராவர். அத்தகையோருக்கு நல்வழி காட்டி, வாழ்வாங்கு வாழச் செய்ய அறிஞர் பலர் முற்பட்டனர். ‘‘மானுட ஜென்மம் பெறுவதற்கரிதெனும் வாய்மையை உணர்ந்த’’ மகாகவி பாரதியாரும் அவருள் ஒருவர். தேசியக் கவியாகவும் தெய்வீகக் கவியாகவும் அறியப்பட்ட அவர் தம் வாழ்க்கையில் கொண்டிருந்த அரிய, பெரிய குணம் அஞ்சாமை என்பதாகும்.

சமுதாயத்தில் உயர் நிலையிலிருந்த குலத்திலும் குடும்பத்திலும் பிறந்த பாரதி, தமது முன்னோர் வழிகளைப் பின்பற்றியிருந்தால், எவ்விதத் துன்பமும் கவலையுமின்றி வாழ்ந்திருக்கலாம். ஆற்றொழுக்குப் போலக் கொண்டு சென்றிருக்க வேண்டிய தமது வாழ்வினைத், தாம் கொண்ட புரட்சிக் கருத்துகள் காரணமாகக் காட்டாறாக மாற்றிக் கொண்டார். அதன் மூலம் தம்மைத் தொடர்ந்து வருகின்ற இளைய பாரத சமுதாயத்திற்குப் புதுப் பாதையினைக் காட்டினார்.

‘‘அஞ்சாமை திராவிடர் உடமையடா’’ எனப் பட்டுக்கோட்டையார் பாடுவதற்கு வழிவகுத்துக் கொடுத்தவர் பாரதி என்றால் மிகையன்று. அஞ்சாமை எனும் பண்பு தமிழரின் குருதியில் ஊறிய பெரும் பண்பு.

‘‘கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே – வானொடு

முன் தோன்றிய மூத்த குடி’’ எனப் புகழப்பெறுவது தமிழ்க்குடி. அரசன் முறையின்றி மக்களுக்கு வரி விதிக்கும் போது, அதனைச் சுட்டிக் காட்டி, அதனால் வரும் கேடுகளை எடுத்துக் காட்டி நெறிப்படுத்திய பிசிராந்தையார் எனும் புலவரின் பாடலைப் புறநானூற்றில் காண முடியும். ‘‘எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே’’ எனவும் ‘‘மன்னவனும் நீயோ வளநாடும் உனதோ?’’ எனவும் மன்னர்களைக்கூட எதிர்த்துப் பேசும் அஞ்சாமையை நம் புலவர்களிடத்தில் காண்கின்றோம்.

‘‘நாமார்க்கும் குடியல்லோம், நமனை யஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலை இல்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்
இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை’’

(அப்பர் தேவாரம் 6:98)

என மன்னனை நோக்கிஅ அஞ்சாமல் அறைகூவல் விடும் துணிவு திருநாவுக்கரசர் எனும் துறவியிடம் இருந்தது. தமது கொள்கையில் கொண்ட உறுதிப்பாடு காரணமாக, எந்தவொரு எதிர்ப்பு வந்தாலும், அஞ்சாத, ஒரு முற்போக்கான, மேம்பட்ட மனநிலையை அவர் வெளிக்காட்டுகின்றார். ‘‘தாமார்க்கும் குடியல்லாத் தன்மையான சங்கரனுக்கன்றிச் சாதாரண மனித வேந்தனுக்கு நாம் அடிபணிவதில்லை’’ என்னும் அவரது மன உறுதியும் அஞ்சாமையும் இன்றளவும் ஏற்கப்படத் தக்கவை. புவியாளும் மன்னன் மட்டுமா, தென்திசையாளும் இயமன் கூடத் திருநாவுக்கரசரின் அஞ்சாமைச் சிந்தனையின் முன்னால் வலிவிழந்து போகின்றான். இத்தகைய புலவர்களின் வழித்தோன்றலான பாரதி, ‘அஞ்சாமை’ கொண்டிருப்பதில் அக்கினிக் குன்றாகவே தெரிகின்றார்.

தமது வாழ்க்கை முழுக்க அவர் கொண்டிருந்த இப்பண்பு, அவரது பாடல்களிலும் உரைநடையிலும் தெற்றெனத் தெரிவதைக் கற்றால் உணரலாம்.

‘‘அச்சமில்லை அச்சமில்லை’’ எனத் தொடங்கும் பண்டாரப் பாட்டு ஒன்றே அவருடைய மன உறுதிக்கு மிகச்சிறந்த எடுத்துக் காட்டாகும்.

‘‘இச்சகத்துளோ ரெலாம் எதிர்த்து நின்றபோதினும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே’’

எனும் பாடலடிகள் சிந்தித்துச் சிந்தித்துப் போற்றுதற்குரியன.

அவருடைய வாழ்க்கை அமைதியான ஒன்று இல்லை. பல்வேறு இன்னல்கள் அவரைத் தொடர்ந்து வந்த வண்ணம் இருந்தன. பெற்றோரின் மறைவு, காசி வாசம், பொருளாதாரச் சிக்கல்கள், சொந்த இன எதிர்ப்பு, வறுமை என்பனவற்றோடு அரசு எதிர்ப்பு என்னும் நெருப்பு வளையங்களுக்கு உள்ளாகவேதான் அவர் தமது வாழ்க்கைச் சக்கரத்தைச் சுழற்றி வந்தார். சாதாரண மனிதராயின் இத்துணை இடர்ப்பாடுகளில் சிக்கிச் சிதைந்து போயிருப்பர். ஆனால் பாரதியின் அஞ்சாமையும் துணிவும் அவரை, ஒளிவீசும் போர்வாளாகவே மிளிரச் செய்தன. எனவேதான்

‘‘இச்சைகொண்ட பொருளெலாம் இழந்துவிட்ட போதினும்
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே’’

என அவரால் பாட முடிந்தது: பயமெனும் பேய்தனை அடித்து ஜெயபேரிகை கொட்ட முடிந்தது''.

வாய்ப்புக் கிடைத்த இடங்களிலெல்லாம் அஞ்சாமைப் பண்பினை எடுத்துரைக்கின்றார் பாரதி.

''ஆசையைக் கொல்வோம் - புலை
அச்சத்தைக் கொன்று பொசுக்கிடுவோம்''

(ஞானப்பாடல்கள் - பக்தி)

என அச்சத்தை இகழ்ந்து பேசுகின்ற'' (குறள் 1075) எனும் வள்ளுவர் வாக்கினுக்கு அரண் செய்வது போல அமைவது பாரதியின் இப்பாடலடியாகும்.

அவருடைய புதிய ஆத்தி சூடியில்தான் எத்தனை எத்தனை கருத்துகள் அஞ்சாமை குறித்து! முதல் அடியே 'அச்சம் தவிர்' என்றே தொடங்குகின்றது. தொடர்ந்து ''கீழோர்க்கு அஞ்சேல், கேட்டிலும் துணிந்து நில், கொடுமையை எதிர்த்து நில், சவதற்கு அஞ்சேல், சுமையினுக்கு இளைத்திடேல், செய்வது துணிந்து செய், தீயோர்க்கு அஞ்சேல், தொன்மைக்கு அஞ்சேல், பேய்களுக்கு அஞ்சேல்'' எனப் பலவாறாக அவர் கூறிச்செல்வதைக் காண முடிகின்றது, அதனோடே

''பாதகம் செய்பவரைக் கண்டால் - நாம்
பயங்கொள்ள லாகாது பாப்பா
மோதி மிதித்துவிடு பாப்பா – அவர்
முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பா''

எனப் பாப்பாவுக்கு அவர் கூறுவதிலும் மேற்கூறிய கருத்துகள் தொனிப்பதை உணரலாம். தொன்மைக் காலந்தொட்டுப் பெண்களுக்குரிய குணங்களாகக் கூறப்படும் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்பனவற்றை இகழ்கின்றார் அவர்.

''நானும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்''

அவர் காணும் புதுமைப்பெண்

''நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்
திமிர்ந்த ஞானச் செருக்கும்...... கொண்டவள்.

பாரத ஜனங்களின் தற்கால நிலைமை குறித்துக் கூறும்போது மக்களின் அச்சநிலையைக் கண்டு அடையும் வேதனையைப் பதிவு செய்கின்றார் பாரதி,

''நெஞ்சு பொறுக்கு திலையே - இந்த
நிலைகெட்ட மனிதரை நினைத்து விட்டால்

அஞ்சி யஞ்சிச் சாவார் - இவர்
        அஞ்சாத பொருளில்லை அவனியிலே
சிப்பாயைக் கண்டு அஞ்சுவார் - ஊர்ச்
        சேவகன் வருதல் கண்டு மனம் பதைப்பார்
அப்பால் எவனோ செல்வான் - அவன்
        ஆடையைக் கண்டு பயந்தெழுந்து நிற்பார்''

அது போன்றே நடிப்புச் சுதேசிகளைக் கண்டு ஆற்றாமை கொள்ளும் போதும்?

''அச்சமும் பேடிமையும் அடிமைச் சிறுமதியும்
        உச்சத்திற் கொண்டாரடீ – கிளியே
ஊமைச் சனங்களடீ

என அவர்களின் அச்ச மனநிலையைச் சுட்டுகின்றார்.

அஞ்சாமை என்பது பாரதியின் உயிரிலும் ஊனிலும் ஊறியது என்பதற்கு எடுத்துக் காட்டாய் அவரது வாழ்வியல் நிகழ்வுகள் பல அமைந்திருந்தன.

ஒருமுறை திருவனந்தபுரம் மிருகக் காட்சிச் சாலைக்கு சென்ற பாரதி, அங்கிருந்த சிங்கத்தைத் தொட்டுத் தடவிக் கொடுத்தாராம். அது மட்டுமன்றி, ''சிங்கராஜா, உன்னைக் காணக் கவிராஜன் பாரதி வந்திருக்கிறேன. என் வரவை அங்கீகரிக்கும் வகையில் கர்ஜனை புரி'' என்றாராம். சிங்கமும் அவரது கூற்றை ஆமோதிக்கும் வகையில் மும்முறை கர்ஜித்ததாம். அவரது வாழ்நாளின் இறுதி நாட்களில் திருவல்லிக்கேணி யானையின் அருகில் சென்று பழம் கொடுத்ததும் ஒரு சான்றாகும்.

பாரதியின் உரைநடையின் 'தைரியம்' என்றொரு பகுதி உண்டு. அதனைப் படித்தால் பாரதியின் அஞ்சாமை உணர்வு எத்தகையது என உணர முடியும்.

''துணிவுள்ளவனையே அறிவுள்ளவனென்பதாக நமது முன்னோர்கள் மதிக்கிறார்கள். எடுத்ததற்கெல்லாம் அஞ்சும் இயல்புடைய கோழையொருவன் தன்னைப் பல சாஸ்திரங்கள் கற்றவன் என்றும் அறிவாளியென்றும் சொல்வானானால் அவனை நம்பாதே! அவன் முகத்தை நோக்கிக் காறியுமிழ்ந்து விட்டு, அவனிடம் பின்வருமாறு சொல்:-….. 'அச்சம் இருக்கும்பரை நீ அறிவாளியாக மாட்டாய். அஞ்சாமைக்கும் அறிவுக்கும் நமது முன்னோர்கள் ஒரே சொல்லை உபயோகப் படுத்தியிருக்கிறார்கள். அதை நீ கேள்விப் பட்டதில்லை போலும்'

ஆம்! அச்சமே மடமை. அச்சமில்லாமையே அறிவு…. விபத்துகள் வரும்போது, எவன் உள்ளம் நடுங்காமல் துணிவுடன் அவற்றையெல்லாம் போக்க முயற்சி செய்கிறானோ, அவனே ஞானி. ….. பாரத வாசிகளாகிய நாம் இப்போது புனருத்தாரணம் பெறுவதற்குக் கல்வி

வேண்டும் என்று சிலர் சொல்லுகிறார்கள். நாம் 'துணிவு வேண்டும்' என்கிறோம். துணிவே தாய்; அதிலிருந்துதான் கல்வி முதலிய மற்றெல்லா நன்மைகளும் பிறக்கின்றன.''

தமது ஆழ்ந்த சமற்கிருத மொழியறிவைக் கொண்டு 'தைரியம்' என்ற சொல்லுக்கு அறிவுடைமையென்றும் துணிவுடைமையென்றும் இருவிதப் பொருள் உள்ளததைக் காண்கின்றார் பாரதியார். எனவே துணிவுடைமையே அறிவுடைமை எனத் துணிந்து அவரால் கூறமுடிகின்றது. துணிவுடைய வீரர் பலரையும் அறிஞர் பலரையும் அவர் வியந்து பாராட்டுகின்றார். முகமது நபியைப் பற்றிக் கூறுகையில், ''கலங்காத நெஞ்சுடைய ஞானதீரமும் அழியாத நம்பிக்கையும் அவரிடத்தேயிருந்தன. ஆதலால் அவருக்கு

எடுத்த காரியம் யாவினும் வெற்றி
எங்கும் வெற்றி எதிலும் வெற்றி'' என்கின்றார்.

இக்கருத்தினையே பாடலாகவும் பாடுகின்றார் பாரதி.

''நெஞ்சிற் கவலை நிதமும் பயிராக்கி
அஞ்சி உயிர் வாழ்தல் அறியாமை – தஞ்சமென
வையமெலாங் காக்கு மகாசக்தி நல்லருளை
ஐயமறப் பற்றல் அறிவு''

ஒளிபடைத்த கண்ணோடும் உறுதி கொண்ட நெஞ்சோடும் இளையபாரதம் எழுந்து வர வேண்டும் என விரும்பினார் அவர். எனவேதான்,

''வலிமையற்ற தோளினாய் போ போ போ
மார்பிலே ஒடுங்கினாய் போ போ போ
- - - - - - - - - - - - - - - - - -
கிலிபிடித்த நெஞ்சினாய் போ போ போ
- - - - - - -
நன்று கூறில் அஞ்சுவாய் போ போ போ''

என்று போகின்ற பாரதத்தைச் சபிக்கின்றார். அவனியில் எல்லாப் பொருளுக்கும் அஞ்சி அஞ்சிச் சாகின்ற மனிதரைப் பார்த்து நெஞ்சு பொறுக்காமல் பாடுகின்றார். தாமோ, காலனுக்கும் அஞ்சாமல் நிற்கின்ற நிலையினை உரக்க எடுத்துரைக்கின்றார்.

''காலா உனைநான்சிறு புல்லென மதிக்கிறேன் - என்றன்
காலருகே வாடா சற்றே உனை மிதிக்கிறேன்

என்று மிரட்டுவதோடல்லாமல், புராணத்தில் காணும் காலனின் தோல்விகளை ஏளனம் செய்து, தம் மனத்துணிவையும் காட்டுகின்றார்.

தன்னுடைய வறுமையைப் போக்காத பராசக்தியைப் பார்த்து, ''இவ்விதம் நீடித்தால் நான் நாத்திகனாகி விடுவேன்'' என்று கூறும் துணிவும், ''தனியொருவனுக்கு உணவிலையெனில் ஜகத்தினை அழித்திடுவேன்'' என்றும் ஆவேசக்கூற்றும் பாரதி என்னும் மகாகவியின் அஞ்சாமைப் பண்பினைத் தெற்றெனக் காட்டுவன அன்றோ?

**துணை நூல்கள்:-**


1. பாரதியார் கவிதைகள்
2. பாரதியார் கட்டுரைகள்
3. பாரதி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள் - கங்கா ராமமூர்த்தி
4. பாரதியும் புரட்சி இயக்கமும் - தொ.மு.சி.ரகுநாதன்
5. பாரதி தமிழ் - பெ.தூரன்



**Course Material Prepared by**
**Dr. S. SIVASANKAR**
Associate Professor & Head, Department of Tamil
Thiruvalluvar College, Papanasam.